Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 18.00

දිනමුරසු වාරමලර් செப் 15 - 21, 2005

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 631

## மஹிந்த - ஜே.வி.பி. உடன்பாடும் வட - கிழக்கின் நிலைப்பாடும்



## புலிகளாக்கப்பட்ட மக்களின் புகலிடம் எது?



-எக்ஸ்ரே

## பிராந்திய வல்லரசுகளின் ராஜிய உறவுகள்

-அலசல்

## மொட்டை அடிக்கத் தயார் -பூஜா

பிரசாந்துக்கு வாசகர்களின் வாழ்த்துக்கள்!

## எல்லாம் இன்ப மயம்

இக்கால கட்டத்தில் அசலுக்கும், நகலுக்கும் வித்தியாசம் கண்டுகொள்ள முடியாத நிலையில் மனித சமுதாயம் தள்ளாடித் தவிக்கின்ற பரிதாப நிலை தோன்றியுள்ளதை மறுப்பதற்கில்லை.

போலி வேடமிட்ட காவிச் சாமிமார்கள் பலர் கைகாதியுள்ளமையும், கலப்படத் தயாரிப்புக்கள் அசலையே விஞ்சும்படி 'அச்சா'வாகி விற்பனையாவதையும், உண்மையைக் குழி தோண்டிப் புதைத்து பொய்மையை வெளியில் உலா வர விட்டிருப்பதையும் வெளியுலகம் கண்டும் அனுபவித்துந்தான் வருகின்றது.

இதற்கெல்லாம் இறை பயம் இல்லாமையே காரணம். கொலை, களவு, கள், காமம் குருநிந்தை இவை இன்று எங்கும் சர்வ சாதாரணமாக நடக்கும் சம்பவங்களாகும்.

செய்ய முடியாததைச் சொல்லி மக்களை ஏமாற்றுவது, விலைவாசி உயர்வை குறைக்க முடியாமல் மேலும் வாழ்க்கைச் சுமையை ஏற்றுவது, விசாரணைக் கமிஷன் என்று காலத்தை வீணடிப்பது, விதண்டாவாதக் கருத்துக்களை விதைப்பது, மனித தர்மத்தை நேசிக்காதது, மக்கள் சக்திக்கு மதிப்பளிக்காதது - இவையெல்லாம் இன்று எங்கும் நடக்கும் நிகழ்வுகள்.

மதங்கள் கூறும் புனிதத் தன்மைக்கு மதிப்பளித்து, மனித நேயம் வளர ஆன்மீகக் கல்வியை ஆனமட்டும் கற்று, சமாதான சக வாழ்வுக்கு அனைவரும் சங்கல்பம் செய்வோமானால் எல்லாம் இன்பமயமாகும்.

-சிவஸ்ரீ அ.அரசரெத்தினம், சேனையூர்- 06.

# ஆன்மீகம்



## உன் அயலவன்

என்னுடைய அயலவன் யார்? இக் கேள்வியை நீங்கள் இன்றும் கேட்கக்கூடும். கிறிஸ்துவிடமும் இதே கேள்வி கேட்கப்பட்டது. நீங்கள் அயலவனாக பக்கத்து வீட்டுக்காரனை நினைக்கக்கூடும். அப்படியல்ல. அதில் ஓர் ஆழமான கருத்து அடங்கியுள்ளது.

யார் ஆபத்திலும் "துன்ப துயரத்திலும் சூழப்பட்டிருக்கின்றானோ அவனே அயலவன் என பரிசுத்த வேதாகமம் வலியுறுத்துகின்றது. இந்நாட்களின் இனம், மதம், சாதி, பால், நிறம், பிரதேசம், நாடு என்ற எல்லைகளைக் கடந்து யார் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகின்றானோ அவனே அயலவன். ஆபத்தில்" துன்பத்தில் சிக்கி தவிப்பவனுக்கு நீ உதவ வேண்டும். இதைத்தான் நம் ஆண்டவர் "உன்னைப் போல் உன் அயலானையும் நேசிப்பாயாக" எனக் கூறியுள்ளார்.

வாடிய பயிரைக் கண்டபோது மனம் வாடுதல் அல்ல. பதிலாக வாடிய பயிருக்கு நீர் ஊற்றுவதுதான் அன்புச்செயல். இதையே நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து "நல்ல சமாரியன்" உவமை ஊடாக அயலவனை அடையாளம் காட்டியுள்ளார்.

-எஸ்.ஜீவானந்தம், நல்லூர்.


## உருவங்கள் பற்றிய சட்டம்

ஆயிஷா (ரழி) அவர்கள் ஒரு தலையணை வாங்கினார்கள். அதில் உருவப்படங்கள் இருந்தன. அதைப் பார்த்ததும் நபி(ஸல்) அவர்கள் வீட்டிற்குள் வராமல் வாசலிலேயே நின்றுவிட்டனர். அவர்கள் முகத்தில் வெறுப்பு தென்பட்டதைப் பார்த்து ஆயிஷா (ரழி) அவர்கள் அல்லாஹ்வின் தூதரே! நான் செய்த பாவம் என்ன?" என்று கேட்க, அதற்கு அவர்கள் "இது என்ன தலையணை?" எனக் கேட்கவும், "நீங்கள் தலையணையாக வைத்துக் கொள்வதற்காக வாங்கினேன்" என ஆயிஷா (ரழி) கூறினார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள் இந்த "உருவங்களைத் தீட்டியவர்கள் மறுமையில் வேதனை செய்யப்படுவார்கள். நீங்கள் படைத்தவற்றிற்கு உயிர் கொடுங்கள் என அவர்களிடம் கூறப்படும்" என்று கூறிவிட்டு உருவப்படங்கள் இருக்கின்ற வீட்டில் வானவர்கள் நுழைய மாட்டார்கள் எனவும் கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஆயிஷா (ரழி) நூல்: புஹாரி (5961) முஸ்லிம்.

-மு.பா.பாத்திமா பர்னாஸ், மூதூர் - 01.

## கவிதைப் போட்டி இல.628



பரிசுக்குரிய கவிதை

### உனக்கு நீயே...!

ஏக தலைவா!!
உனக்கு நீயே
சவப்பெட்டி தயார் படுத்த
முனைந்தனையோ?

யாழ் மகன்.

# கவிதைப் போட்டி இல.631



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 21.09.2005.

கவிதைப் போட்டி இல.631
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### சவப்பெட்டியில் நீதிதேவன்

கோழைகள் திரியும் உலகு!
கொலைகள் மலிந்த உலகு!
நியாயம் தெரியா உலகு!
உண்மைதனை ஏற்கா உலகு!
நியாயம் உரைத்தவனை
கொல்லும் உலகு!
அதனால் நீதிதேவன் ஓடி
ஒளிகிறான்
சவப்பெட்டியில்.

-சா.சுமித்திரை, வவுனியா.

### சவப் பெட்டி

அப்பா இனவெறியால் படுகொலை...!
அம்மா இயற்கை அனர்த்தத்தால்
மரணம்....!
என் நிலையோ பரிதாபம்
அதனால் எனக்கு நானே
சவப்பெட்டி......!

-ஏ.எஸ்.ஐ.தஸ்னீம், நிலாவெளி - 01.

### அகதியின் ஆசை

கியூ வரிசையில் இருந்து
தனக்கு 'சவப்பெட்டி'
வாங்கும் சிரமத்தை
போக்கிட......
தனக்குத் தானே
சவப்பெட்டி
தயாரிக்கின்றார் போல்!

-த.ஜெசிக்கா, யாழ்ப்பாணம்.

### நிஜம்!

பணப் பெட்டி நிறையப்
பணம் சேர்த்தாய்!
ஆனதென்ன? -
இறுதியில்
பிணப் பெட்டிக்குள்
நீயே!
பிரேதமாகிப்
போனாயே!!

-மீராமுகைதீன் - ஹாலீத், ஏறாவூர் - 03ஏ.

### ஒரு நாள்

உண்மையை.....
நேர்மையை...
விடுதலையை....
ஜனநாயகத்தை....
யாரும் -
அழிக்க
அடக்க
முடியாது!
இப்படித்தான்
ஒருநாள்
உடைத்து
வெளியே
வரும்!

-செல்வி நதுர்ஷிகா நாகேந்திரன், ஆரையம்பதி - 03.

### இனி.....

ஜனநாயகத்திற்கு சாவுமணி
அடித்தாயிற்று - திறந்து
கொண்டு வர முயற்சிக்கும்
மனிதத்தையும் அடித்துக் கொன்று
பெட்டியை மூடி கிடங்கில்
தள்ளுவதுதான் பாக்கி.

-றெ.பி.மரியடினேசன், மன்னார்.

### மனிதம்

ஆசைகளும்
அராஜகங்களும்
அட்டூழியங்களும்
அகிலத்தை ஆள
ஆத்மாவைத் தேடிய
மனிதம் - இங்கு
மரணிக்கத்
துடிக்கிறதோ?

-இரா.இராமகிருஷ்ணன், பொகவந்தலாவை.

### புதையும் மனிதம்

மனிதம்
உண்டு உயிர்த்து
தீர்ந்தாயிற்று - இனி
இப்படித்தான்
தனக்கான சவக்குழிக்குள்
தானே புதைந்து
கொள்ள வேண்டும்.

-சிவனு மனோஹரன், ஹட்டன்.

### நடப்பு

நீதி தவறி
ரவை துப்புவோர்
தம் பிரேதப் பெட்டியைத்
தாமே மூடுவர்.
நாம் இதை
வாய் திறந்து
சொன்னால்
நம் பெட்டியை
நாமே மூடுவோம்.

-சீ.தங்கவடிவேல், மட்டக்களப்பு.

### மனித மரணம்

கொடூர கொடும் பாவிகளின்
கொலைக்கஞ்சி
தாமாகவே மனிதம்,
மரணிக்க எத்தனிக்கிறது.

-எம்.ஏ.எம்.றிபாஸ், கதுருவெல.

### இவன்தான் மனிதன்

இவன்
இருக்கும்போதும்
பிறருக்குத் தொல்லை இல்லை.
இறக்கும் போதும்
பிறருக்குத் தொல்லை இல்லை.

-ஏ.ஜே.பாத்திமா பஸ்னா, மல்வானை.



# உங்கள் பக்கம்

## '155' இந்த நூற்றாண்டில் திருந்துமா?

காலம் பொன்னானது. ஒவ்வொரு மணித் துளியும் விலை மதிப்பில்லாதது. இவ்விடயமெல்லாம் கொழும்பில் சில தனியார் பஸ்களின் சாரதிகளுக்கும் நடத்துநர்களுக்கும் தெரியப்போவதில்லை என்பது தெரிந்த விடயம்தான். ஆனால் இவற்றிற்கு சிகரம் வைத்தாற்போல செயற்படுவதுதான் 155 ஆம் இலக்க பஸ் சேவை. தலை போகும் அவசரத்தில் நாம் நெருப்பின் மீது அமர்ந்திருப்போம். ஆனால் அவர்களோ வெகு கூலாக பஸ்ஸை நிறுத்திவிட்டு வெற்றிலை வாங்கிக் குதப்பி, சிகரட் குடித்துக்கொண்டிருப்பார்கள்.

ஆரம்பத்தில் பயணிகளின் புறுபுறுப்போடு பஸ் ஸ்ராட் ஆகிவிட்டால், தெஹிவளை சந்திவரை சில்லு பறந்து விடுமோ என நாம் அஞ்சும் அளவிற்கு வேகமோ வேகம். அதன் பிறகுதான் சுயரூபம் காட்டத்தொடங்கும். வெள்ளவத்தையி லிருந்து பஸ் நடத்துநர் அது போகுமிடங்களைச் சத்தமாகக் கத்தி சொல்ல, பஸ்ஸை கிளப்பவே மாட்டேன் என கங்கணம் கட்டிக்கொண்டு ஸ்டியரிங்கில் முகம் புதைத்து படுத்துக்கொண்டி ருப்பார் ட்ரைவர்.

இதிலே தொடங்கும் தரிப்பு, வெள்ளவத்தை பொலிஸ் நிலையம், பம்பலப்பிட்டி தொடர்மாடி, யுனிட்டி பிளாஸா, பம்பலப்பிட்டிச் சந்தி, டவுண் ஹோல், ஹைட்பாக் கோணர், மருதானை, ஆமர்வீதி என குறைந்தது 10 இடங்களிலாவது தொடரும். ஒவ்வொரு தரிப்பிலும் சராசரியாக 4 நிமிடங்கள் விரயமானாலும் ஏறக்குறைய 3/4 மணித்தியாலத்தை விழுங்கிக் கொள்கின்றார்கள்.

பஸ்ஸினுள் இருப்பவர்கள் எதிர்த்து கேள்வியோ அல்லது நியாயமோ கேட்க முடியாது என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை. வேறு என்ன செய்வது வியர்த்து, அவிந்து, புழுங்கி (மனதினுள் புழுங்குதல் உட்பட) வாய்திறவாமல் மௌன விரதம் இருக்க வேண்டியதுதான்.

இந்நிலை நீடித்தால் தொடர்ச்சியாக 155 பஸ்களில் பயணம் செய்வோர் காலப்போக்கில் மனநோயாளிகளாக மாறும் அபாயம் ஏற்படும். இதைத் தடுக்க யாராவது முன்வருவார்களா? இதை வேடிக்கைக்காகக் கேட்கவில்லை. பல வருடங்களாகத் தொடரும் இச்சீர்கேட்டினை பலர் சுட்டிக் காட்டியும் கவனத்தில் எடுக்காத சம்பந்தப்பட்டோர் இனியாகிலும் தயவு செய்து நடவடிக்கை எடுப்பார்களா?

-தர்ஷினி, மட்டக்குளி.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):- 011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk


# வாசகர் சாலை

### தித்திக்கும் தினமுரசே

நீ எத்திக்கும்
பரந்துசென்று எங்கள் உள்ளத்தில்
உருக்கொண்டும் ஊமை
விழிகளாய் அலையவிடும்
எங்கள் உள்ளத்தின்
உணர்வுகளுக்கு
உருக்கொடுத்து வார்த்தைகளால்
வாழவைக்கும் உன் வரிகள்
அனைத்தும்
உன்னதத்திலும் உன்னதம்
உயிருள்ளவரை
எம் உள்ளத்தில் உனக்கே
முதலிடம்.

-சோ.சிவகுமார், உடப்பு.

### அன்பின் முரசுக்கு!

வியாழன் தோறும் வெளிவரும் உனை வாசிக்க யாவரும் கூடுகின்றோமே; சிறியோர் முதல் பெரியோர் வரை - படித்தவர் முதல் பாமரர் வரை எதிர்பார்க்கப்படும் அனைத்து விடயங்களையும் சுமந்து வரும், உனை மனதார வாழ்த்தும்:

-பிரியா, சபி, ரஞ்சனி, கொழும்பு - 05.

### புவியில் பூரிப்பு

28ஆவது முரசின் கடைசிப் பக்கத்தில் பதியப்பட்ட படத்தைக் கண்டு புவியில் பூரிப்படையாதோர் உண்டோ? ஆம் மக்காவில் உள்ள மனம் கவர் கஃபாவின் தோற்றத்தைப் புனித ஸ்தல வரிசையில் புகழ் பாடிய முரசுக்கு பாராட்டுக்கள்.

-எம்.சி.கலீல், கல்முனை - 05.

### எனது வீர முரசே!

நீ செய்திகளையும்,
ஆய்வுகளையும் சூடாகத்
தருவதில் படு சூரன். எந்த
அளவிற்கு உண்மைகளை
வெளிப்படுத்த முடியுமோ
அந்த அளவிற்கு
உண்மைகளை
வெளிப்படுத்தும் தைரியசாலி.
தொடர்ந்தும் நீ வீறு
நடை போட வாழ்த்தும்.

-சுகந்தன், பாலையூற்று.

# ஜே.வி.பி.யின் இனவாதமும் தமிழ் கூட்டமைப்பின் பிணவாதமும்

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ வடக்கு - கிழக்கோடு சம்பந்தப்பட்ட சுனாமிக் கட்டமைப்பு, ஒற்றையாட்சியின் கீழ் இனப்பிரச்சினைக்குத் தீர்வு போன்ற விடயங்களில் ஜே.வி.பி.யோடு உடன்பட்டதானது சிங்களப் பேரினவாதி களுக்கு அடிபணிந்து போய்விட்டாரென்று தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தெரிவித் திருந்தனர். ஆனால், சுதந்திரக்கட்சியின் தலைவியும் ஜனாதிபதியுமான சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா சுனாமிக் கட்டமைப்பையும் அதிகாரப் பகிர்வையும் விட்டுக் கொடுக்க முடியாதென வலியுறுத்திப் பேசுகையில் தமது தாளங்களை மாற்றி மஹிந்த - சந்திரிகா அதிகாரப் போட்டி யென்று கதையளப்பதேன்?" என்று கேள்வியெழுப்புகிறார் அரசியல் விமர்சகர் மணிவண்ணன். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் பங்காளிக் கட்சியான ஜே.வி.பி.க்கும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்குமிடையில் இந்த இரு முக்கிய பிரச்சினைகளில்தான் முரண்பாடுகள் நிலவி வந்தன. இவற்றின் காரணத்தால் தான் "ஜே.வி.பி. ஆளுந்தரப்பை விட்டு வெளியேறி இருந்தது. ஆனால் என்றுமே ஐ.தே.க. அதிகாரத்துக்கு வர அனுமதிக்க மாட்டோமென்று ஜே.வி.பி கூறி வந்தது. அதாவது வெளியிலிருந்தே ஐ.தே.க. எதிர்ப்புச் சக்திகளுக்கு ஆதரவளிப்போ மென்ற நிலைப்பாட்டையே ஜே.வி.பி. எடுத்திருந்தது. பிரதமருக்கும் ஜே.வி.பி.க்கு மிடையிலான தந்திரோபாய நடவடிக்கை யாகவே இதனைக் கருத வேண்டியிருக் கிறது" என்றும் மணிவண்ணன் கூறினார். பழுத்த அரசியல்வாதியும் மனித உரிமைப் போராளியாகத் திகழ்ந்தவருமான பிரதமருக்கு ஒற்றையாட்சியின் கீழ் கட்சியதி காரங்களைப் பகிர்ந்து கொள்ள முடியா தென்பது தெரியாததல்ல. அதேபோன்று சுனாமிக் கட்டமைப்பினால்தான் ஆளுந்தரப் பிலிருந்து ஜே.வி.பி. வெளியேறியது என்பது புரியாததொன்றல்ல.

இந்த இரு விடயங்களிலும் சுதந்திரக் கட்சியின் அடிப்படை நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. சுதந்திரக் கட்சிதான் முக்கிய பங்காளிக் கட்சி என்பதால் தலையை ஆட்டுவதற்கு வால் களால் முடியாதென்பதைக் கூட்டமைப்பினர் புரிந்து கொள்ள வேண்டுமென்றும் சொன்னார்.

ஆயுதமேந்திப் போராடிய காலத்தி லிருந்து இன்றுவரை இனவெறிச் செயற்பாட்டின் மூலம் ஒரு தமிழனையோ ஒரு முஸ்லிமையோ ஜே.வி.பி கொன்றதில்லை. அவர்களின் கொள்கையை வைத்துக்கொண்டு இனவாதிகளென்று தமிழ் தேசியக் கூட்டமைப்பினரால் குற்றஞ்சாட்ட முடியுமென்றால், பல்லாயிரக்கணக்கான சிங்கள, முஸ்லிம் மக்களை பச்சை பச்சையாகக் கொன்று குவித்த புலிகள் மட்டும் இனவெறியர்களாகாமல் போனது எப்படி? என்றும் அவர் கேள்வி எழுப்பினார். இப்படிச் சொல்வதால் ஜே.வி.பி. தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளக் கூடாதென்று கூறவில்லை. ஒற்றையாட் சிக்குப் பதிலாக ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு என்ற பதத்தை ஜே.வி.பி. உபயோகிக்க வேண்டுமென்றும் அவர் கூறினார்.



ஐந்தாவது உலக சேக்கிழார் மாநாட்டில் கலந்துகொள்ள இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த சைவப் பேறிஞர்களுக்கும் கலைஞர்களுக்கும் சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ கடந்த 10ஆம் திகதி சனிக்கிழமை தனது வாசஸ்தலமான அலரிமாளிகையில் இரவு விருந்துபசாரமளித்துக் கௌரவித்தபோது பிடிக்கப்பட்ட படங்கள். தமிழகத்தின் தொண்டை மண்டல ஆதீனத் தலைவர் பிரதமருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் தமிழக அதிகாரியொருவர் பிரதமருக்கு நூற் பிரதியைக் கையளிப்பதையும் இந்து சமய விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையும் படங்களில் காணலாம்.

## தேர்தல் பிரசாரத்துக்கு இரண்டு கோடி ரூபா?

சுவர்ணவாஹினி ஊடக நிறுவனம் ஐ.தே.க.வின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்காவின் தேர்தல் வேலை களுக்கென இரண்டு கோடி ரூபாவை வழங்கியுள்ளதாகச்" செய்திகள் தெரிவிக் கின்றன. ஐ.தே.க.வின் தலைமையகமான ஸ்ரீ கோத்தாவில் இந்த நிதிக் கையளிப்பு வைபவம் கடந்த ஏழாம் திகதி நிகழ்ந்தது. ஐ.தே.க. முக்கியஸ்தரான மலிக் சமரவிக் கிரமவிடம் சுவர்ணவாஹினி நிறுவனத்தின் பங்குதாரர்களிலொருவரான செல்வநாயகம் என்பவரால் இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது. திருமதி சோமா எதிரிசிங்கவின் தலைமையின் கீழான ஈ.ஏ.பி.ஊடக நிறுவனம் சுவர்ண வாஹினி தொலைக்காட்சி சேவையோடு சிறி எப்.எம். வானொலிச் சேவையையும் நடத்துவது குறிப்பிடத்தக்கது. திருமதி சோமா எதிரிசிங்கவே இந்த நிதியுதவியை வழங்கியதாகவும் கூறப்படுகிறது.

## ஒப்பந்தம் அவர்களுடையது; நிர்ப்பந்திப்பதே எமது வேலை

### -அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

"ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, மத்தியில் கூட்டாட்சி - மாநிலத்தில் சுயாட்சி; என்றும் பிரிக்க முடியாத வடக்கு - கிழக்கு இணைப்பென்ற தனது மூலாதாரக் கொள்கையிலிருந்து என்றுமே விலகிப் போகாது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசில் அங்கம் வகிக்கும் ஒரு பங்காளிக் கட்சியென்ற அடிப்படையிலேயே நாம் பிரதமருக்கும் ஜே.வி.பி.க்குமிடையிலான உடன்பாட்டையொட்டிய வைபவத்தில் கலந்து கொண்டோம்" என்று அமைச்சரும் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமுமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

சுனாமிக் கட்டமைப்பு மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பான எமது கொள்கை களுக்கும் ஜே.வி.பி.யின் கொள்கைக்கு மிடையில் நிறைய வித்தியாசங்கள் உண்டு. ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வு மூலம் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டுமென்ற எமது கொள் கையை உடன்பாட்டில் சம்பந்தப்பட்ட இரு தரப்புக்கும் நாம் வலியுறுத்தினோம். தொடர்ந்தும் வலியுறுத்தி வருவோம். எமது வலியுறுத்தலைப் பிரதிபலித்த ஜனாதிபதிக்கு நாம் எமது நன்றியைத் தெரிவித்துள்ளோம் என்றும் கூறினார்.

## ஐ.நா.வில் தமிழீழக் குரல் அன்றும் இன்றும்

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையினர் அறுபதாவது கூட்டத்தொடரில் தமிழீழப் பிரச்சினையையும் யுத்த நிறுத்தம் மற்றும் சமாதானச் செயற்பாடுகள் ஆகிய வற்றையும் கையாள்வதற்கு ஐ.நா.உட்பட சர்வதேச சமூகத்தின் உதவியை ஜனாதிபதி கோருவாரென்று ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. 1978ஆம் ஆண்டு ஐ.நா.வின் 33ஆவது பொதுச்சபைக் கூட்டத்தொடரில் கிருஷ்ணா வைகுந்தவாசன் என்ற இலங்கைத் தமிழர் ஐ.நா.பொதுச் சபைக் கூட்ட மண்டபத்துக்குள் அத்துமீறிப் பிரவேசித்து தமிழீழத்துக்கு ஆதரவான கோஷங்களை எழுப்பினாரென்று லண்டனிலுள்ள சொலிசிட்டரொருவர் தெரிவித்தார். அப்போது வெளிவிவகார அமைச்சராகவிருந்த ஏ.சீ.எஸ். ஹமீதைப் பேச அழைத்தபோது திடீரென சபையி லிருந்து மேடையை நோக்கிச்சென்ற கிருஷ்ண வைகுந்தவாசன் 'தமிழீழப் பேராட்டத்தை நியாயப் படுத்தும் வகையில் பேச முனைந்தபோது ஒலிவாங்கிகள் சப்தமிழக்கச் செய்யப்பட்டன. இன்று விடுதலையின் பேரால் நடத்தப்படும் பயங்கரவாத நடவடிக்கைகளால் வரலாறு தலைகீழாக மாறி நிற்கிறதென்கிறார்' ஸ்ரீஸ்கந்தராஜா.

## கனடிய எம்.பி.யை நோக்கி ஆனந்தசங்கரி அதிரடிக் கேள்வி

"புலிகள் இயக்கம் போன்ற பயங்கரவாத அமைப்புகள் கனடாவில் ஒலிபரப்பு நிலை யங்களை நடத்தி கனடாவில் பிரசாரம் செய் வதற்கும் நிதி சேகரிப்பதற்கும் கனடா அனுமதியளிப்பதேன்?" என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வி.ஆனந்த சங்கரி கனடாவில் கடந்த வாரம் கேள்வி எழுப்பினார். முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கு அஞ்சலி செலுத்துமுகமாக நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே கனடிய நிதியமைச்சரின் பாராளுமன்றக் காரிய தரிசியும் ஸ்காபரோ - றோக்றிவர் தொகுதி எம்.பி.யுமான ஜோன் மக்கேயை நோக்கி ஆனந்தசங்கரி இக் கேள்வியை எழுப்பினார். கனடாவிலுள்ள இலங்கையர் ஐக்கிய தேசிய சங்கத்தினரால் இக் கூட்டம் ஒழுங்கு செய்யப் பட்டிருந்தது. "சமாதானத் தீர்வொன்றினைக் காண்பதில் இலங்கை படும் கஷ்டங்கள் எமக்குப் புரிகிறது. பேச்சுவார்த்தையில் சம்பந்தப்பட்ட இருதரப்புகளிலொன்று, தமது நோக்கை நிறைவேற்றுவதற்காக அரசியல் படுகொலைகளில் ஈடுபடும்போது சமாதானம் பற்றிப்பேச முடியுமா? யுத்தத்தினூடாக எத்தரப்புமே வெற்றியடையப் போவதில்லை யென்பது பலரின் கருத்தாகும். இன்னுமொரு சுற்று யுத்தம் நடந்தாலும் கூட, இறுதியில் இரு தரப்புகளுமே பேச்சுவார்த்தை மூலமான தீர்வுக்கே வரவேண்டியேற்படும்" என்று ஆனந்தசங்கரிக்கு முன்பதாக உரையாற்றிய எம்.பி. ஜோன் மக்கே கூறினார். ஒன்றாறியோ மாநிலத்தின் முன்னாள் பிரதமர் பொப் ரே உரையாற்றுகையில், "புலிகள் இயக்கம் வன்செயல் செயற்பாடுகளுடாக அரசியல் எதிரிகளை அழித்தொழிக்க முனையும்போது யுத்த நிறுத்தமும் சமாதான முயற்சிகளும் அர்த்தமற்றவை. கொலைகள் தொடர்ந்து இடம்பெறும்போது சமாதானப் பேச்சுகளை நடத்துவது மிகவும் கஷ்டமான காரியம்" என்றும் சொன்னார்.

## யார், யாரைச் சுடுகிறார்கள்?

"வடக்கு, கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசியல் பணிபுரிய வருகை தந்த புலிகள், தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குப் பின்வாங்கி விட்டதாகக் கூறிய பின்னர், புலிகளின் அரசியல் எதிர்ப்பு இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் கொல்லப்படுவதன் மர்மம் என்ன?" என்று வவுனியா பிரஜைகள் அமைப்பின் முக்கியஸ்தரொருவர் கேள்வி எழுப்புகிறார். புளொட் இயக்கத்தைச் சேர்ந்தவர்களும், கருணா அணியினரும், புலிகளால் புலனாய்வுப் பிரிவினரென வர்ணிக்கப்படுபவர்களுமே சுட்டுக்கொல்லப் பட்டிருக்கிறார்கள். புலிகள் தமது அலுவலகங்களின் பெயர்ப் பலகைகைகளை அப்புறப்படுத்தினாலும் தொடர்ந்தும் அவர்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தங்கியிருந்து ஆயுத வேலைகளில் ஈடுபடுகி றார்கள். புலிகள் அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து பின்வாங்கியதாக அறிவித்த பின்னர் சுமார் பத்துப் பேர் கொல்லப் பட்டுள்ளனரென்பது குறிப்பிடத்தக்கது.

## புதுடில்லியிலுள்ள கும்பகர்ணர்கள் உடனடியாக விழித்தெழ வேண்டும்

### -பேராசிரியர் சூரியநாராயண்

"புதுடில்லியிலுள்ள தலைவர்கள் தமது கும்பகர்ணத் தூக்கத்தைக் கைவிட வேண்டிய தருணம் வந்து விட்டது. கடற் புலிகளையும் புலிகளின் விமான அணியின ரையும் இப்போதே இந்தியா பலமிழக்கச் செய்ய வேண்டும்" என்று சென்னைப் பல்கலைக்கழகத்தில் தெற்கு மற்றும் தென்கிழக்காசியக் கற்கைகளுக்கான நிலையத்தின் முன்னாள் பணிப்பாளரான பேராசிரியர் சூரியநாராயண் தெரிவித்தார்.

இந்தியாவின் நலன்களுக்காகவே புலிகளின் இந்த இரு படையணிகளையும் இப்போதே பலமிழக்கச் செய்ய வேண்டி யுள்ளது. சக்திமிக்க கடற்படையாகக் கடற் புலிகள் உருவாகுவதானது, இந்தியாவுக்குப் பாரிய அச்சுறுத்தலாக அமையும். இப்போதுகூட ஒன்றும் தாமதமாகி விடவில்லை. காலதாமதமாவதற்கு முன்னர் இந்தியா உடனடியாகச் செயற்பட வேண்டும். புதுடில்லியிலுள்ள கும்பகர்ணர்கள் எப்போது விழித்தெழுவார்களோ தெரியாது. புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை, மிகவும் தெளிவான, பயங்கரத் திட்டமாகும். பிரபாகரனின் திட்டம் மிகத் தெளிவானது. தனிநாட்டுக் கோரிக்கையே அவரின் திட்டமாகும். அவர் ஓரடி பின்வாங்கினால், ஈரடி முன்னே பாய்பவர் என்றும் பேராசிரியர் சூரியநாரா யண் கூறினார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைக் கொன்றவர்கள் புலிகள். இவ்வாறான மிலேச்சத்தனமான செயல்களை அவர்களால் மட்டுமே செய்ய முடியும் என்றும் அவர் கூறினார்.

## புலிகளின் செயலகம் லண்டனிலிருந்து பாரிஸுக்கு

நீண்ட காலமாக லண்டனில் இயங்கி வந்த புலிகளின் சர்வதேச செயலகம் கடந்த வாரம் பாரிஸுக்கு மாற்றப்பட்டுள்ளதாக பிரான்ஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. ஜூலையில் இடம்பெற்ற லண்டன் தொடர் குண்டுவெடிப்புகளும் இதனையடுத்து வெளிநாட்டுப் பயங்கரவாத இயக் கங்கள் மீது பிரிட்டிஷ் அரசு எடுத்து வரும் கடுமையான நடவடிக்கை களுமே இதற்குக் காரணமென்று கூறப்படுகிறது. அத்துடன் புலிகளின் முகவரமைப்பான தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைப் பிரிட்டனின் தன்னார்வத் தொண்டர் நிறுவனப் பட்டியலிலிருந்து பிரிட்டன் நீக்கியமையும் இதற்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

## வடக்கு - கிழக்கில் மனிதாபிமான, அபிவிருத்திப் பணிகளுக்கு முன்னுரிமை

### -வாஷிங்டனில் கலாநிதி ஜயந்த தனபால

"புலிகளின் தவறுகளுக்காக வடக்கு, கிழக்கில் வாழும் மக்கள் தண்டிக்கப்படக் கூடாது. சமாதான முயற்சிகளில் முன் னேற்றம் ஏற்படுகிறதோ, இல்லையோ வடக்கு, கிழக்கில் மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னுரிமை அடிப்படையில் தொடர்ந்தும் மேற்கொள்ளும்" என்று இலங்கை அரசின் சமாதான செயலகத் தலைவரும் ஜனாதி பதியின் சிரேஷ்ட ஆலோசகருமான கலாநிதி ஜயந்த தனபால வாஷிங்டனில் கடந்த வாரம் உரையாற்றுகையில் தெரித்தார். 'இலங்கை யின் சமாதான முயற்சிகளில் சர்வதேச சமூகத்தின் பங்கு' என்ற தலைப்பில் காங் கிரஸ் உறுப்பினர்கள் மத்தியில் உரையாற் றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதா வது :-

புலிகளுக்கு அளிக்கப்படும் வெளிநாட் டுச் சவாரிகள் உட்படச் சகல இராஜதந்திர வசதிகளும் யுத்த நிறுத்த மீறல்களைப் புலிகள் தவிர்த்துக் கொள்வதற்கோ அல்லது அவர்கள் 2003ஆம் ஆண்டு ஏப்ரலில் விட்டுச் சென்ற சமாதான மேசைக்கு உடனடியாக திரும்புவதற்கோ அந்த இயக்கத்தின் மீது எவ்வித தாக்கத்தையும் செலுத்தவில்லை. சமாதானப் பேச்சுவார்த்தைகளின்போது அமைக்கப்பட்ட எந்தவொரு கமிட்டியும் இப்போது செயற்படவில்லை. இரு தரப்புகளும் இணைந்து கைச்சாத்திட்ட ஒஸ்லோ தீர்மானமும் முடிந்த கதையாகி விட்டது. அந்த ஒப்பந்தம் குறித்துப் பகிரங்க மாகத் தெரிவிக்க புலிகள் இயக்கம் திடமாக மறுத்து வருகிறது. கலந்துரையாடல்களை நடத்துவதன் மூலமும் அந்த இயக்கத்தோடு சேர்ந்து செயற்படுவதாலும் புலிகள் இயக்கத்தை மெதுமெதுவாக ஜனநாயக மயப்படுத்த முடியுமென்ற நம்பிக்கையில் சர்வதேச சமூகத்தால் புலிகளுக்கு வழங்கப் பட்டுவந்த ஊக்குவிப்புகளால் இனியும் பயனில்லையென்ற நிலை தோன்றியுள்ளது. புலிகளுக்கு அழுத்தம் கொடுப்பதன் மூலம் நோர்வே ஏற்பாட்டாளர் களுக்கு உதவ வேண்டிய முக்கிய கடப்பாடு சர்வதேச சமூகத்துக்கு உண்டென்று இலங்கை நம்புகிறது. புலிகளுக்கு மேலும் மேலும் வசதி, வாய்ப்புகளை வழங்கி அவர் களைத் தாஜா பண்ணும் அணுகுமுறை பயனளிக்கவில்லை. கதிர்காமரின் படுகொலையையடுத்து புலிகளுக் கெதிராகத் திட்டவட்டமான உடனடி சர்வதேச நடவடிக்கை தேவையென இலங்கை அரசாங்கம் கோரியது. இதற்காகப் புலிகள் மீது மட்டுமல்ல, இலங்கையில் பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விடுவதற்குக் காரணமாக அமையும் உலகெங்கிலுமுள்ள புலிகளின் முன்னணி அமைப்புகள் மீதும் சர்வதேச நடவடிக் கைகள் தேவையென இலங்கை அரசு வலியுறுத்தியிருந்தது. புலிகளின் தொடர்ச்சியான யுத்தநிறுத்த மீறல்களில் மிக மோசமானது கதிர்காமரின் படுகொலை யாகும். கதிர்காமரின் கொலைக்குப் பின்னர் முன்புபோல் எம்மால் செயற்பட முடியாது. எனவே நாம் யுத்த நிறுத்தம், சமாதான முயற்சி தொடர்பான கொள்கை மீளாய்வில் ஈடுபட்டுள்ளோம். அவற்றை நாம் சர்வதேச சமூகத்தோடு பகிர்ந்து கொள்வதோடு அதனை அமுல்படுத்துவதற்கும் சர்வதேச ஒத்துழைப்பைக் கோருவோம் என்றார்.

## வட்டி விகிதம் அதிகரிப்பு

உலகளாவிய ரீதியில் எண்ணெய் விலை அதிகரித்திருப்பதால் இலங்கையில் ஏற்பட்டிருக்கும் பண வீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக இவ்வருடம் மூன்றாவது தடவையாகத் தனது வட்டிவிகிதத்தை அதிகரித்துள்ளதென்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. நியூயோர்க்கில் மசகு எண்ணெய் பீப்பாயொன்றின் விலை கடந்த மாதம் 70.85 டொலராக உயர்ந்திருந்தது. வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை கடந்த வரும் எட்டு சதவீதமாகவிருந்தது. சுனாமி மற்றும் எண்ணெய் விலை அதிகரிப்பால் இது இவ் வருடம் 9 சதவீதமாக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

## முரசம்

### தேர்தலுக்குத் தீனி போடும் சமாதான வாக்குறுதி

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

நாடு இரண்டு வகையான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருப்பதை எவரும் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. சமாதானப் பேச்சுக்கள், பொதுக்கட்டமைப்பு விவகாரம், ஒப்பந்த மீள் பரிசீலனை என்று நடைமுறைக்குக் கொண்டு வரமுடியாத விடயங்களைத் தூக்கிக்கொண்டு வன்னிக்கும் கொழும்புக்குமாகப் பறந்து திரிந்த நோர்வேயும் கண்காணிப்புக் குழுவும்கூட களைத்துப் போய்விட்டன. அதுகுறித்து புலிகளோ, அரசோ அலட்டிக் கொள்வதாகத் தெரியவில்லை.

அரசுக்கு தேர்தல் தொடர்பான தயாரிப்பு வேலைகள், அதேபோல் புலிகளுக்கு யுத்தம் தொடர்பான தயாரிப்பு வேலைகள். இரண்டு தரப்புமே அவை அவைக்கு முன்னால் இருப்பதாகக் கருதும் பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன. இவ்வாறான இரண்டு முரண்பட்ட செயற்பாட்டுக்கு நடுவே சமாதானம், நிரந்தரத் தீர்வு என்னானது என்பதை எவரும் கண்டுகொள்வதாகத் தெரியவில்லை. அடுத்து, ஜனாதிபதியாகியவுடன் இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிடுவேன் என்று ஜனாதிபதி வேட்பாளர்கள் கூறுவதைப் பார்த்தால் ஒவ்வொரு தேர்தல் காலத்திலும் நல்ல கிராக்கியான பொருள் சமாதானம் என்றாகிவிட்டது. குதிரைக்கு முன்னால் கரட் கிழங்கைக் கட்டி விடுவது போல். தேர்தல் காலங்களில் வாக்காளர்களை நோக்கி சமாதானத்தின் மீதான வாக்குறுதிகள் அள்ளி வீசப்படுகின்றன. இந்தப் போக்கானது புலிகளுக்கு அரசின் மீதான எதிர்ப்புப் பிரசாரத்தைச் செய்ய வசதியாகவும் அமைந்துவிடுகிறது. அதாவது தென்னிலங்கையில் உருவாகும் எந்தவொரு தலைமையும் தமிழர்களுக்குத் தீர்வைத் தரப்போவதில்லை என்றும், தமது சுயலாப அரசியல் செயற்பாடுகளிலேயே அவை அக்கறை கொண்டுள்ளன என்றும் கூறுகின்றனர்.

இவ்விரண்டு வகையான போக்கும் நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தரப் போவதில்லை. வருடத்துக்கு ஒரு தேர்தல் என்றால் அதையொட்டிய அரசியல் செய்யவே அரசுக்குக் காலம் சரியாக இருக்கிறது. இதையே ஒரு சாட்டாகப் பிடித்துக் கொண்டு புலிகளும் தமது வேலைத் திட்டத்தை நகர்த்துகின்றனர். தப்பித்தவறி அரசு ஏதாவது புதிய திட்டத்தை முன்வைக்கும் போது அதனை அலசி ஆராயாமல் நிராகரிப்பதும், நிபந்தனைகள் போடுவதும் புலிகளின் வழமையாகிவிட்டுள்ளது. இப்போது அதிலும் ஒரு படி முன்னேறி விடயம் என்னவாகவும் இருக்கட்டும், அதைப் பற்றிப் பேசுகின்ற இடம்தான் முக்கியம் என்றளவில் புலிகளின் சமாதானம் மீதான விருப்பம் அம்பலமாகிப் போயிருக்கிறது. உண்மையாகவே தமிழ் மக்களுக்கு கௌரவமான சமாதானத் தீர்வை பெற்றுக்கொடுக்கின்ற நேர்மையான முயற்சி இருந்தால் எந்த இடம் என்பதில் என்ன சர்ச்சை இருக்க முடியும். ஆடத் தெரியாதவன் மேடை சரியில்லை என்பது போல் இடம் பற்றிய இழுபறியில் இருக்கும் புலிகளின் நிலைமையுள்ளது. உளப்பூர்வமான விருப்பம் இல்லாதவர்களை நோர்வே, ஐ.நா.சபை என்ன ஆண்டவனே வந்தாலும் வெற்றிகாண முடியாது. சர்வதேசத்தின் பழிச் சொல்லுக்கு- மக்களின் விமர்சனத்துக்கு - மதிப்புக் கொடுக்கின்ற அரசாங்கம் இந்த விடயத்தில் சில விட்டுக்கொடுப்புக்கு வந்தாலே ஒழிய, இவற்றுக்கு அப்பாற்பட்ட புலிகளிடமிருந்து எந்தவொரு இணக்கத்தையும் எதிர்பார்க்க முடியாது.

எது நடக்கப்போகிறது. காலம் பதில் சொல்லும்.

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# மஹிந்த - ஜே.வி.பி உடன்பாடும் வடக்கு, கிழக்கு நிலைப்பாடும்

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

ந
ர
ன்

சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு சிங்களத் தேசியக் கட்சிகளான ஜனதா விமுக்தி பெரமுன, ஹெல உறுமய ஆகியவை ஆதரவளிக்க முன்வந்தமை தமிழ் தேசியத்தை வலியுறுத்தும் கட்சிகள் மத்தியில் மட்டுமல்ல சுதந்திரக் கட்சிக்குள்ளும் நாட்டிலும் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. புலிகளியக்கமும் அவர்களின் முகவரமைப்பான தமிழ் தேசியக் கூட்டமைப்பும் மீண்டும் யுத்தம் வெடிக்குமென்றும் நாடு பிரிக்கப்படுமென்றும் எதிர்வு கூறியுள்ளன.

ஒரு காலத்தில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டுமென்ற கொள்கையை வலியுறுத்தி வந்த ஜே.வி.பி., இன்று தனது கோஷங்களையும் வேஷங்களையும் மாற்றிக் கொண்டுள்ளமை உண்மைதான். இலங்கையை சிங்கள பௌத்த நாடாக மட்டுமே கருதும் ஹெல உறுமய கடும்போக்கு பேரினவாத கொள்கைகளை வலியுறுத்தி நிற்கிறது. தமிழ் தேசியத்தின் அரசியல் தீர்வுகளை மொத்தக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டுவிட்டதாக நினைத்துக் கொள்ளும் புலிகள் இயக்கம், தனக்குத்தானே ஏகபோக கிரீடத்தைத் தனது தலையில் சூட்டிக் கொண்டு கும்மாளமடிக்கிறது. புலிகள் தமிழ் மக்களின் ஏகபோகப் பிரதிநிதிகள் அல்ல என்பதை இந்த இரு சிங்கள தேசியவாதக் கட்சிகளும் ஏற்றுக் கொண்டுள்ளன. என்றாலும் நடைமுறையில் தமிழ் மக்களின் பிரச்சினையைப் புலிகளோடு சேர்த்துக்

ஜே.வி.பி.யும் ஹெல உறுமயவும் வலியுறுத்துகின்றன. இந்த நியாயமான கோரிக்கை தமிழ், முஸ்லிம் தரப்புகளாலும் வலியுறுத்தப்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியும், ஜே.வி.பி.யும் ஐக்கியப்பட்டு செயற்படுவதற்காக சில மாதங்களாக பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்தபோது இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரங்கள் பற்றி கலந்துரையாடியிருக்கின்றன. இருதரப்புமே தத்தமது நிலைப்பாட்டிலிருந்து விட்டுக் கொடுக்காமல் பின்னர் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண்பதென இணக்கம் கண்டிருந்தன.

இடைக்காலத் தீர்வையும் இறுதித் தீர்வையும் போட்டுக்





ஒப்பீசுகளை மூடிப்போட்டம் எங்களுக்கு பாதுகாப்பில்லையெண்டு போனவை திரும்பவும் அழையா விருந்தாளியா வரப்பாக்கினமாம், ஒப்பீசை மூடப் போறம் எண்டால் அரசாங்கம் ஆடிப்போய் ஏதாவது வேண்டுகோளை செய்யும் அதைப் பிடிச்சுக் கொண்டு அடுத்ததாக ஏதாவது செய்யலாமெண்டு போட்டகணக்கு தப்புக்கணக்காப் போயிட்டுது எண்டதாலை, இப்ப ஊருக்குள்ள இருக்கிற சங்கங்களையும் பினாமி அமைப்புகளையும் தூண்டி விடுகினமாம். எப்பிடித் தெரியுமோ போன எங்களைத் திரும்பவும் வாங்கோ எண்டு கூப்பிடுமாப்போல கூப்பிடுங்கோ நாங்களும் வாறாப்போல வாறம் எண்டு ஆக்களுக்கு தெள்ளோட்டினமாம். பாட்டும் அவைதான் பாவமும் அவைதானுங்கோ..

‘கூஜா’ தூக்கிகளும் கூத்தடிக்கின்றனர். சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் இந்த முரண்பாடுகளுக்குத் தீர்வு காணப்படக் கூடிய சாத்தியங்கள் தென்படுகின்றன. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான சுதந்திரக் கட்சியின் விஞ்ஞாபனத்தை அதன் கொள்கை வகுப்புப் பீடமான மத்திய கமிட்டியே

குழப்பியடித்து தங்களையும் குழப்பி, நாட்டு மக்களையும் குழப்பிவிடுகின்றன. வடக்குக் கிழக்கு வாழ் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் வேறு, புலிகளின் பிரச்சினைகள் வேறு என்பதை இவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லையென்பது வேதனைக்குரிய விடயம்தான். சுதந்திரக் கட்சியின் சுதந்திரக் கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளராக பிரதமர் அறிவிக்கப்பட்டிருந்தாலும் ஜே.வி.பி.யுடனோ ஹெல உறுமயவுடனோ சுதந்திரக் கட்சி பேச்சுவார்த்தை நடத்தவில்லை. பிரதமரே இவ்விரு கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி அவற்றின் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு ஆதரவைப் பெற்றுள்ளார். ஜே.வி.பி. பன்னிரெண்டு நிபந்தனைகளைப் பிரதமரிடம் முன்வைத்தது போல் ஹெல உறுமயவும் பன்னிரெண்டு நிபந்தனைகளை முன்வைத்தது. இவற்றில் சிங்கள தேசியத்தின் நலன்களை வலியுறுத்தும் நிபந்தனைகளும் புலி எதிர்ப்பு நிபந்தனைகளும் இருதரப்புகளாலும் முன் வைக்கப்பட்டுள்ளன. சுனாமிப் பொதுக் கட்டமைப்பை செயற்படுத்தாது தவிர்த்தல் அல்லது திருத்தியமைத்தல், ஒற்றையாட்சியின் கீழ் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணல், இறுதித் தீர்வு குறித்து புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துதல் போன்ற நிபந்தனைகளே தமிழ் ஊடகங்களும் தமிழ் தேசிய கூட்டமைப்பும் துள்ளிக் குதிப்பதற்குக் காரணமாக அமைந்துள்ளன. ஜே.வி.பி. முன்வைத்துள்ள பன்னிரெண்டு நிபந்தனைகளில் ஆறு நிபந்தனைகள் தமிழ் மக்களுக்கு எதிரானவை என்பதே இவர்களின் வாதமாகும். ஒற்றையாட்சிமுறை நீக்கப்பட்டு தமிழ் மக்களுக்கும் அதிகாரப்பகிர்வு வழங்கப்பட்டால் மட்டுமே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியுமென்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க அடித்துக் கூறியுள்ளார். அதாவது பிரதமருக்கும் ஜே.வி.பி.க்குமிடையில் உடன்பாடு காணப்பட்ட தினத்திற்கு மறுநாளே ஜனாதிபதி இதனை வலியுறுத்தியிருப்பது வரவேற்கத்தக்கது. ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரப் பகிர்வை மேற்கொள்ள முடியாதென்பது பிரதமருக்கும் புரிந்த விடயம்தான். ஒற்றையாட்சி என்பதை விடுத்து ஐக்கிய இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென்று கூறியிருந்தால் அது வரவேற்கக்கூடிய சொற்பதமாக அமைந்திருக்கும். நாடு பிரிக்கப்படப் போகிறது என்ற பீதியை புலிகளின் நடவடிக்கைகளே சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. தனிநாட்டுக் கோரிக்கைக்கெதிராக ஜே.வி.பி.யும் ஹெல உறுமயும் மட்டுமல்ல சுதந்திரக் கட்சி ஐ.தே.க. மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் போன்ற பிராந்தியக் கட்சிகளும் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஈ.பி.டி.பி. போன்ற கட்சிகளும் வலியுறுத்துகின்றன. முன்னைய ஆயுதப் போராட்ட அமைப்புகளான புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப்., ரெலோ போன்றவை இன்று வலுவிழந்து விட்டாலும் அவையும் தனிநாட்டுக் கோரிக்கையை ஆதரிக்கவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிலையும் இதுதான். தனிநாடு கோருவதாக புலிகளும் கூட பகிரங்கமாக அறிவிக்கவில்லை.

உத்தேச சுனாமி நிவாரண சபை தொடர்பாக உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பில் சில ஷரத்துக்கள் மாற்றப்பட வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறது. அந்த சுனாமிக் கட்டமைப்பு தொடர்பான பிரச்சினைதான் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசிலிருந்து ஜே.வி.பி. வெளியேறக் காரணமாயிருந்ததென்பது குறிப்பிடத்தக்கது. இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாகவும் சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பி.க்கும் இடையில் முரண்பாடுகள் இருந்தமை உண்மையே அதிகாரப்பகிர்வை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அடிநாதக் கொள்கையாக வலியுறுத்தியிருந்தது சுதந்திரக்கட்சி. இதற்கு மறுப்பு தெரிவித்த ஜே.வி.பி. அடிமட்ட உள்ளூராட்சி சபைகளிலிருந்து உயர்மட்ட சபைகள் வரை இனவிகிதா சாரத்திற்கேற்ப பிரதிநிதித்துவம் அமைய வேண்டுமெனக் கூறியுள்ளது. இதேபோன்று தான் இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து புலிகளுடன் மட்டுமல்ல, சம்பந்தப்பட்ட ஏனைய தரப்புகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டுமென்று

குழப்புவது புலிகள்தான். இடைக்கால தன்னாட்சி அதிகார சபை அமைக்கப்பட வேண்டுமென்று கோரிவந்த புலிகள், பின்னர் இடைக்கால நிர்வாக சபையொன்று அமைக்கப்பட்ட பின்னரேயே இறுதித் தீர்வு பற்றிப் பேசலாமெனக் கூறியிருந்தார்கள். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கூட இறுதித் தீர்வை நோக்கிய நகர்வுப் போக்குக்கு முன்னோடியாகவே இடைக்கால தீர்வு அமைய வேண்டுமென்று வற்புறுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. எனவே புலிச் சார்பு தமிழர் தரப்புகளுக்கு இதுவொரு பிரச்சினையாக அமைய வேண்டிய தேவை இருக்காது. தமது கைகளில் இடைக்கால அதிகாரத்தை எடுத்துக் கொள்வதன் மூலம் தம்மைப் பலப்படுத்திக் கொள்ள புலிகள் எடுக்கும் முயற்சியை சிங்களத் தரப்புகள் மட்டுமல்ல, தமிழ், முஸ்லிம் தரப்புகளும்

> **ஒற்றையாட்சிமுறை நீக்கப்பட்டு தமிழ் மக்களுக்கும் அதிகாரப்பகிர்வு வழங்கப்பட்டால் மட்டுமே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியுமென்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க அடித்துக் கூறியுள்ளார். அதாவது பிரதமருக்கும் ஜே.வி.பி.க்குமிடையில் உடன்பாடு காணப்பட்ட தினத்திற்கு மறுநாளே ஜனாதிபதி இதனை வலியுறுத்தியிருப்பது வரவேற்கத்தக்கது. ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரப் பகிர்வை மேற்கொள்ள முடியாதென்பது பிரதமருக்கும் புரிந்த விடயம்தான். ஒற்றையாட்சி என்பதை விடுத்து ஐக்கிய இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென்று கூறியிருந்தால் அது வரவேற்கக்கூடிய சொற்பதமாக அமைந்திருக்கும்.**

எதிர்க்கின்றன. ஜே.வி.பி. தனித்து போட்டியிட்டால் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் வாக்குகளில் ஓரளவு வீழ்ச்சி காணப்படும் என்பது உண்மை.

ஆனால் ஜாதிக ஹெல உறுமய தனித்துப் போட்டியிட்டால் பாரிய தாக்கமெதனையும் ஏற்படுத்தப் போவதில்லை. சிங்கள பௌத்தம் என்ற கோட்பாட்டில் தங்கி நிற்கும் இந்தக் கட்சிக்குப் பெருமளவு வாக்குகள் கிடைக்கப் போவதில்லை. பூமி புத்திரக் கட்சி போல குறைந்த வாக்குகளையே இக் கட்சியினால் பெறமுடியும். பாராளுமன்றத் தேர்தலில் சிறிய கட்சிகளுக்கு வழங்கப்படும் ஐந்து சதவீத வெட்டுப் புள்ளியென்ற சலுகை காரணமாகவே சில ஆசனங்களை இக் கட்சியால் கைப்பற்ற முடிந்தது.

பிரதமருக்கும் ஜே.வி.பி.க்குமிடையில் ஏற்பட்டுள்ள உடன்பாடு, சுதந்திரக் கட்சிக்குள் அல்லது பொதுஜன முன்னணிக்குள் எதிர்ப்பைக் கிளப்பியுள்ளமை உண்மைதான். மத்தியில் குவிந்துள்ள அதிகாரத்தைப் பகிர்வதன் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியுமென்ற நிலைப்பாடு மிகச் சரியானதே. ஜே.வி.பி.யின் ஒற்றையாட்சியின் கீழ் தீர்வுகாணும் நிபந்தனைக்கு உடன்பட்டதன் மூலம் பிரதமர் சந்தர்ப்பவாத வாக்குறுதியை அளித்துள்ளாரென்று குற்றஞ்சாட்டப்படுகிறது. இதே போன்றுதான் சுனாமிக் கட்டமைப்பு தொடர்பாகவும் சுதந்திரக் கட்சியின் அடிப்படைக் கொள்கையை ஜே.வி.பி. ஏற்கனவே நிராகரித்திருந்தது. இவை இரண்டினையும் தூக்கிப் பிடித்துக் கொண்டுதான் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் அவர்களின்

மேற்கொளும். எனவே ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமயவுடன் பிரதமர் செய்துகொண்ட மேற்படி அம்சங்கள் தொடர்பான உடன்பாடுகளுக்கு ஆப்பு வைக்கப்படுமென்பது உண்மைதான். இதனால் இந்த இரு சிங்கள தேசியவாதக் கட்சிகளும் தடம்மாறி ஐ.தே.க.வுக்கு ஆதரவு வழங்க முடியாமல் பொறியொன்றிற்குள் பிரதமர் சிக்க வைத்திருக்கிறாரென்று சில அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

அதிகாரங்கள் மையப்படுத்தப்படுவதாலேயே ஒற்றையாட்சியின் கீழ் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாதெனக் கூறப்படுவது உண்மையே. இதனை வலியுறுத்தும் சில தரப்புகள் செயலாற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறையை நீக்கக் கூடாதெனக் கோருவது ஏனோ தெரியவில்லை. வடக்கு, கிழக்கில் ஜனநாயகம், பன்முகத்தன்மை, மனித உரிமை ஆகியவை பேணப்பட வேண்டுமென்று பிரதமர் உடன்பட்டிருப்பது வரவேற்கக் கூடிய விடயம். வடக்கு, கிழக்கு மக்கள் ஆயுத அடாவடித்தனங்களுக்கு அடங்கியே வாய் மூடி மௌனிகளாக வாழ்கின்றனர் என்பதை ஏற்றுக் கொண்டால், இது மிகவும் முக்கியமானதொரு விடயமாகும். யுத்த நிறுத்த காலத்திலும் மாற்றுக் கருத்துள்ளவர்கள் வேட்டையாடப் படுகின்றனர். கப்பம், வரி வசூலிப்புகள் தாராளமாக இடம்பெறுகின்றன. பலாத்காரமாகப் படையணிகளுக்குப் பிள்ளைகள் சேர்க்கப்படுகின்றனர். கிழக்கில் முஸ்லிம்களிடமிருந்து அபகரிக்கப்பட்ட காணிகள், வாகனங்கள், மாட்டுப் பட்டிகள் ஆகியவை இன்னமும் திருப்பிக் கொடுக்கப்படவில்லை. இத்தகைய அடாவடித் தனங்களில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருபவர்களுக்கு வடக்கு, கிழக்கில் ஜனநாயகம், பன்முகத்தன்மை, மனித உரிமைகள் பேணப்பட வேண்டுமென்பது வேப்பங்காயாகக் கசக்கத்தான் செய்யும்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீளாய்வு செய்தல், நோர்வேயின் பங்களிப்பை மீளாய்வு செய்தல் ஆகியன வரவேற்கக் கூடிய விடயங்கள்தான். அத்துமீறல்களில் ஈடுபடுபவர்களுக்கு அவர்களுக்குக் கவசமாக இருப்பவர்களின் பங்களிப்பை மீள்பரிசீலனை செய்ய வேண்டுமென்பது நியாயமற்ற கோரிக்கையாகும்.

ஜே.வி.பி.யைச் சிங்களப் பேரினவாதிகள் என்று கண்டிப்பவர்கள் ஓர் உண்மையைத் தெரிந்துகொள்ள வேண்டும். கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்களுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட இந்தக் கட்சி, ஆயுதமேந்திப் போராடிய காலத்திலும் சரி, பாராளுமன்ற ஜனநாயக முறைக்குத் திரும்பிய பின்னரும் சரி, இனவாத அடிப்படையில் ஒரு தமிழனையோ முஸ்லிமையோ கொன்றதில்லையென்பதைத் தமிழர் தரப்புகள் ஜீரணித்துத் தானாக வேண்டும். ஆனால் தமிழர்களின் விடுதலைக்காக ஆயுதமேந்தியவர்களென்று கூறிக் கொள்ளும் புலிகளால் கொல்லப்பட்ட அப்பாவிச் சிங்கள, முஸ்லிம் மக்கள் எத்தனை ஆயிரம்? காத்தான்குடியிலும், ஏறாவூரிலும் அப்பாவி முஸ்லிம்களை மிருகத்தனமாகச் சுட்டுக் கொன்றார்கள். 75 ஆயிரத்துக்கு மேற்பட்ட முஸ்லிம்களை வடக்கிலிருந்து விரட்டியடித்தனர். சிங்களக் கிராமங்கள் கண்மூடித்தனமாகத் தாக்கி அழிக்கப்பட்டிருக்கின்றன. எது எப்படியிருந்தாலும் பிரதமர் - ஜே.வி.பி. உடன்பாடு நாட்டில் பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்திருப்பது உண்மையே. புலிகளையும் அவர்களின் முகவர்களையும் தவிர்ந்த ஏனைய தமிழர் தரப்புகளெல்லாம் மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி, பிரிக்க முடியாத வடக்கு - கிழக்கு இணைப்பையே வலியுறுத்தி நிற்கின்றன. ஜே.வி.பி.யும் ஐக்கிய இலங்கைக்குள் அல்லது பிரிக்க முடியாத இலங்கைக்குள் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வர வேண்டும். அப்போதுதான் யுத்தமே இல்லாத, பிரிக்க முடியாத ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்ப முடியும். ■

# புலிகளாக்கப்பட்ட மக்களின் புகலிடம் எது?

முன்னைய ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கும் புலிகளுக்குமிடையில் (2002-02-22 ஆம் திகதி) கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அடுத்து இலங்கையில் நடைபெற்றுவரும் ஒவ்வொரு சம்பவமும் சமாதானத்துக்கான முயற்சிகளை கேள்விக்குள்ளாக்கியே வந்துள்ளது. கடந்த காலத்தில் நடைபெற்ற சம்பவங்களை அவ்வப்போது சுட்டிக்காட்டி வந்துள்ளதால் தற்போது ஏற்பட்டுள்ள புதிய மாற்றங்களை மாத்திரம் கவனிக்க வேண்டியுள்ளது.

ஒப்பந்தம் நடைபெற்று மூன்று வருடங்களும் ஏழு மாதங்களும் ஆகின்ற நிலையில் புலிகள் தமது அரசியல் பணிமனைகளை மூடிவிட்டு, தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர். இதற்காகப் புலிகள் தெரிவிக்கும் காரணங்கள் விசித்திரமானவையாக உள்ளன. தமது அரசியல் பணிமனை மீது தாக்குதல் நடத்தப்படுவதாகவும், அரசியல் பணியில் ஈடுபட்டுள்ள தமது போராளிகள் மீது தாக்குதல் நடத்தப்படுவதாகவும் தமது சுதந்திரமான செற்பாட்டுக்கு இலங்கை பாதுகாப்புத் தரப்பு அச்சுறுத்தலாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். அத்தோடு தற்போது அமுலில் இருக்கும் அவசரகாலச் சட்டத்தையும் கோடிட்டுக்காட்டி வருகின்றனர்.

புலிகளின் இந்தக் குற்றச்சாட்டுக்களிலிருந்து ஆராயும்போது, அரசியல் பணிக்காகவென்று இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அலுவலகங்களைத் திறந்த புலிகள், அரசியல் பணிகளாக இதுவரை செய்தவை எவை? அப்படிச் செய்யப்பட்டிருந்தால் எப்பகுதி மக்களுக்கு? என்ன விதமான அரசியல் பணி என்பதே இன்னும் புரியாத புதிராக உள்ளது. வெறுமனே பெயர்ப் பலகைகளை மட்டும் ஒரு கட்டிடத்தின் முகப்பில் மாட்டிவிட்டு, ஆட்சேர்ப்பு, வரி அறவீடு செய்வது, அதற்கு இணங்காதவர்களை அலுவலகத்துக்கு வருமாறு அழைத்து மிரட்டுவது அல்லது தாக்குவது - இதற்கும் மேலாக குற்றவாளிகளின் கூடாரமாக அமைந்திருப்பது என்றளவில் தான் புலிகளின் அரசியல் பணியும் பணிமனையும் இத்தனை காலமும் இயங்கி வந்துள்ளன. ஆகவே அவை மூடப்பட்டதில் எவருக்கும் எவ்வித பாதிப்பும் இல்லை. தொல்லை விட்டகன்றது என்ற மனப் போக்கையே மக்களின் வெளிப்பாடுகளிலிருந்து உணரமுடிகிறது. மறுபக்கத்தில் பணிமனைகளை மூடுவதற்காக புலிகள் தெரிவித்த குற்றச்சாட்டுக்களையும் தவிர்த்துவிட முடியாது. புலிகளால் கொலை செய்யப்படும் மாற்றுக்கட்சி உறுப்பினர்கள், குறிப்பாக கருணா அணியினர், தொடர்ந்தும் புலிகள் தம் மீது புரியும் கொலைகளைப் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று புலிகள் எதிர்பார்ப்பது மடைமையானது.

ஆகவே கருணா அணியினரோ, ஏனைய புலிகளால் தாக்கப்படும் தரப்பினரோ தமது எதிர் நடவடிக்கையை புலிகள் மீது காட்டத்தான் செய்வார்கள். புலிகள் பகிரங்கமாக ஏற்றுக்கொள்ளா விட்டாலும் கிழக்கு அதிலும் மட்டக்களப்பு பிரபா அணிப் புலிகளின் பிடியில் இல்லை. அவர்களின் பிடிக்குள் இல்லாததை மறைப்பதற்காகவும், கருணா அணியினரை அழிப்பதற்காகவுமான புலிகளின் செயற்பாடுகளே மட்டக்களப்பில் அதிகரித்து வரும் படுகொலைச் சம்பவங்களும், வன்முறைகளுமாக உள்ளன. அடுத்ததாக அவசர காலச்சட்டம் தொடர்பான சர்ச்சை.

புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்ட பிறகு அரசு புலிகள் மீதும் - புலிகள் அரசு மீதும் ஒப்பந்தம் மீறப்பட்டதாகச் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்களில் புலிகளே அதிகமாக சுமார் 4500க்கும் அதிகமான போர்நிறுத்த மீறல்களைச் செய்துள்ளனர். படைத்தரப்பு மீது ஆயிரத்திற்கும் குறைவான குற்றச்சாட்டுக்கள் புலிகளால் சுமத்தப்பட்டுள்ளன. புலிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் பாரதூரமானவையாகும். ஆயுதக் கடத்தல், ஆட்களைக் கடத்தல், சிறுவர்களைப் படைக்குச் சேர்த்தல், படுகொலை செய்தல், பணம் கப்பமாகப் பெறல், தாக்குதல்களைச் செய்தல், துப்பாக்கிப் பிரயோகம் செய்தல், மனித உரிமைகளை மீறல் என்று நீட்டிக் கொண்டு போகலாம். அவ்வளவு ஏன்?

தற்கொலைக் குண்டுதாரியை கொழும்புக்கு அனுப்பி வெடிக்க வைத்தது. இத்தனை மீறல் சம்பவங்களையும் பொறுத்திருந்த அரசுக்கு அவசரகாலச் சட்டத்தை மீண்டும் கொண்டுவரவேண்டிய கட்டாயத்தை புலிகள்தான் ஏற்படுத்தினார்கள். இலங்கையின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை புலிகள் படுகொலை செய்ததைத் தொடர்ந்து, பாதுகாப்புத் தொடர்பான அச்சம் அரசுக்கு வலுக்கக் காரணமானது. தவிரவும், லக்ஷ்மன் கதிர்காமர் போல் புலிகள் இலக்குவைக்கும் ஏனையவர்களின் பாதுகாப்பை பலப்படுத்தவும் அவசரகாலச் சட்டம் அவசியமானது என்பதை அரசு உணரத் தலைப்பட்டது.

ஆக, அவசரகாலச் சட்டமாக இருந்தாலென்ன, சுற்றிவளைப்புத் தேடலாக இருந்தாலென்ன, பொலிஸ் பதிவாக இருந்தாலென்ன, எந்தவொரு நடவடிக்கையையும் புலிகளின் செயற்பாடுகளே அமுல்படுத்துகின்றன. இதன் யதார்த்தத்தை பக்கச்சார்பற்று நடுநிலைமையோடு சிந்திக்கும் எவரும் புரிந்து கொள்ளமுடியும்.

இவற்றுக்கெல்லாம் மேலாக புலிகளின் அரசியல் பணிமனைகள் மூடப்பட்டதற்குப் பின்னால் இருக்கக்கூடிய மற்றுமொரு விடயம், மேற்படி அரசியல் பணிமனைகளை திறந்திருந்த காலப் பகுதியில் புலிகள், நடத்திய ஹர்த்தால்கள், கடையடைப்புகள், எதிர்ப்புகள், டயர் எரிப்புகள், பகிஷ்கரிப்புகள் என்று என்னென்ன மாதிரியெல்லாம் அரசுக்கும் - அரச படைகளுக்கும் வெறுப்பேற்ற முடியுமோ அத்தனையையும் மக்களின் பெயரால் செய்ததையும் குறிப்பிடலாம். அதற்காக இந்தச் செயற்பாடுகளில் மக்கள் கலந்து கொள்ளவே இல்லை என்று மறுத்துவிட முடியாது. சிலர் புலிகளின் மீதான விருப்பத்தில் கலந்து கொண்டாலும், பலர் புலிகளின் மிரட்டல், அச்சுறுத்தல், கட்டாயப்படுத்தல்களின் காரணமாகவே கலந்துகொண்டனர் என்பதை இப்போது மக்கள் விடும் ஆறுதல் பெருமூச்சிலிருந்து புரிந்துகொள்ள முடியும். இவ்வகையான செயற்பாடுகளின் போதெல்லாம் வீதிக்கு இறக்கப்பட்ட மக்களோடு மக்களாக நின்றுகொண்டு வன்முறைகளிலீடுபட்ட புலிகள் தமிழ் மக்கள் தான் தாக்குதல்களைச் செய்தார்கள் என்பதோடு, தமிழ் மக்கள்தான் புலிகள், புலிகள்தான் தமிழ் மக்கள் என்றும் கோஷமிட்டனர். இப்படியான நிகழ்ச்சிகளுக்கு மகுடம் வைப்பதாக நடந்த சம்பவமாக இணுவில் சம்பவத்தைக் கருதலாம். படைத்தரப்பின் தவறான ஆயுதக் கையாள்கையால் அப்பாவி இளைஞன் கொல்லப்பட்டதும், அதைத் தொடர்ந்து மக்களின் பெயரால் புலிகள் ஆர்ப்பாட்டம் நடத்தியதும், சமரசத்துக்காக வந்த பொலிஸ் அத்தியட்சரை வெட்டிக் கொலை செய்ததும், அந்தக் கொலைப் பலியைப் மக்கள் மீது சுமத்தியதும், பின்னர் கொலையில் ஈடுபட்ட சந்தேகநபரான புலி உறுப்பினர் கோபி கைதுசெய்யப்பட்டதும் நல்ல உதாரணங்கள்.

இவ்வாறு வீதிக்கு இறக்கும் மக்களை வன்முறையாளர்களாகவும், கொலை வெறிபிடித்தவர்களாகவும், யுத்த விரும்பிகளாகவும், அரசிற்கும் படைத்தரப்பிற்கும் எதிரானவர்களாகவும் இனம் காட்டிய புலிகள், இப்போது தமக்கு அச்சுறுத்தல் என்ற காரணத்தோடு ஆமை தலையை உள்ளிழுத்துக் கொள்வது போல தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஓடிவிட்டனர். இவர்களால் புலிகளாக்கப்பட்ட அப்பாவி தமிழ் மக்கள் மட்டும், தத்தமது பகுதிகளில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் புலிகளின் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை. புலிகளை இலங்கையின் அரசுக்கும் படைக்கும் எதிராளிகளாகக் காட்டினால், அவர்கள் மீது எதிர்த் தாக்குதல் நடத்தப்படும், அப்போது மக்கள் வன்னிக்குள் வந்து தமது பிடிக்குள் விழுந்து விடுவார்கள். அப்படி வர மறுப்பவர்களுக்கு பாதுகாப்புப் படையினர் நெருக்கடிகளைக் கொடுப்பார்கள். மொத்தத்தில் மக்கள் நிம்மதியிழந்து இருப்பார்கள். அது ஒன்றுதான் திசை மாறிப் போகும் போராட்டத்தை முன் கொண்டு செல்ல உதவும் என்று புலிகள் நினைத்திருக்கக் கூடும். அவ்வாறு இல்லையெனில் ஒரு வாதத்துக்குப் பார்த்தால், புலிகள் தமது பாதுகாப்பை யோசிக்கும்போது மக்களைப் பற்றி ஒன்றும் யோசிக்கவில்லையே, ஒரு அறிக்கையோடு மக்களை தவிக்க விட்டு ஓடிவிட்டார்களே. மொத்தத்தில் தோள்களில் தூக்கி வந்த மக்களை தவிக்க விட்டு ஓடிவிட்டார்கள்.

இதிலிருந்து இலங்கை அரசுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் ஒரு உண்மை மீண்டும் நிரூபணமாகியுள்ளது. அதாவது, புலிகள் வேறு, தமிழ் மக்கள் வேறு, மக்களின் பெயரால் புலிகள் முடிவுகளை தாமே எடுத்துக் கொண்டார்கள் என்பதாகும்.

இது தவிர, புலிகள் தமது அரசியல் பணி உறுப்பினர்களைத்தான் வாபஸ் பெற்றிருக்கிறார்களே தவிர, ஆயுதமேந்திய உறுப்பினர்களை இன்னும் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் வழமையான பணிகளில் ஈடுபடுத்திக்கொண்டுதான் இருக்கிறார்கள். தப்பித்தவறி இப்போது புலிகள் பின்வாங்கியதாகக் கூறும் மாவட்டங்களில் புலி உறுப்பினர்கள் தாக்குதலுக்கு உட்பட்டால் அதைப் புலிகள் உரிமை கோர முடியாமல் போகலாம். புலிகளுக்கு எதிரான சக்திகள் இந்தச் சந்தர்ப்பத்தை எவ்வாறு பயன்படுத்தப் போகின்றன என்பதும் கேள்வியாகவுள்ளது. தமக்குச் சாதகமில்லாத நேரத்தில் மக்களை விட்டு ஓடுவதும், பின்னர் ஏதாவது ஒரு காரணத்தைக் காட்டி மக்களுக்குள் வந்து மக்களை அடிமைகளாக நடத்துவதும் புலிகளின் கையில் ஆயுதமிருக்கும்வரை தொடர்கதையாகத்தான் இருக்கப்போகிறது.

**கடந்த 07.09.2005 அன்று புலிகளின் அரசியல் பணிமனைகள் மூடப்படுவதாகப் புலிகள் அறிவித்தனர். இதன்படி யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டக் காரியாலயங்கள் மூடப்பட்டன. அன்றைய தினம் காலை 8.00 மணி தொடக்கம் பி.ப.3.00 மணிவரையான எட்டு மணி நேரத்துக்குள் அனைத்து அலுவலகங்களும் மூடப்பட்டு, அரசியல் பணியில் ஈடுபட்டிருந்த உறுப்பினர்கள் மட்டும் பின்வாங்கப்பட்டனர்.**

**தற்போதைக்கு தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் மட்டும் அதாவது, யாழ்ப்பாண அலுவலகம் பளையிலும், வவுனியாவுக்கான காரியாலயம் புளியங்குளத்திலும் அமைக்கப்பட்டுள்ளதாக புலிகள் அறிவித்துள்ள நிலையில், இதுகூட ஏ-9 பாதையூடான தமது வருமானம் கருதியதே என்று அப் பாதையூடாகப் பயணிக்கும் மக்கள் கூறிவருகின்றனர்**

அலசுவது
- மதியூகி -

## அதிரடி அய்யாத்துரை



**அதிகாரத்துக்கான** எலக்ஷன் நடக்கப்போகுதெண்டு தெரிஞ்சவுடனேயே கட்சிகளின்ர தலைவர்கள் ஒருக்காச் செருமிப்போட்டு முதுகை நிமிர்த்திக்கொண்டு தொண்டர்களோடை கதைக்கினமாம். ஆதரவு வழங்கிறதில அவை அவைக்கு வசதியான ஆக்களை தெரிவுசெய்யினம் எண்டது மகா ஜனங்களுக்குத் தெரியும். இதுக்கிடையில நீலக்கட்சிக்குள்ளேயே நில நடுக்கம் ஏற்பட்டிருக்கெண்டு பச்சை பச்சையா சில ஊடகங்கள் செய்தி போடுகினம். நீலக் கட்சியின்ர வேட்பாளர் சிவப்புச் சட்டைக்காரரிண்டையும், காவிக்காரரிண்டையும் உதவியைப் பெற்றுக் கொள்ளிற விஷயத்திலை கொஞ்சம் கண்மூடித்தனமா நடத்திட்டார் எண்டு அம்மணியார் கட்சிக் கொள்கை விளக்கம் கொடுத்திருக்காவாம். அதிலையும் கொஞ்சம் காட்டமாத்தான் சொற்பதம் அமைச்சிருக்கெண்டு ஊடகங்கள் ஊதிப் பெருப்பிக்கினம். அதிகாரத்துக்கு வாறவையெல்லாம் அவை ஒப்பந்தம் செய்தபடியோ செய்துமுடிக்கினம்? இல்லையே. அப்பப்ப என்ன நடக்குதோ, நெளிவு சுளிவுகளுக்கு ஏத்தமாதிரித்தானே நடக்கினம். அதுகூடத்தெரியாம ஒப்பந்தம் பண்ணிப்போட்டார். நாடு குட்டிச்சுவராப் போகும் எண்டு யாரையோ திருப்திப்படுத்த எண்ணி, பச்சைக் கட்சிக்குப் பாதகமில்லாம நிலைமையை மாத்திப்போடாதேங்கோ எண்டு அதிகார அம்மணிக்கு அட்வைஸ் பண்ணப்படுகுதாம். அம்மணி நியாயமாகச் சொன்னாலும் அதுகளெல்லாம் காலம் கடந்த ஞானம் எண்டு தானுங்கோ கதைக்கினமாம்.

**மீன்பாடும்** தேனாட்டில தினமும் கொலை விழுகுதே. யாரும் கண்டு கொள்ளுற மாதிரித் தெரியல்லையே. இலங்கை தேசத்துக்கும், புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கும் மீன்பாடும் தேனாடு விதிவிலக்கா எண்டு மேதாவித்தனமாக யாரும் நினைச்சுப்போடாதேயுங்கோ.

கண்டு கொள்ளப் போனால் யுத்தம் வருமெண்டு தானாம் அந்தப் பக்கம் முகத்தை திருப்பாம இருக்கினமாம். எலக்ஷன் பிஸி எண்டதுக்காக ஏகத்துக்கு கொலை விழுறதை எப்பிடிங்கோ சகிச்சுக் கொள்ளமுடியும். கொலைக்கு கொலையெண்ட கணக்கா நிலமை மோசமாகிக் கொண்டு போகுதுங்கோ. அதுசரி, யாரடிச்சு யார் செத்தாலென்ன, சாகிறது தமிழ் பேசிறவை தானே எண்டு கணக்குப் பாக்கினமாக்கும். தப்புக் கணக்குப் போட்டே பழகிட்டினம். இது தெரியாம ரெண்டெழுத்தார், செய்தால் கொலை; இல்லாட்டில் சண்டையெண்டு இருக்கினம். எதிலைபோய் முடியப் போகுதோ....

**ஒரு** சதத்துக்கும் உருப்படியில்லாத ஒப்பந்தத்தை மாற்றியமைக்க வேண்டிய பேச்சுகளுக்கு ரெண்டெழுத்தாரை சம்மதிக்க வைக்க நோர்வேக்காரர் மூக்கை உடைச்சுக் கொண்டினம். இப்படி மூக்கை இழந்தது இது முதல் முறை எண்டால நோர்வேக்காரருக்கு அது ஒரு பெரிய விசயமில்லையாம். விக்கிரமாதித்தன் மாதிரி முன்னாள் கண்காணிப்புத் தலைவரை திரும்பவும் அனுப்பி வைக்க முயற்சிக்கப் போகினமாம். இவை மூக்கை இழந்திச்சினம். அவர் வந்து எதை இழக்கப் போறார் எண்டதை பொறுத்துத்தான் பார்க்க வேணும். ஒருவேளை அவர் முன்னம் பதவியில இருக்கும்போது ரெண்டெழுத்தாரின்ர நூல் இழுப்புக்கெல்லாம் ஆடினவர் எண்டதாலை இந்த விஷயத்திலையும் தன்ர நடிப்புத் திறமையை கொஞ்சம் தூக்கலாகவே காட்டி ரெண்டெழுத்தாருக்கு நோகாம ஒரு திட்டத்தைப் போடுவார் எண்டு சின்ன நப்பாசை தானாம். இவைக்கு நோபல் பரிசு கிடைக்குதோ இல்லையோ, செவாலியே விருது கிடைக்கிறது நூறு வீதம் கன்போர்ம் எண்டு விஷயம் தெரிஞ்ச வட்டாரங்கள் சொல்லிச் சிரிக்கினம். பாப்பம் நோர்வேக்காரர் பிளேன் காட்டி ஏமாத்தப் பார்த்தார். இவர் எதைக் காட்டி ஏமாத்தப் போறாரெண்டு.....

**சுனாமியாலை** வீடு, வாசலை இழந்து அகதி முகாம்களில் இருக்கிற சனத்துக்கு நிரந்தர வீடுகளைக் கட்டிக் கொடுக்கிற வேலை தாமதமடையிறது நல்லதில்லையுங்கோ. ஏன் தெரியுமோ? இனி மழை காலம் ஆரம்பிக்கப் போகுது. ஏற்கனவே பாதிக்கப்பட்ட சனம் திரும்பவும் பாதிக்கப்படப் போகுதுகள். உந்தப் பாதிப்பு பெரும் பாதிப்பெண்டால் உதையே தூக்கி விழுங்குமாப்போலை இன்னொரு பாதிப்பு உந்த சனத்தை விரட்டுதுங்கோ. சனசந்தடியா சனம் உப்பிடி அகதி முகாம்களில தங்கியிருந்தாச் சுகாதாரக் கேடு வந்து விதவிதமான நோய்கள் பரவுமெண்டது வழமைதான்.

ஆனால் நோய்களை ஓவர்டேக் பண்ணுமாப் போலை எயிட்ஸ் புகுந்து விளையாடுதெண்டு அறிக்கைகள் கூறுதுங்கோ. அதுவும் வேகமாகப் பரவுதாம். காச்சல் தடுமல் பிடிக்குமாப் போல எயிட்சும் பிடிக்குதாம். என்னவா இருக்குமெண்டு வாயைப் பிளந்து கற்பனை பண்ணிறதைவிட்டுப் போட்டு, உந்த நெருக்கடியான கூட்டு வாழ்க்கைக்கு உடனடியா தீர்வு காணுங்கோ. இல்லாட்டில் எண்ணெய்ச் சட்டியில இருந்து அடுப்புக்குள்ள விழுந்த மாதிரி, சுனாமி பாதிப்பில இருந்து எயிட்ஸ் பாதிப்பில சாகப்போகுதுகள். என்னப்பா கவனம் எடுப்பீங்களோ.......

**இரவில** சூரியன் தெரியாது. ஆனால் பகலில நிலவு தெரியும். அது மாதிரி மழை மப்புக்குள்ள வெயில் அடிக்காது. ஆனால் வெயில் அடிக்கேக்க மழை பெய்யும். என்னடா இது குழப்பமாக்கிடக்கே எண்டு யோசிக்காதேங்கோ. வன்னியில நடந்து கொண்டிருக்கிறதாச் சொல்லப்படுகிற நம்பமுடியாத ஒரு விஷயத்தைச் சொல்லத்தானுங்கோ உந்த பில்ட்டப்பைச் சொல்லுறன். அதாகப்பட்டது தமிழீழ மண் மீட்புக்காகப் பணம் கொடுத்தவைக்கு அந்தப் பணத்தை ரெண்டெழுத்தார் திருப்பிக் குடுக்கினம் எண்டு சொல்லுகினம். வழமையா வாங்கித்தானே பழக்கப்பட்டவை. அதென்ன வாங்கினதைத் திருப்பிக் கொடுக்கினமாமே எண்டிட்டு விசாரிச்சனுங்கோ அதொண்டும் மீளக் கொடுக்கல்லையாம். புலம்பெயர் நாடுகளில எங்கட ஆக்களிட்டை வசூல் செய்த பணத்தில இருந்து மக்களுக்கு உதவினம் எண்டதுக்காக ஒரு கணக்குக்குத்தான் குடுக்கினமாம். பிறகு உதையே பெரிசாக் காட்டி வட்டியும் முதலுமா வசூல் பண்ணிப் போடுவினமாம்.

இதைத்தான் சோழியன் குடுமி சும்மா ஆடாதெண்டு சொல்லுவினமாக்கும். எது எப்பிடியோ பறிச்ச பணத்தில ஒரு பைசாவாவது திருப்பிக் கிடைக்குதே எண்டு சனம் சந்தோசப் படுகுதுகளாம். அதுசரி, உந்தப் பணம் திருப்பிக் கிடைக்குமெண்டு எழுதி வாங்கிக் கொண்டே குடுத்திச்சினம். இல்லையே, அப்ப குடுக்கிறதை வாங்கிக் கொள்ள வேண்டியது தானுங்கோ.....

**பேராசிரியர்** ஒருவர் பிணையில விடக்கூட முடியாத வில்லங்கத்தில மாட்டுப் பட்டிருக்காரெல்லோ. அதுதானுங்கோ வீட்டு வேலைக்கு இருந்த சிறுமி கிட்ட எஜமானா இருக்காம ஏமாத்துக்காரனா மாறி சில்மிஷம் பண்ணினதில சிறுமி கர்ப்பமாயிட்டாள். உப்பிடி சில்மிஷம் செய்தவர் ரெண்டெழுத்துக்காரருக்கு ரொம்ப முக்கியமானவர் எண்டதை அவருக்காக வாதாடிய கூத்தமைப்பு எம்.பி.வக்கீல்மார் புருப் பண்ணிப் போட்டினம். அவை தங்கட வியாக்கியானத்தைக் காட்டி பிணை கேட்டிச்சினம். நீதி வழங்கிறவர் மறுத்துப்போட்டார். சரி, நமக்கு மூக்குப் போனாலும், எதிரிக்கு சகுனம் பிழைக்க வேணுமெண்டிட்டு உந்தப் பேராசிரியரிண்ட விஷயத்தை தென்றலடிக்கிற வானொலியில ஒலிபரப்பாகிற இதயத்தில வீணை வாசிக்கிற நிகழ்ச்சிக்காரர் வெளுத்துவாங்கினம். அது விவாதத்துக்கு விக்கல் வரப்பண்ணுது எண்டு முறையிட்டிச்சினம். வீணை நிகழ்ச்சிக்காரருக்கு கொஞ்சம் அடக்கி வாசிக்கச்சொல்லி மன்றில சொல்லப்பட்டுதாம். சொல்லப்படாத விஷயம் தெரியுமா? தங்களுக்கு வேண்டியவர் தகாமல் நடந்துபோட்டார் எண்டு தெரிஞ்சவுடன வெளியில விஷயம் கசியாமல் ரெண்டெழுத்தார் மூடப் பாத்திச்சினம். அதை எப்படியோ மோப்பம் புடிச்சு வெளியால முதன் முதலில தேங்காய் உடைக்குமாப்போல போட்டு உடைச்சவை வேற யாருமில்லையாம் உந்த இதயத்தில வீணை வாசிக்கிறவை தானாம். அதுக்காகப் பாராட்டாம கண்டிக்கிறதுக்கு மட்டும் எத்தினை குரல் கண்டியளோ.....

# செப்டெம்பர் 11 அமெரிக்காவின் திட்டம்?


## ஆய்வாளரின் திடுக்கிடவைக்கும் தகவல்கள்

அமெரிக்காவில் உள்ள உலக வர்த்தக மையக் கட்டிடங்கள் மீதும், பென்டகன் என்கிற ராணுவத் தலைமையகத்தின் மீதும், 2001ஆம் ஆண்டு செப்டெம்பர் 11ஆம் திகதி அல்-கொய்தா தீவிரவாதிகள் விமானம் மூலம் மோதித் தாக்குதல் நடத்தியது தெரிந்ததே. இது தொடர்பாக அமெரிக்க அரசு ஒரு விசாரணைக் கமிஷன் அமைத்து, அந்தக் கமிஷன் 2004ஆம் ஆண்டு செப்டெம்பரில் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது.

சுமார் அறுநூறு பக்கம் கொண்ட அந்த அறிக்கையின் லட்சக் கணக்கான பிரதிகள் விற்றுத் தீர்ந்தன. ஒசாமா பின் லேடனையும் அவரது ஆப்கான் பங்காளிகளையும் குற்றவாளிகளாகச் சுட்டிக்காட்டி,



அமெரிக்க விமான நிலையங்கள், நிறுவனங்களின் பாதுகாப்பு ஏற்பாடுகளையும், உளவு அமைப்புகளின் கையாலாகாத்தனத்தையும், வேறு சில ஒன்றுக்கும் உதவாத உள்நாட்டுக் குளறுபடிகளையும் மட்டும் கண்டித்துவிட்டு, தேச ஒற்றுமை, தேச நலன் என்று நாலு வார்த்தை நல்லபடியாகப் பேசிவிட்டு முற்றுப் போட்டுவிட்டது இந்த அறிக்கை. தீவிரவாதத்துக்கு எதிராக அமெரிக்க அரசு தொடங்கிய யுத்தத்துக்குப் பலமாக ஒரு ஜே போட்டதுதான் இந்த விசாரணைக் கமிஷன் அறிக்கையின் ஒரு வரிச் சுருக்கம்.



விஷயம் அத்துடன் முடிந்ததாகத் தான் அமெரிக்கர்கள் உள்பட அத்தனை பேரும் நினைத்தார்கள்.

அதுதான் இல்லை. சமீபத்தில், எரிக் ஹ.்.ப்ஸ்மித் என்கிற புலனாய்வுச் செய்தியாளரின் வலுவான கேள்விகள் "செப்டெம்பர் 11 தாக்குதல் - ஓர் ஆய்வு" என்கிற புத்தகம் அமெரிக்காவில் வெளியானது. இந்தப் புத்தகத்துடன் சுமார் இரண்டேமுக்கால் மணி நேரம் ஓடக்கூடிய ஒரு CD யையும் சேர்த்தே தருகிறார்கள். Confronting the Evidences : A call reopen 9/1 1 Investigation என்கிற பெயரில் வந்திருக்கும் இந்த CD, அமெரிக்க அதிபரின் நாற்காலிக்கு அடியில் ஓசைப்படாமல் அணுகுண்டு வைக்கும் காரியத்தைக் கர்மசிரத்தையாகச் செய்கிறது.


விஷயம் மிகத் தீவிரமானது. செப்டெம்பர் 11 அன்று அல்-கொய்தா நிகழ்த்திய தாக்குதலை அமெரிக்க அரசின் புலனாய்வு அமைப்புகள் முயன்றிருந்தால் தடுத்திருக்கலாம், தவிர்த்திருக்கலாம் என்று 9/11 கமிஷன் அறிக்கையே ஒரு மாதிரி சுற்றி வளைத்துச் சொல்லிவிட்டது.

இந்த விவரணப் படமோ, தாக்குதல் நடக்கட்டும் என்று அமெரிக்க அரசு வேண்டுமென்றே பேசாமல் இருந்தது என்று முகத்தில் அறைந்தாற் போல் சொல்கிறது.


ஒரு மகா பயங்கரத் தாக்குதல் திட்டமிடப்படுகிறது. அது பற்றிய விவரங்கள் அரசுக்குக் கிடைக்கின்றன. வசமாகக் கையில் சிக்கிய சில அல் - கொய்தா ஆட்களைக் கூட அமெரிக்க உளவுத்துறை அப்போது கோட்டைவிட்டிருக்கிறது.

இந்த விவரணப் படம் எழுப்பும் கேள்வி இதுதான்...கோட்டை விடப்பட்டதா, அல்லது வேண்டுமென்றே தப்பியோட விட்டார்களா?

நான்கு விமானங்கள் கடத்தப்படுகின்றன. உடனே என்ன செய்திருக்க வேண்டும். அவற்றைப் பின் தொடர்வதற்கு எ.்.ப்- 16 ரகப் போர் விமானங்களை உடனே அனுப்பியாக வேண்டுமல்லவா? ஆனால் சொல்லிவைத்த மாதிரி செப்டெம்பர் 11



அன்று மட்டும், தீவிரவாதிகளின் தாக்குதல் அபாயம் இருக்கிறது என்று உளவு அமைப்புகள் கழுதையாகக் கத்திக்கொண்டிருந்த நேரத்தில்,



எதற்காக அத்தனை எ.்.ப்-16 ரகப் போர் விமானங்களையும், பயிற்சிக்காக என்று சொல்லி, கனடாவுக்கும் அலாஸ்காவுக்கும் அனுப்பிவைத்தார்கள்?


இதுவும் தற்செயல் என்று அமெரிக்க அரசு சொல்கிறது. இல்லை, திட்டமிட்ட நடவடிக்கை என்கிறது இந்த விவரணப் படம்.

கடத்தப்பட்ட விமானங்களுள் ஒன்றான அமெரிக்கன் - 77 என்கிற போயிங் 757, அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் மீது மோதி, கடுமையான நாசத்தை விளைவித்தது என்று அமெரிக்க அரசு, போட்டோக்கள் வெளியிட்டு உலகுக்குக் காட்டியது. இந்தப் போட்டோக்கள் உண்மை என்றால், மோதியது போயிங் 757 இல்லை என்கிறது இந்த விவரணப் படம். காரணம் இந்தப் புகைப்படங்களின்படி, விமானம் மோதியதால் சேதமடைந்த பகுதிகளின் நீள, அகல, உயரங்களை வைத்துப் பார்க்கும்போது, அது விமானத்தின் அளவைவிடச் சிறியதாகவே இருக்கிறது. கடத்தப்பட்ட போயிங் 757 விமானம்தான் மோதியது என்றால், சேதம் இதைவிட அதிகமாக இருந்திருக்க வேண்டும். அல்லது வேறு விமானத்தைக் கொண்டு மோதி இருக்க வேண்டும் என்கிறது இந்த ஆவணப் படம்.

இன்னொரு விஷயம்...பென்டகன் இருக்கும் இடத்தில் எந்த விமானமும் அத்தனை சுலபமாகப் பறந்து வந்துவிட முடியாது. உடனே மோப்பம் பிடித்து, தானியங்கி விமான எதிர்ப்பு ஏவுகணைகள் தாக்கத் தொடங்கிவிடும். எனவே அமெரிக்கன் - 77 விமானம் பறந்து வந்து மோதியபோது, அந்த ஏவுகணைகளெல்லாம் என்ன ஆயின என்று கேட்கிறது இந்த விவரணப்படம்.

இந்த விவரணப்படத்தின் மிக முக்கியமான கட்டம், வர்த்தக மையக் கட்டிடங்கள் இடிந்து விழுந்த விதம் பற்றியது. விமானம் மோதினால் ஒரு கட்டிடம் எப்படித் தள்ளாடித் தடுமாறிச் சாய்ந்து விழ வேண்டும்?! ஆனால், இந்தச் சம்பவத்தின்போது அப்படியே நொறுங்கித் தரைமட்டமானதே, அது எப்படி? இது குறித்து ஜெ.்.ப் கிங் என்கிற பௌதீக விஞ்ஞானி, இந்தக் CDயில் பேசுகிறார்.

பௌதீகவியலின்படி, கட்டிடம் நொறுங்கிய விதம் கண்டிப்பாக விமானம் மோதியதால் இருக்க முடியாது என்பதே அவரது உறுதியான முடிவு. வர்த்தக மையக் கட்டடங்கள் இரண்டிலும் ஒவ்வொரு தளத்திலும் ஒவ்வொரு மூலையிலும் குண்டு வைத்து ஒரே சமயத்தில் வெடிக்கச் செய்தால் மட்டுமே, அப்படி அப்பளம்போல் நொறுங்கி அதே இடத்தில் விழும். (பழைய கட்டிடங்களை இடிப்பதற்கு அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு தேசங்களில் இந்த முறைதான் கையாளப்படுகிறது.) விபத்தின்போது எழுந்த கரும்புகை, விமானம் மோதிய விநாடிக்குக் கால் அல்லது அரைக்கால் விநாடி முன்பாகவே கட்டிடத்தினுள் தெரிந்த தீப்பிழம்பு (புகைப்படங்களையும், வீடியோ ஆதாரங்களையும் அத்தனைத் துல்லியமாக அலசியிருக்கிறார்கள்!) ஆகியவற்றை இதற்குச் சாட்சியாக வைத்து, கண்டிப்பாக வர்த்தக மையக் கட்டடங்களுக்குள் குறைந்தது 14



தொன் வெடிபொருளாவது வைத்திருந்தால்தான் இப்படி நொறுங்கியிருக்க முடியும் என்று அடித்துச் சொல்கின்றது இந்த விவரணப்படம்.

*அதிர்ச்சித் தகவல்கள் அடுத்த வாரமும்....*

## விளம்பரப் பகுதி

### தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒருவருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3,500 | ரூ.1,750 | ரூ.875 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4,400 | ரூ.2,200 | ரூ.1,100 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3,100 | ரூ.1,550 | ரூ.775 |
| உள்ளூர் | ரூ. 1,050 | ரூ.525 | ரூ.265 |


சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரைப் பெற விரும்புவோர் **D.D. Enterprises** என்ற பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர், தினமுரசு **16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka** என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் **"Manager, Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06.** என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ.மெயில் :- **(E-mail):– murasu@sltnet.lk**





## மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக சக்தியால் பிரிந்தவர்கள் ஒன்று சேர, கணவன் - மனைவி பிணக்கு தீர்ந்து, ஒற்றுமையாக இருக்க, திருமணம் கை கூட, மனங்கவர்ந்த காதலன் காதலி ஒன்று சேர, கல்வி ஞான கவசம் பெற, குபேர வாழ்வு கிட்ட, வெளிநாட்டு பிரயாணத்தடை நீங்க, சகல தோஷங்களும் நிவர்த்தி செய்து கொள்ள அனைத்து விடயங்களுக்கும் நேரில் வருகை தரவும்.

அத்துடன் அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்தது இல்லை. நடந்தது, நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு எத்தனையாம் திகதி எத்தனை மணிக்கு நிறைவேறும் என்பதை திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ளவும், மற்றும் கைரேகை பார்த்து தெரிந்து கொள்ள பிறந்த திகதி தேவையில்லை.

வாங்கும் பணத்திற்கு உத்தரவாதம் கொடுப்பதென்றால் அது நான் மட்டுமே! வெளிநாட்டவர்களுக்கு விசேட சலுகையும் 24 மணித்தியால தொலைபேசி சேவையும் உண்டு.

பேராசிரியர் டாக்டர்
P.K. சாமி J.D.G.A.N (J.P)
162, கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு - 13.

T/NO 2342463/2342464
2470615/2431137
Fax :- 2344831


## சிறுகதை, கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத்தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி.

- ஆசிரியர்

## இன்னொருவர் பார்வையில்

# சமாதான ஏற்பாட்டாளர்களின் மாறுதல் தற்போது சாத்தியமா?

**‘ஏற்பாட்டாளர் செயன்முறைக்கு மாற்றுவழி தேடுதல்’ என்ற தலைப்பில் அரசியல் விமர்சகர் ஜெஹான் பெரேரா எழுதிய கட்டுரை கடந்த ஆறாம் திகதி டெயிலி மிரர் பத்திரிகையில் வெளியாகியிருந்தது. தற்போதைய சமாதான ஏற்பாட்டாளரான நோர்வேக்குப் பதிலாகப் புதிய ஏற்பாட்டாளர்களைச் சேர்த்துக் கொள்வதோ ஏற்பாட்டாளர்களில் மாற்றம் செய்வதோ தற்போதைக்கு முடியாத காரியமென்பது கட்டுரையாளரின் வாதம். நோர்வே மீது குற்றஞ்சாட்டுவதும் பயனில்லையென்று கூறும் கட்டுரையாளர், சம்பந்தப்பட்ட இரு தரப்புகளும் பரஸ்பர நம்பிக்கையோடு செயற்பட்டால் மட்டுமே முயற்சிகள் வெற்றியளிக்குமென்றும் கூறுகிறார். அவநம்பிக்கைகளைத் தீர்த்து பரஸ்பர நம்பகத்தன்மையைக் கட்டியெழுப்புவதில் நோர்வே தவறிவிட்டதென்ற உண்மையைக் கட்டுரையாளர் காணத் தவறிவிட்டார். புலிகளுக்குச் சார்பாக நோர்வே சில சமயங்களில் நடந்து கொண்டிருக்கிறதென்ற குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கத் தவறும் கட்டுரையாளர் தவறு இருதரப்புகள் மீதும் இருக்கிறதென்று கூறுவது சப்பைக்கட்டு வாதமாகும்.**

யுத்த நிறுத்தம் தொடர்பான பேச்சுவார்த்தையை எங்கு நடத்துவதென்ற பிரச்சினை தொடர்ந்தும் இழுபறியாக இருந்து வருகிறது. பேச்சுவார்த்தை இடம்பெறும்போலத் தெரியவில்லை. ஆனால், பேச்சுவார்த்தைகள் பற்றிய பேச்சு ஓர் நோக்கை நோக்கித் திரும்பியுள்ளது. அதாவது வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலை தொடர்பான கவனத்தை இப் பேச்சு பற்றிய சர்ச்சை திசை திருப்பியுள்ளது. அத்துடன் மீண்டும் யுத்தம் ஏற்படும் என்று எதிர்பார்க்கத் தேவையில்லையென்று பொதுமக்களுக்கு இது மீள உறுதியளித்துள்ளது.

எனவே சமூகத்தில் நிலவிவந்த பதற்றம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. அத்துடன் ஏதோ நடக்கப்போகிறதென்று இருந்த நிலையோடு ஒப்பிடுகையில் ஆச்சரியமடையக் கூடிய அளவுக்கு பதற்றமற்ற தன்மை நிலவுகிறது. வன்செயலால் ஆத்திரமூட்ட முடியாதளவுக்கு சமூகத்தில் முதிர்ச்சித் தன்மையும் நிலவுகிறது.

அரசியல் முதிர்ச்சியென்ற வரவேற்கக்கூடிய அறிகுறியொன்றும் தென்படுகிறது. தற்போதைய தேர்தல் போட்டிகளின்போது வெளிப்படையாகத் தெரியும் இனப் பிணக்கை கையாள்வதில் இருதரப்பு இணக்கத்தன்மை இருப்பதே இந்த முதிர்ச்சியாகும்.

புலிகளோடு பேச்சுவார்த்தை நடத்தித் தீர்வு காண்பது தொடர்பாகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவோ அல்லது ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவோ பரஸ்பரம் குற்றச்சாட்டுகளைத் தெரிவிக்கவில்லை. முன்னைய தேர்தல்களிலெல்லாம் இவ்வாறு தெரிவிக்கப்பட்டு வந்த விமர்சனங்கள், இப்போது இல்லை. 1994, 1999, 2001, 2004ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களின்போது பிரதான போட்டியாளர்கள் ஒருவர் மற்றவர் மீது துரோகியென குற்றஞ் சாட்டினர். கடந்த காலங்களில் இடம்பெற்று வந்த கேவலமான செயற்பாடுகளில் தற்போதைய இரு பிரதான போட்டியாளர்களில் எவருமே இதுவரை ஈடுபடவில்லை. லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலைக்கு மத்தியில் இவ்வாறு அமைதியான தேர்தல் பிரசார வேலைகள் மேற்கொள்ளப் படுவது பெரிதும் குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

மூன்றரை வருட யுத்த நிறுத்த காலத்தில் இடம்பெற்ற மிக மோசமான அத்துமீறல் இந்தப் படுகொலையாகும். எனினும் இப் படுகொலைக்குப் பின்னர் எந்தவொரு பொறுப்பு வாய்ந்த அரசியல்வாதியோ அல்லது அரசியல் கட்சியோ இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அல்லது பலாத்கார ரீதியில் பழிவாங்கும் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதற்குப் பதிலாகப் புலிகள் மீது சர்வதேசத் தடைகள் விதிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இது இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தும் சுமையைச் சர்வதேச சமூகத்தின் மீது சுமத்துவதற்கான ஆர்வத்தை வெளிப்படுத்துகிறது. உள்ளூர் அல்லது இலங்கைக் கட்சிகளால் யுத்த நிறுத்த மீறல்களை நிறுத்த முடியாதென்ற வலுவான கருத்து நிலவுகிறது. சர்வதேச சமூகத்தின் முண்டுகொடுப்பின் மூலம் மட்டுமே இப் பெருஞ் செயலை மேற்கொள்ள முடியுமென்றும் கருதப்படுகிறது.

இந்த நிலையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப் புலி இயக்கத் தலைவர் பிரபாகரனோடு நேரடிப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடப் போவதாகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறியிருப்பது, முரண்பாடானதாக இருக்கிறது. இதே நேரம் புலிகளுக்கும் அரசாங்கத்துக்குமிடையிலான நம்பகத்தன்மையும் விசுவாசமும் மோசமாகச் சீரழிந்துள்ளது. புலிகள் மீது சர்வதேச சமூகம் தடைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதற்காக அரசாங்கம் தன்னாலியன்ற அனைத்தையும் செய்ய முன்வந்துள்ளது. இந்த நிலையில்தான் மூன்றாந் தரப்பொன்றின் உதவியின்றி புலி இயக்கத் தலைவருடன் பேச்சுவார்த்தை நடத்துகின்ற தனது விருப்பத்தைப் பிரதமர் வெளிப்படுத்தியுள்ளார். சம்பந்தப்பட்ட தரப்புகள் பரஸ்பரம் நம்பிக்கை வைப்பதற்கு ஏதாவது காரணமிருக்கும் பட்சத்திலேயே இவ்வாறான பேச்சுவார்த்தை நடைபெறமுடியும். இதுவே எந்தவொரு பேச்சுவார்த்தைக்குமான அடிப்படையாகும்.

**புலிகளுக்கும் அரசாங்கத்துக்குமிடையிலான நம்பகத்தன்மையும் விசுவாசமும் மோசமாகச் சீரழிந்துள்ளது. புலிகள் மீது சர்வதேச சமூகம் தடைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதற்காக அரசாங்கம் தன்னாலியன்ற அனைத்தையும் செய்ய முன் வந்துள்ளது. இந்த நிலையில்தான் மூன்றாந் தரப்பொன்றின் உதவியின்றி புலி இயக்கத் தலைவருடன் பேச்சுவார்த்தை நடத்துகின்ற தனது விருப்பத்தைப் பிரதமர் வெளிப்படுத்தியுள்ளார். சம்பந்தப்பட்ட தரப்புகள் பரஸ்பரம் நம்பிக்கை வைப்பதற்கு ஏதாவது காரணமிருக்கும் பட்சத்திலேயே இவ்வாறான பேச்சுவார்த்தை நடைபெறமுடியும். இதுவே எந்தவொரு பேச்சுவார்த்தைக்குமான அடிப்படையாகும்.**

சம்பந்தப்பட்ட இருதரப்பும் பரஸ்பரம் நம்பிக்கை வைக்கத் தவறும் பட்சத்தில், அவர்களுக்கிடையில் ஏற்படும் இணக்கம் நிச்சயமாக அமுல்படுத்தப்படுமென்று அவர்கள் நம்பிக்கை கொள்ள மாட்டார்கள். தனிப்பட்ட வாழ்க்கையில் இடம்பெறும் நாளாந்தப் பேச்சுகளுக்கு மட்டுமல்ல, நாடுகளுக்கிடையிலான பேச்சுவார்த்தைக்கும் இது பொருந்தும்.

### நம்பிக்கை இழத்தல்

நம்பிக்கையில்லாததாலேயே மூன்றாம் தரப்பின் சேவைகள் தேவைப்படுகின்றன. அதாவது நிலைமையை மற்றத் தரப்புக்கு எடுத்து விளக்கி, இணக்கம் காண்பதற்கு சாட்சியொன்று இருக்கிறதென்பதை மூன்றாம் தரப்பு எடுத்துக் காட்டுகிறது.

புலி இயக்கத் தலைவருடன் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்துவதெனப் பிரதமர் முன் வைத்திருக்கும் யோசனை, சமாதான முன்னெடுப்புகளில் இருந்த நம்பிக்கை இழக்கப்பட்டுவிட்டதை எடுத்துக் காட்டுகிறது. நோர்வே ஏற்பாட்டாளர்கள் வகித்த பாத்திரம் குறித்தும் நம்பிக்கையீனம் ஏற்பட்டுள்ளதைக் காட்டுகிறது. நோர்வே ஏற்பாட்டாளர்கள் குறித்த அவநம்பிக்கை பிரதமருக்கு மட்டும் ஏற்பட்டிருக்கவில்லை. சிங்கள மக்களில் பெரும்பான்மையினர் மத்தியிலும் அரசாங்கத்திலும் ஏற்பட்டிருக்கக்கூடிய அவநம்பிக்கையையே பிரதமர் பிரதிபலித்திருக்கிறார்.

இதனால்தான் அரசாங்கம் ஐ.நா.வின் விசேட பிரதிநிதி லக்டார் பிரகிமியை இலங்கைக்கு அழைத்து, சமாதான முன்னெடுப்புகள் தொடர்பான நிலைமையை மதிப்பீடு செய்யுமாறு கேட்டுக்கொள்ளத் தீர்மானித்தது. சமாதான முன்னெடுப்புகள் பற்றி தொழில்சார் மற்றும் நிபுணத்துவம், மதிப்பீடொன்றினை அவர் மேற்கொண்டிருந்தாலும், சமாதான முயற்சியில் ஐ.நா. பங்களிக்க வேண்டுமென்று அவர் சிபார்சு செய்யமாட்டார் போலத் தெரிகிறது.

நோர்வே ஏற்பாட்டாளர்கள் மீது உண்மையிலேயே நம்பிக்கை இழக்கப்பட்டிருந்தால், அந்த நம்பிக்கை இழப்பைச் சீர்செய்யக் கூடிய வழிவகைகளை அவர் தெரிவிப்பாரென்று எதிர்பார்க்கப்படுகிறது. புதிதாக வேறொன்றினைத் தேடிப் பிடிப்பதை விட, இப்போதிருக்கக் கூடிய ஒன்றுடன் சேர்ந்து செயலாற்றி, மேலும் அதனைக் கட்டியெழுப்புவது நல்லது. ஏனெனில் ஏற்பாட்டாளர்கள் தொடர்பாக ஏதாவது மாற்றம் செய்வதென்றாலோ அல்லது யாரையாவது சேர்த்துக் கொள்வது என்றாலோ, பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இரு தரப்பும் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

புதியதொரு ஏற்பாட்டாளரை அரசாங்கம் விரும்பி, அதனைப் புலிகள் மறுக்கும் பட்சத்தில் அல்லது புலிகள் விரும்பி அரசாங்கம் மறுக்கும் பட்சத்தில் இதற்கான சாத்தியம் ஏற்படப் போவதில்லை.

இன்றைய கட்டத்தில் நோர்வே ஏற்பாட்டாளர்களுக்கு மாற்றீடாக ஓர் ஏற்பாட்டாளர் ஈடுபடுத்தப்பட மாட்டாரென்பதற்கு இரு முக்கியமான பூகோள, அரசியல் காரணங்கள் இருக்கின்றன. இலங்கையின் சமாதான முயற்சிகளில் மிகவும் அக்கறை கொண்டுள்ள ஐரோப்பிய நாடுகள், நோர்வே ஏற்பாட்டாளர்களுக்கு வலுவான பின்னணியாக உள்ளனர் என்பதே இதற்குக் காரணமாகும். நோர்வேக்கு ஆதரவாக அமெரிக்காவும் ஜப்பானும் விளங்குகின்றன. இதனால்தான் நோர்வேயுடனும் ஐரோப்பிய யூனியனுடனும் இணைந்து அவை தம்மை இணைத் தலைமை நாடுகளென அழைத்துக் கொள்கின்றன.

இந்த நாடுகளில் சில, நோர்வே சிறந்த பணிகளை ஆற்றியிருக்கலாமெனக் கருதலாம். ஆனால் இவற்றில் எவையுமே அவ்வாறு பகிரங்கமாகக் கூறவில்லை. அல்லது தாம் சிறந்த பணிகளை ஆற்றியிருப்பதாகவும் அவை கூறவில்லை. எனவே நோர்வே ஏற்பாட்டாளர்களின் முயற்சிக்கு இவை தொடர்ந்தும் ஆதரவு வழங்கும். ஏற்பாட்டாளரை மாற்றுவது இந்தக் கட்டத்தில் கஷ்டமானது என்பதற்கான இரண்டாவது பூகோள அரசியல் காரணம், அதனை இந்தியா விரும்பாதது என்பதுதான். புலிகள் இயக்கத்தை இந்தியா தடை செய்திருப்பதாலும் புலி இயக்கத் தலைவர்கள் இந்தியாவின் தேடப்படுவோர் பட்டியலிலிருப்பதாலும் இந்தியாவினால் சமாதான ஏற்பாட்டாளர்கள் என்ற பங்கினை வகிக்க முடியாது. அது மட்டுமல்ல, தனது சொந்தக் கொல்லைப் புறத்தில் மேலும் பல நாடுகள் ஏற்பாட்டாளர்களாக வருவதை இந்தியா ஏற்றுக்கொள்ளாது. நிச்சயமாக ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டையும் ஏற்றுக்கொள்ளாது. அத்துடன் இலங்கை சமாதான முன்னெடுப்புகள் தொடர்பாக நோர்வேயும் இந்தியாவும் சிறந்த செயற்பாட்டின் இணைக் கட்டமைப்பிற்கு பகிரங்கமாக ஆதரவளிக்க இந்தியா எடுத்திருக்கும் தீர்மானம் இலங்கையின் சமாதான முயற்சியை பலப்படுத்துவதற்கு நோர்வே ஏற்பாட்டாளர்கள் எடுக்கும் முடிவையடுத்து அது ஆதரிக்கிறதென்பதை உறுதிசெய்கிறது.

### முக்கிய பொறுப்பு

சமாதான முயற்சிகள் தோற்றுப் போனமைக்கு ஏற்பாட்டாளர்களே காரணமென்று கூறுவதிலும் இந்த சமாதான முயற்சி ஏன் தோற்றுப் போனது, எங்கே தோற்றுப்போனது என்பதை அரசாங்கமும் புலிகளும் ஒரு மேசையில் அமர்ந்து கண்டு பிடிக்க வேண்டும். குறிப்பாக இவர்கள் ஆராய வேண்டிய மூன்று முக்கிய விடயங்கள் இருக்கின்றன.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதில் ஏற்பட்ட குறைபாட்டை முதலில் கண்டறிய வேண்டும். எவ்விதத் தடைகளும் அமுல்படுத்தப்படாத நிலையில் பல கொலைகள் தொடர்ச்சியாக இடம்பெற அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறான கொலைகள் நிறுத்தப்பட வேண்டுமென்று எவ்விதக் கோரிக்கைகளும் விடுக்கப்படவில்லை. இந்தக் கொலைகளை நிறுத்தக் கூடியவர்கள் அரசாங்கமும் புலிகளும்தான் என்பதேயொழிய ஏற்பாட்டாளர்களல்ல.

இரண்டாவது விடயம் முஸ்லிம் தரப்பு சம்பந்தப்பட்டது. சமாதான முயற்சிகள் தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்களில் முஸ்லிம்களின் நேரடியான கருத்துக்கள் புறந்தள்ளப்பட்டிருப்பதே இந்த இரண்டாவது பிரச்சினையாகும்.

இதுவும் கூட அரசும் புலிகளும் தீர்வுகாண வேண்டிய விடயமாகும். சமாதான ஏற்பாட்டாளரால் தீர்வு காணப்படக் கூடிய விடயமல்ல இது.

மூன்றாவது பிரச்சினை, வடக்கு - கிழக்குக்கு இடைக்கால நிர்வாக சபை ஏற்படுத்தத் தவறியதாகும். இதனால் வடக்கு - கிழக்கில் முக்கிய அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமல் தடுக்கப்பட்டுள்ளது. இந்த மூன்று தோல்விகளுக்காகவும் சுயகௌரவமுள்ள எந்தவொரு இலங்கையனும் நோர்வே ஏற்பாட்டாளர்கள் மீது குற்றம் சொல்லமாட்டான்.

மாறாக பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட இலங்கைத் தரப்புகளிடமே இதற்கான முக்கிய பொறுப்புண்டு. முதிர்ச்சியடைந்த தரப்புகளென்ற வகையில் இவை தாமாகவே இப்பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள வேண்டும். இந்தச் சுமையை நோர்வே ஏற்பாட்டாளர்கள் மீது திணிக்க முடியாது. பிரச்சினையைத் தீர்க்கும் உணர்வோடு விசுவாசமாகப் பேச்சுவார்த்தை நடத்துவது பிணக்கில் சம்பந்தப்பட்ட தரப்புகளின் கடமையாகும். தீர்வுகள் வெளியிலிருந்து திணிக்கப்பட முடியாதவை.

சமாதான ஏற்பாட்டாளர்களால் ஊக்குவிப்புகளை மேற்கொள்ள முடியும். தமது பிணக்குகளை விரைவாகவும் வெற்றிகரமாகவும் தீர்ப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்புகளை பேச்சுவார்த்தையில் ஈடுபடுத்துவது இதற்குள் அடங்கும்.


ஆனால், பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முறையில் இப்பேச்சுவார்த்தையில் முக்கியமாகப் பயன்படுத்த வேண்டிய பொறுப்பு அரசுக்கும் புலிகளுக்குமே உண்டு. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவோ அல்லது புலிகளிடம் பேச விரும்பும் எவருமோ இந்த மூன்று முக்கிய விடயங்களையும் அத்துடன் அவ்வாறான ஏனைய விடயங்களையும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கோடு பேசினால் மட்டுமே பதில் கிடைக்கும்.

*நன்றி :- டெய்லி மிரர்*

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

கட்சியிலயே எத்தனையோ கவிஞர்கள் இருக்காங்களே. அவங்களை ஆதரிக்கலாமேங்கறாங்க... உங்களை விடறத்துக்கு எனக்கு இஷ்டமில்லே... அதனால நீங்க வீட்ல எப்படி வேணும்னாலும் பக்திமானா இருந்துக்குங்க... வெளிய வரச்சே, நான் சார்ந்திருக்கிற கழகத்தின் கொள்கைக்கேற்ப, நெத்தில விபூதி குங்குமம் இல்லாம வந்தாத்



தேவலே..."

திரு.எம்.ஜி.ஆர். சொன்னதும் நான் ஒரு வினாடி சிந்தனையில் ஆழ்ந்தேன். பிறகு திரு. எம்.ஜி.ஆரிடம் ஒரு தன்னிலை விளக்கத்தை மிகத் தெளிவாக அளித்தேன்.

"அண்ணே! நான் தீவிரமான முருக பக்தன்.. என்னை உங்களோட இணைச்சதும் அந்த முருகன்தான்.. இப்படியிருக்கறச்சே நான் விபூதியை விட முடியாது; என்னால உங்களுக்கு தர்மசங்கடமான நிலைமை வேணாம்.. நான் ஒதுங்கிக்றேன்.." என்று நான் சொன்னவுடன்..

எம்.ஜி.ஆர். என் இரு கரங்களையும் பற்றி,

"சரி.. இந்த விஷயத்தெ இத்தோடு நிறுத்திப்பம்.. வாங்க, தியேட்டருக்குள்ள போலாம்...." என்று என் தோளில் கை போட்டவாறு ரிக்கார்டிங் தியேட்டருக்குள் அழைத்துச் சென்றார். என்னுடைய உணர்வுகளை எம்.ஜி.ஆர். புரிந்து கொண்டதால் எனக்கு அவர் மீது மேலும் மதிப்பும் மரியாதையும் கூடிற்று.

இந்த இடத்தில், இன்னொரு உண்மையையும் நான் சொல்ல வேண்டும்.

அண்ணன் திரு.எம்.ஜி.ஆர். எந்தக் காலத்திலும், தன்னுடைய இமேஜை உயர்த்துமாறு பாடல் வரிகளை நான் எழுத வேண்டும் என்று என்னிடம் சொன்னதேயில்லை.

*'முன்றெழுத்தில் என் மூச்சிருக்கும்;*
*'கொடுத்ததெல்லாம் கொடுத்தான்;*
*'நான் செத்துப் பிழைச்சவண்டா;*
*'நான் ஆணையிட்டால்'* -

போன்ற பாடல்களெல்லாம் நானாகத் தன்னிச்சையாகப் புனைந்ததே தவிர. எம்.ஜி.ஆர். எழுதச் சொல்லி எழுதியவை அல்ல; இது கடவுள் சத்தியம்.

இன்னும் உண்மையைக் கொஞ்சம் அகலமாகச் சொல்லப் போனால் - தன்னை 'வள்ளல்' 'மன்னன்' என்றெல்லாம் எழுதப்படுவதை அவர் கூச்சத்தோடு என்னிடம் மறுத்திருக்கிறார்.

அவர்பால் எனக்கு இருந்த அன்பின் காரணமாகவும். விருந்தோம்பல், எளிமை முதலிய அவரது உயர்ந்த பண்புகளை உடனிருந்து பார்த்ததாலும் - நானே அவ்வாறு அவரைப் போற்றிப் புகழ்ந்து பாடல்களை எழுதினேன்.

அவருக்காக நான் எழுதிய வரிகள் ஒவ்வொன்றும் அவர் வாழ்வில் அப்படியே பலிக்க ஆரம்பித்தது.

'தமிழில் ஒரு சொல் வெல்லும்; ஒரு சொல் கொல்லும். உங்க சொல், என்றும் வெல்லும் சொல்லாகவே இருக்க வேண்டும். நானே அனுபவபூர்வமாகப் பார்த்திருக்கிறேன். உங்க வாக்கு அப்படி பலிக்கிறது. ஆகவே நீங்கள் யாரையுமே வாழ்த்தித்தான் பாட வேண்டும்..' என்று எம்.ஜி.ஆர் என்னிடம் பலமுறை சொல்லியிருக்கிறார். அப்போதெல்லாம், என் நாக்கில் நாற்காலி போட்டமர்ந்திருக்கும் கலைமளுக்கு நான் மனதார நன்றி சொல்லியிருக்கிறேன்.


திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் திடீரென்று உடல்நலம் பாதிக்கப்பெற்று, அப்பல்லோ மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப் பெற்றிருந்தபொழுது, மிகுந்த மனச்சுமையோடு அவரைப் பார்ப்பதற்காக ஆஸ்பத்திரிக்குச் சென்றேன்.

அப்போது அமைச்சராக இருந்த என் அருமை நண்பர் திரு. ராகவானந்தம் அவர்கள், என்னை எம்.ஜி.ஆர். அனுமதிக்கப்பெற்றிருந்த அறைக்கு சற்றுத் தூரம் வரை அழைத்துச் சென்றார். எவ்வளவு பெரிய VIPயாக இருந்தாலும் அந்த இடத்திற்கு மேல் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று ராகவானந்தம் அவர்கள் சொன்னார்கள். (தொடரும்.......)




---

**உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அனுபவக் கட்டுரைத் தொடர்....**




**இது** மிகைப்படுத்தப்பட்ட கூற்றாகவும் இருக்கலாம். ஆனால் இந்தக் குழுக்களில் சோவியத் உளவாளிகள் இடம் பெறக்கூடும் என்பதை மறுப்பதற்கில்லை. இந்த தூதுக் குழுக்கள் வெளிநாடுகளுக்குச் சென்று அங்குள்ள தொழிற்சாலைகளை பார்வையிடும் போதே அங்கு வேலை பார்க்கும் சில மனிதர்களோடு தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டுவிடுகிறார்கள்.

பிறகு அவர்களை கையாட்களாகப் பயன்படுத்தித் தேவையான தகவல்களைத் தெரிந்து கொள்ளுகிறார்கள்.

மேற்கு ஜெர்மனியின் போர் விமானத் தொழிற்சாலையின் தலைமை எஞ்சினியரும் இப்படித்தான் ரஷ்யர்களுக்கு நெருக்கமானார்.

அந்தத் தலைமை எஞ்சினியர் குடும்பத்தோடு மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்ந்தவர். எல்லோரிடமும் சகஜமாகப் பழகுகின்றவர். அவர் வாழ்ந்த பகுதியிலுள்ள பொழுது போக்கு அமைப்புகளில் முக்கிய பங்கேற்று அனைவரின் அன்பிற்கும் பாத்திரமானவர். இப்படிப்பட்ட மனிதர் தன்னிடம் எப்போதும் மிகச் சிறிய கேமரா ஒன்றை மறைத்து வைத்திருந்தார் என்பதும் அலுவலகத்தில் இருக்கும்போதே திட்ட வரைபடங்களை புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்தார் என்பதும் எத்தனை பேருக்குத் தெரியும்? அவரோடு மிக நெருக்கமாகப் பழகியவர்கள்கூட, அவரை ஒரு உளவாளி என்று சந்தேகப்பட்டிருக்க முடியாது.

தொழில் நிமித்தமாக வெளிநாடுகளுக்குச் செல்லுகின்ற வாய்ப்பு அவருக்கு நிறைய இருந்ததால், தான் சேகரித்த தகவல்களைச் சேர்க்க வேண்டிய இடங்களில் சுலபமாக சேர்த்துவிடுவார்.

முதல் முதலாக அவரைப் பற்றி இப்படிப்பட்ட சந்தேகங்கள் கிளப்பப்பட்டபோது, அவருடைய அலுவலகத்தில் வேலை பார்த்தவர்கள் இதெல்லாம் வெறும் கட்டுக்கதை என்று கேலி செய்தார்கள். ஆனால் மேற்கு ஜேர்மன் உளவுத் துறையினர் மட்டும் எதையும் அலட்சியப்படுத்தாமல் அவருடைய நடவடிக்கைகளைக் கவனமாக கண்காணிக்கத் தொடங்கினார்கள். போதுமான தடயங்கள் கிடைத்தவுடன் அவர் கைது செய்யப்பட்டார். இதைத் தொடர்ந்து தீவிரமான வேட்டை ஆரம்பமாயிற்று. ரஷ்யாவிற்காக மேற்கு ஜெர்மனியில் மட்டும் பன்னிரெண்டாயிரம் பேர் உளவு வேலையில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிய வந்தது. இதில் சிலர் மிகப் பொறுப்பான பதவியில் இருந்து வந்தவர்கள்.

### மொரார்ஜீ விவகாரம்

செய்மூர் ஹெர்ஷ் என்பவர் அமெரிக்க பத்திரிகையாளர். எதையும் துருவித் துருவி ஆராய்ந்து தகவல்கள் சேகரித்து, பத்திரிகைக் கட்டுரைகள் எழுதியவர்.

அமெரிக்காவில் சிறந்த எழுத்தாளர்களுக்கு அளிக்கப்படும் புலிட்ஸர் பரிசு பெற்றவர். இந்தியாவின் மூத்த தலைவர்களில் ஒருவரும், பிரதமராக இருந்தவருமான மொரார்ஜி தேசாய் அமெரிக்க CIA உளவு நிறுவனத்திற்காக வேலை பார்த்தவர் என்று தன்னுடைய புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.


இந்திய அமைச்சரவை கூட்டங்களில் மேற்கொள்ளப்படும் முடிவுகள் எப்படியோ உடனுக்குடன் அமெரிக்கர்களுக்குத் தெரிந்துவிடுகிறது. சில மணி நேரங்களிலேயே தெரிந்து விடுகிறது என்பது இன்னும் சுவாரஸ்யமான விஷயம் என்றெல்லாம் செய்மூர் குறிப்பிட்டு இருக்கிறார்.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

---

*ஒரு ஆணை நிராகரிக்க, பெண்கள் சொல்லும் தலையாய பத்து காரணங்கள் (அதன் உண்மையான அர்த்தத்துடன்)*



உன்னை என் சகோதரன் போல நினைத்துக் கொண்டிருக்கிறேன். (நீ அசிங்கமாக இருக்கிறாய்)

நமக்குள் ஓரளவுக்கு வயசு வித்தியாசம் இருக்கிறது (நீ என் அப்பா மாதிரி இருக்கிறாய், அல்லது உனக்கு வழுக்கை விழுந்துவிட்டது)


### வேற்றுமைகள்

உன் மேல் எனக்கு அதுமாதிரி கவர்ச்சி இல்லை ( நீ மிகவும் அசிங்கமாக இருக்கிறாய்)

# பெண்களின் நிராகரிப்பும் ஆண்களின் நிராகரிப்பும்

என் வாழ்க்கை தற்சமயம் மகா சிக்கலாக இருக்கிறது (எனக்கு நிறைய ஆண் நண்பர்கள் இருக்கிறார்கள்)

எனக்கு ஏற்கனவே ஒரு ஆண் நண்பன் இருக்கிறான் (உன்னைப் பார்த்தால் என் வீட்டுப் பூனையும் ஐஸ்கிரீமும் மேல்)



நான் வேலை செய்யும் இடத்திலேயே ஒரு ஆளை காதலிப்பதை விரும்புவதில்லை. (நீ உலகத்திலேயே, அல்லது. இந்த பேரண்டத்திலேயே ஒரே ஒரு ஆண் மகனாக இருந்தாலும் உன்னை காதலிக்க மாட்டேன், கட்டிடத்தில் இருக்கிறோம் என்பதற்காக காதலித்துவிடுவேனா?)

நீ காரணமில்லை, நான்தான் காரணம் (நீதான் காரணம்)

இப்போதைக்கு என் வேலையில் முன்னேற உழைத்துக்கொண்டிருக்கிறேன். (மகா அலுப்படிக்கும் என் வேலையே உன்னை விட பரவாயில்லை)

நான் திருமணம் செய்து கொள்ளவேண்டாம் என்று முடிவு செய்திருக்கிறேன் (உன்னைப் போன்ற ஆட்கள் இருப்பதால்தான்)

*எல்லாவற்றிலும் தலையாய சொல்லப்படும் காரணம்......*

நாம் நண்பர்களாக இருப்போம்.

(நான் உன் கூடவே இருந்து நான் சந்திக்கும் ஆண்களைப் பற்றி எல்லாம் புகழ்ந்து உன்னை வெறுப்பேற்றத்தான்)

*பெண்ணை நிராகரிக்க ஆண்கள் சொல்லும் காரணங்களில் தலையாயவை*

உன்னை என் சகோதரி போல நினைக்கிறேன் (நீ அசிங்கமாக இருக்கிறாய்)

நமக்குள் சிறிதளவு வயது வித்தியாசம் இருக்கிறது. (நீ அசிங்கமாக இருக்கிறாய்)

உன் மேல் எனக்கு அதுமாதிரி கவர்ச்சி இல்லை. (நீ அசிங்கமாக இருக்கிறாய்)

என் வாழ்க்கை தற்சமயம் மகா சிக்கலாக இருக்கிறது. (நீ அசிங்கமாக இருக்கிறாய்)

எனக்கு ஏற்கனவே ஒரு பெண் நண்பி இருக்கிறாள் (நீ அசிங்கமாக இருக்கிறாய்)

நான் வேலை செய்யும் இடத்திலேயே ஒரு பெண்ணைக் காதலிப்பதை விரும்புவதில்லை. (நீ அசிங்கமாக இருக்கிறாய்)

நீ காரணமில்லை, நான்தான் காரணம் (நீ அசிங்கமாக இருக்கிறாய்)

இப்போதைக்கு என் வேலையில் முன்னேற உழைத்துக்கொண்டிருக்கிறேன். (நீ அசிங்கமாக இருக்கிறாய்)

*எல்லாவற்றிலும் தலையாய சொல்லப்படும் காரணம்....*



நாம் நண்பர்களாக இருப்போம்.

(நீ உண்மையிலேயே படு அசிங்கமாக இருக்கிறாய்)

---

# முத்தத்தைப் பற்றி சில பொன்மொழிகள்

முத்தத்தின் ஒலி பீரங்கி சத்தத்தை விட மென்மையானது. ஆனால் அதன் எதிரொலி அதிக நாள் நீடிக்கிறது.

முத்தம் ரியல் எஸ்டேட் மாதிரி. அதில் லொகேஷன் ரொம்ப முக்கியம்.

மௌனத்தைக் கலைக்க சிறந்த வழி முத்தம்தான்.

ஆண்கள் தங்கள் கடைசி முத்தத்தை மறந்து நீண்ட காலம் ஆன பிறகும் பெண்கள் தங்கள் முதல் முத்தத்தை ஞாபகம் வைத்திருக்கிறார்கள்.

ஆண்கள் நாலு லார்ஜ் உள்ளே இறங்கிய பிறகு தன்னை மறந்துவிடுவார்கள். பெண்கள் நான்கு முத்தங்களுக்குப் பிறகு எல்லாவற்றையும் மறந்துவிடுகிறார்கள்.

முத்தம் காதலின் மொழி என்றால் அந்த மொழியில் நாம் பேச நிறைய இருக்கிறது.

முத்தம் உணவைப் போல. ஒரு வாய் சாப்பிட்டால் போதவே போதாது.



முத்தம் உப்பு நீரைக் குடிப்பது போல. குடிக்கக் குடிக்க தாகம் அதிகரிக்கிறது.

ஆண்கள் தங்கள் முதல் முத்தத்திற்கு பெண்களைக் கெஞ்சுகிறார்கள். பெண்கள் தங்கள் கடைசி முத்தத்திற்கு ஆண்களைக் கெஞ்சுகிறார்கள்.

முத்தத்தை உதட்டில் கொடுக்காமல் ".:ப்ளையிங் கிஸ்" கொடுப்பவர்கள் உலகமகா சோம்பேறிகள்.

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் உரிமை மடல் இவ்வாரம் இடம் பெறவில்லை. எனினும் அவர் சேக்கிழார் மாநாட்டையொட்டி விடுத்த வாழ்த்துச் செய்தி இங்கு பிரசுரமாகிறது

**மா**நாடு காண மண்டபம் நோக்கி மகிழ்ச்சிப்பிரவாகத்துடன் வந்திருக்கும் உங்கள் அனைவருக்கும் வணக்கம்!

ஆன்மீகச் சிந்தனையாளர்களுக்கு வணக்கம்!

சைவப் பெரியார்களுக்கு வணக்கம்!

இலக்கிய ஆர்வலர்களுக்கும் மனிதநேயப்பண்பாளர்களுக்கும் வணக்கம்!

கடல் எம்மைப் பிரித்தாலும், உடல் வேறாயினும், உயிர் வேறாயினும், உணர்வு ஒன்றென, உதிரம் ஒன்றென இரண்டறக்கலந்து நிற்கும் எம் பாரதப் பூமியிலிருந்து வந்திருக்கும் சக உதிரங்களுக்கு வணக்கம்!

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்! என எண்ணித்துணிந்து மக்கள் என்ற சமுத்திரத்தில் என்றும் இருப்பவர்கள் நாங்கள்!

வரலாற்று நதி ஓடிக்கொண்டே இருக்கிறது!

அந்த நதியின் ஓட்டத்தைத் தடுத்து நிறுத்தியவர்கள் எவரும் இல்லை!

ஓடும் நதியின் ஒரு கரையில் வெற்றிகள் குவிகின்றன!

மறுகரையில் தோல்விகளின் அடையாளங்கள் தெரிகின்றன!

மெல்லெனப்பாயும் தண்ணீர் கல்லையும் ஊடுருவிப்பாயுமாம் என்பதுபோல் வெற்றிகள் காலம் தாழ்த்தி வந்தாலும் அவைகள் இந்த மனித சமூகத்தின் குறைபாடுகளை நிறைவு செய்து கொண்டுதான் இருக்கின்றன.

அந்த வகையில் இன்று நடக்கும் 5ஆவது உலக சேக்கிழார் மாநாடு மெல்லெனப் பிறந்த வெற்றி என்றுதான் கூற வேண்டும்!

மக்களாகிய நீங்கள் எவ்வழியோ நானும் அவ்வழிதான்!

மக்களாகிய நீங்கள் எதை விரும்புகிறீர்களோ அதையே நானும் விரும்புகிறேன்!

ஏனெனில் நல்லதை நினைப்பவர்கள் நீங்கள்!

மக்களை நல்வழிப்படுத்திட... மக்களின் மனங்களில் மனித நேயத்தைப் போதித்திட... ஒத்துவருகின்ற எந்த வழியினையும் நான் மக்களுக்காகவே சரிவரப் பயன்படுத்த நினைப்பவன்!

ஆகவேதான் இன்றைய தினத்தில் இந்த சேக்கிழார் மாநாட்டை நடத்தியே முடிக்க வேண்டும் என்ற கட்டாய கட்டளையை காலம் எனக்கு உணர்த்தியிருக்கிறது!

ஆன்மீகம்!...அறிவியல்!... என்று பன்முகப் பரிமாணங்களை வேண்டி நிற்கும் மக்களாகிய உங்களது எண்ணங்கள் ஈடேறவே நான் பன்மைத்துவ சிந்தனையோடு இந்த மாநாட்டை நடத்தி முடிக்க திட சங்கற்பம் பூண்டு நிற்கின்றேன்!

நான் தனி மனிதனல்ல! மக்களாகிய உங்களில் ஒருவன்! அறிவியல் சமூகத்தின் ஆணிவேர்களுக்கு நீருற்றி வளர்க்கும் மனித சமூகத்தில் ஆன்மீக எழுச்சி கொண்டு மேலெழத்துடிக்கும் மக்களுக்காகவும் நான் பணி செய்யக் காத்திருப்பவன்!

'என் கடன் பணி செய்து கிடப்பதே' என உறுதியோடு உங்களுக்காக உழைக்கும் ஒரு இலட்சிய வேட்கையின் அடையாளம்தான் இந்த சேக்கிழார் மாநாடு!

புராணங்களிலும் இதிகாசங்களிலும் மனித நேயங்களின் இருப்புக்காகவே நீதியின் எழுச்சிகள் தோன்றி மறைந்தன!

மறுபடியும் இந்த மண்ணில் நீதியின் எழுச்சி தர்மத்தின் வடிவத்தில் எழுவதற்கும் அதற்கான முன்னெடுப்பை நகர்த்திச் செல்லவதற்காகவும்தான் இந்த சேக்கிழார் மாநாட்டை நாம் ஒழுங்கு படுத்தியிருக்கிறோம்!

மதங்கள் எவையும் போதித்து நிற்பது மனிதநேயப் பண்புகளை மட்டும்தான்! நான் இந்து கலாசார அமைச்சராக இருப்பதென்பது வேறெந்த மதத்திற்கும் எதிர் என்று அர்த்தமல்ல!

மதத்தால் இந்துவானாலும், மாண்பில் முஸ்லிம் என்றாலும் வேதம் பயிலும் கிறிஸ்தவன் ஆனாலும், தீரச்சைவன் ஆனாலும் அனைவரும் மானிட சமூகமே! அவர் எங்கிருந்தாலும் எம்மவரே என்ற ஆரம்பகால அடிப்படைக்கோட்பாட்டிலிருந்து இன்று வரை செயலாற்றிக் கொண்டிருப்பவன்தான் நான்!

இன்றைய 5ஆவது உலக சேக்கிழார் மாநாடு என்பது தமிழ் கூறும் நல்லுலகிற்கு ஒரு ஆரோக்கியமான அறுவடையைப் பெற்றுத்தரும் என்ற சாதகமான விடயத்தை அனைத்து மக்களும் உணரவேண்டும் என நான் எதிர்பார்க்கின்றேன்!

மதம் எம்மைப் பிரித்தாலும் வாழும் தேசம்! பேசும் மொழி என்பன எம்மை ஒரு சந்தியில் இணைக்கின்றன!

மதங்கள் தாம் சார்ந்த மக்களுக்கு மட்டுமன்றி, அந்தந்த மொழிக்கும் தொண்டாற்றவேண்டும்! அந்த வகையில் இந்து சமயம் தமிழுக்கும் மக்களுக்கும் ஆற்றியிருக்கும் பாரிய பணியின் அடையாளம்தான் பெரியபுராணம்!

தமிழ் இலக்கிய வரலாற்றில் சோழர் காலம் என்பது காவியக் காலமாகக் கணிக்கப்படுகின்றது! காவியங்கள் அதிகமாகப் படைக்கப்பட்டது சோழர் காலத்தில்தான்!

பெரிய புராணம், கம்பராமாயணம், சீவகசிந்தாமணி, கலிங்கத்துப்பரணி, நளவெண்பா, சைவசித்தாந்த தத்துவ நூல்கள் என்று வரலாற்றின் கல்வெட்டுக்கள் சோழர் காலத்தில் அதிகம் பொறிக்கப்பட்டதால் மட்டுமே அக்காலப்பகுதியை பொற்காலம் என்றும் போற்றுகின்றோம்!

சீவகசிந்தாமணியின் சுவையில் மயங்கிக்கிடந்த மன்னன் குலோத்துங்கனுக்கு இந்துசமய பாரம்பரியங்களை அடிப்படையாகக் கொண்டு பெரியபுராணத்தைப் படைத்துக்காட்டியவர் சேக்கிழார்!

சுந்தரர் பாடிய திருத்தொண்டர் தொகையினதும், நம்பியாண்டார் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியினதும் தொடர்ச்சியாக திருத்தொண்டர் புராணத்தை ஒரு விரிநூலாகப் படைத்துக்காட்டியவர் சேக்கிழார்!

திருத்தொண்டர் புராணம் என்பது காப்பிய அந்தஸ்து கொண்டிருந்ததால் மட்டுமே அது பெரியபுராணம் என்று பெயரெடுத்து பன்னிரண்டு திருமுறைகளில் பன்னிரண்டாவது திருமுறையாக இணைக்கப்பட்டது!

பெரியபுராணம் என்பது அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரலாற்றை மட்டுமன்றி மக்களின் வாழ்வியல் அடையாளங்களையும் அடிப்டையாகக் கொண்டது!

மனித நேயத்தை தனது பக்தி இலக்கியத்தின் ஊடாகப் போதித்தவர் சேக்கிழார்! கொலை என்ற சொல்லைக்கூடக் குறிப்பிட்டு எழுதக்கூசியவர் சேக்கிழார் என்பதுதான் பெரியபுராணத்தின் சிறப்பு என்று நாம் அறிகின்றோம்!

காரைக்காலம்மையார், திலகவதியம்மையார், மங்கையற்கரசியார் போன்ற பெண் அடியார்களின் கதைகளுடாக ஆண் பெண் சமத்துவத்தை வலியுறுத்துவதுடன் பல நாயன்மார்களதும் வாழ்க்கையில் அவர்களது மனைவிமார் பதிவிரதைகளாக வாழ்ந்ததையும் அவ்வாழ்க்கையால் அவர்களுக்குள் ஏற்பட்ட மெய்யுணர்வுகளையும் ஆங்காங்கே சுட்டிக் காட்டுவதன் மூலம் சேக்கிழார் பெண்கள் மீது எத்தகைய மதிப்பை வைத்திருந்தார் என்பதையும் அறியக் கிடைக்கிறது.

அத்தோடு - இச்சரிதங்கள் மூலமாக மானிட சமூகத்திற்கு ஆண், பெண், ஏழை, பணக்காரன் போன்ற வேறுபாடுகள் இல்லை என்பதையும் பல்வேறு நாயன்மார்களின் வரலாற்றிலிருந்து வெளிக்கொணர்ந்துள்ளார்.

திருவள்ளுவரை அடுத்து 'தெய்வப் புலவர்' என்று போற்றப்படும் சேக்கிழார் பெருமான் தமிழர் தம் வாழ்வியலையும், நெறி நின்ற மானிட சமூகத்தின் வாழ்க்கைச் சிறப்பையும் மக்களின் மனங்களில் நிறைந்திருக்கும் ஆன்மீக உணர்வுகளையும் அதனால் அடையும் ஆனந்தப் பெருக்கையும் அழகு தமிழ்க் காவியமாகப் படைத்துள்ளார்.

புராணம் என்ற பெயர் இருப்பினும் திருவருட் காவியம் என்று கூறப்படும் அளவிற்கு காவிய இலக்கியங்களைக் கொண்டு விளங்கும் இந்நூல் உலகப் பொது நூலாகவும் போற்றப்படுகின்றது.

ஓரறிவிலிருந்து ஆறறிவுள்ள சகல ஜீவராசிகளிலும் அணுவுக்குள் அணுவாக வீற்றிருக்கும் ஆன்மீக உணர்வுகளையும் அதன் பெருமைகளையும் போற்றுகின்ற இந்நூலில் ஜீவகாருணியத்துடன், சமத்துவம் சகோதரத்துவமும் வலியுறுத்தப்படுகின்றன.

***அங்கமெலாம் குறைந்தழுகும் தொழுநோயராய்***<br>***ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்***<br>***கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில்***<br>***அவர் கண்டீர் யாம் வணங்கும் கடவுளரே"***


தொழுநோய் பீடித்து உடம்பு அழுகுபவராக இருந்தாலும், இந்துக்களால் பூசித்து வழிபடுகின்ற பசுமாட்டை (ஆவை) உரித்து உண்கின்ற புலைத் தொழிலைச் செய்பவராயினும், அவர்கள் கங்கையை சடையில் கொண்ட சிவனுக்கு அன்பராகில் அவரே நாம் வணங்கும் கடவுளரே என்று கூறுகிறார் அப்பர்.

நாயனார்களின் உயர்ந்த வாழ்க்கை நெறிகளைத் தன்னகத்தே கொண்ட ஒப்பற்ற இப்பெரும் காப்பியத்தில் நாகரீகமற்ற வருணனைகளோ அளவு கடந்த கற்பனைகளோ வன்மையான சொற்களோ, விரசமோ, பிறமொழிக் கலப்போ இல்லாமல், பக்தி இலக்கியமாக வரலாற்றுக் குறிப்புகளுடன் இலங்கும் இக்காவியம் எக்காலத்திற்கும் உரியது.

நெறிநின்று வாழும் பெருமைகளையும் அதனால் கிடைக்கும் பேரின்ப வாழ்வையும் எடுத்தியம்பும் இப்பெரிய புராணம் காலங்கள், இடங்களையெல்லாம் கடந்து என்றும் மனித குலத்திற்கு வழிகாட்டியாய் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

சேக்கிழார் பெருமானின் பெருமைகளை உலகறியச் செய்வதுடன், பெரியபுராணம் காட்டும் சைவச்சித்தாந்தக் கருத்துக்களை இலகு தமிழில் எல்லாரும் அறிந்து பயன் பெற வேண்டும் என்பதற்காகவும், சிவபூமியாகிய இலங்கைத் தீவில் சைவம் மீண்டும் மறுமலர்ச்சியடைய வேண்டும் என்பதற்காகவும், இலங்கையில் ஐந்தாவது உலக சேக்கிழார் மகாநாட்டை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளோம்.

நமது மதம் சம்பந்தமான தெளிவான அறிவைப் பெற்றிடவும், காலத்திற்கு ஒவ்வாதவற்றை நீக்கி மனித



நேயம், ஜீவகாருண்யத்தை மேலோங்கச் செய்கின்ற வழிமுறைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதன் மூலமும் ஒரு ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்ப விழைகின்றேன்.

இம்மகாநாட்டின் மூலம் அடிப்படைச் சைவசித்தாந்த தத்துவங்களை எல்லாம் அறிந்து பயன்பெற வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

இலக்கிய ஆர்வலர்கள் பக்தி இலக்கியங்களையும் படைக்க முன்வரவேண்டும்! அதனூடாக மனித நேயத்தை மக்களுக்குப் போதிக்க துணிய வேண்டும்!

கடந்த கால, பண்டைய வரலாறுகளையும் அதன் பெருமைகளையும் இலக்கியங்களாகப் படைத்து இன்றைய சமகால சமூகத்திற்குக் காலக்கண்ணாடியாக எடுத்துக்காட்டிய சேக்கிழாரைப்போல் இன்றைய சமகால வரலாற்றுப்பதிவுகளையும் பக்தி இலக்கியங்களாகப் படைத்து எதிர்கால சந்ததிக்கு இன்றைய வரலாற்றை எடுத்துச்செல்ல முன்வரவேண்டும் என இச்சந்தர்ப்பத்தில் இலக்கிய ஆர்வலர்களுக்கும் படைப்பாளிகளுக்கும் நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்!

வாழ்க சேக்கிழார் மாநாடு!

மனித நீதி வெல்லும்போது நான் நேரில் வந்து நிரந்தரமாகவே உங்கள் மத்தியில் இருப்பேன்!

நேரில் வந்து வாழ்த்துக்கூற முடியாமைக்கு வருந்துகிறேன்!

***நன்றி,***<br>***மக்கள் சேவையிலுள்ள,***<br>***கே. என். டக்ளஸ் தேவானந்தா பா.உ.***<br>***செயலாளர் நாயகம் – ஈ.பி.டி.பி,***<br>***கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி,***<br>***கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் இந்து விவகாரங்கள் அமைச்சர்,***<br>***மற்றும் கல்வி, வாழ்க்கைத் தொழிற்பயிற்சிக்கு உதவும் அமைச்சர்.***

# பிராந்திய வல்லரசுகளும் ராஜ்ய உறவுகளும்

தெற்காசியப் பிராந்தியத்தில் இரு பெரும் வல்லரசுகளாகத் திகழ்பவை இந்தியாவும் மக்கள் சீனக் குடியரசும். இரு நாடுகளுமே அண்டை நாடுகளென்ற போதிலும் இரு வேறு விதமான சமூகக் கட்டமைப்புகளைக் கொண்டவை. ஏறக்குறைய சம காலத்திலேயே இந்த இரு நாடுகளும் அந்நியர் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டன. 1947இல் இந்தியாவும் 1949இல் மக்கள் சீனமும் தம்மேல் போடப்பட்டிருந்த அடிமைத் தளைகளை அறுத்தெறிந்து சுதந்திரம் பெற்றன. குறுநில மன்னர்களாலும் நிலச்சுவாந்தர்களாலும் ஆளப்பட்டுவந்த இந்தியாவின் பகுதிகளை ஏகபோகமாகப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். நேதாஜி சுபாஷ் சந்திரபோஷ் மற்றும் ஆங்காங்கே பிரிட்டிஷ் அரசுக்கெதிராக எழுந்த ஆயுத எழுச்சிகளைத் தவிர, அஹிம்சைப் போராட்டத்தினூடாக இந்தியா சுதந்திரம் பெற்றது. பிரிட்டனில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம், இந்திய விடுதலைக்கான வெளிப்புறக் காரணியாக அமைந்தாலும் தேசிய இயக்கங்களின் விடுதலைப் போராட்டங்கள் சுதந்திரத்திற்கான உட்காரணியாக அமைந்ததை யாரும் மறுத்துவிட முடியாது. சுதந்திரத்துக்கு முன்னரேயே இனங்களின் ஐக்கியத்தையும் சமாதான - சகஜீவனத்தையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் வலியுறுத்தியே பொது எதிரியான பிரிட்டிஷ் ஆட்சிக்கெதிரான போராட்டம் நடத்தப்பட்டது. இன்றுவரை இந்தியாவைச் சிதைக்க முடியாமல் இருப்பதற்கு இந்த மூல மந்திரமே முக்கிய காரணியாகும். இந்தியா, கிராமிய பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு, தேசிய உற்பத்திகளை ஊக்குவித்து தனது வளங்களைக் கட்டியெழுப்பியது. சமஷ்டி அடிப்படையிலான ஜனநாயக அமைப்பு முறையை அடிப்படையாகக் கொண்ட ஜனநாயக நாடு இந்தியா.

இந்தியாவைவிட பரப்பளவிலும் மக்கள் தொகையிலும் கூடிய நாடு மக்கள் சீனம். 1927இல் மாசேதுங்கின் தலைமையின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, இருபது வருடங்களுக்கு மேலாக மக்களை அணிதிரட்டி, ஆயுதப் போராட்டம் நடத்தி, வெற்றி வாகை சூடிய சோஷலிசக் குடியரசு மக்கள் சீனம். அரைக் காலனித்துவ, அரை நிலப்பிரபுத்துவ, ஏகாதிபத்திய சக்திகளுக்கெதிராக வீரமிக்க போராட்டத்தை நடத்திய நாடு மக்கள் சீனம். இந்தியாவைப் போல் நிலச்சுவாந்தார்கள், அந்நியர்களின் எடுபிடிகள், அந்நிய ஆட்சியாளர்கள் ஆகியோரின் பிடியில் சிக்கித் தவித்த மக்களை விடுவித்த மாபெரும் நாடு மக்கள் சீனம். கெரில்லா யுத்தத்தை மட்டுமல்ல, மக்களை அணிதிரட்டி மக்கள் யுத்தத்தை நடத்தியதாலேயே பாரிய எதிரிகளை அவர்களால் முறியடிக்க முடிந்தது.

மக்கள் மட்டுமே தீர்க்கமான சக்தி. ஆயுதங்களல்ல என்ற அற்புதமான கோட்பாட்டை அடிநாதமாகக் கொண்டு போராட்டம் நடத்தியவர்கள் அவர்கள். ஆயுதங்களால் அடாவடித்தனங்கள் செய்து


**வடக்கு, கிழக்கில் விடுதலைப் போராட்டமென கூறிக்கொண்டு புலிகள் நடத்திவரும் பயங்கரவாதச் செயற்பாடுகளை இலங்கையின் நேச நாடுகளான மக்கள் சீனமும் இந்தியாவும் எதிர்க்கின்றன. எதிரியின் எதிரி எங்கள் நண்பனென்ற கோட்பாட்டின் அடிப்படையில் இரு நாடுகளின் சகலதுறை உதவிகளையும் பெற்று எமது நாட்டிலும் சமாதானத்தையும் சௌஜன்யத்தையும் சுபீட்சத்தையும் ஏற்படுத்துவோமாக.**

மக்களை அடக்கியொடுக்காததாலேயே சீனக் கம்யூனிஸ்டுகளால் வெற்றி பெற முடிந்தது.


உலகில் மிகக் கூடிய சனத்தொகையைக் கொண்ட நாடுகள் மக்கள் சீனமும் இந்தியாவும் தான். இவை முதலாம் இரண்டாம் இடங்களை வகிக்கின்றன. பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் விட்டுச்சென்ற மக்மோகன் மற்றும் சிம்லா எல்லைப் பிரச்சினைகளால் இந்த இரு நாடுகளும் 1962ஆம் ஆண்டு எல்லை யுத்தத்தில் ஈடுபட்டன. இந்தியாவில் பிரிட்டிஷாரும் சீனாவில் ஜப்பானும் விட்டுச் சென்ற வரலாற்றுக் கொடூரங்களின் பாதிப்புகளுக்கு இரு நாட்டு மக்களும் இன்றும் முகங்கொடுத்து வருகிறார்கள்.

எது எப்படியிருந்தாலும் இன்று இந்த இரு நாடுகளுமே அரசியல், விஞ்ஞான, தொழில்நுட்ப, பொருளாதார, சமூகத் துறைகளில் பல சாதனைகளை நிகழ்த்தியிருக்கின்றன. 1960களின் முற்கூற்றில் உலக சோஷலிச முகாம் சோவியத் - சீன சார்பு முகாம்களாகப் பிளவுபட்டபோது சோவியத் ரஷ்யாவின் மிக நெருங்கிய நட்பு நாடாக இந்தியா மாறியது. சோவியத் ரஷ்யாவுடன் பாதுகாப்பு மற்றும் பொருளாதார, தொழில்நுட்ப ஒப்பந்தங்களையும் இந்தியா கொண்டிருந்தது. சோவியத் ரஷ்யாவையும் அமெரிக்காவையும் இரு மேலாதிக்க வல்லரசுகளாக சீனா வர்ணித்த அக்காலகட்டத்தில் இந்தியாவுக்கு அமெரிக்கா சிம்மசொப்பனமாக விளங்கியது. இன்று இரு நாடுகளுமே தமக்குள் உள்ள பிரச்சினைகளைச் சமாதானபூர்வமாகத் தீர்த்துக் கொள்வதற்கான தொடர் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றன. தமக்கிடையே பல ஒத்துழைப்பு ஒப்பந்தங்களையும் இவை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவுடனும் கூட இந்த இரு நாடுகளும் இராணுவ மற்றும் ஒத்துழைப்பு ஒப்பந்தங்களையும் கொண்டிருக்கின்றன. உள்நாட்டுக்குள் பயங்கரவாதச் செயற்பாடுகளை இரு நாடுகளுமே சந்தித்தன. இன்னமும் சந்திக்கின்றன. சீக்கியக் காலிஸ்தான் பிரிவினைவாதிகளை இந்திரா காந்தியின் கொலைக்குப் பின்னர் இந்தியா வேரோடும் வேரடி மண்ணோடும் களையெடுத்தபோது ஜனநாயகத்தின் பாதுகாவலர்களென்று கூறிக்கொள்பவர்கள் கண்டனம் தெரிவித்தனர். இதேபோன்று பெய்ஜிங்கின் ரியான் - மென் சதுக்கத்தில் சீர்த்திருத்தவாதிகள் நடத்திய போராட்டத்தின்போது மக்கள் சீன இராணுவம் அதனை முறியடித்தபோது அமெரிக்காவும் அதன் நேச சக்திகளும் ஆர்ப்பரித்தன.

வடக்கு, கிழக்கில் விடுதலைப் போராட்டமென கூறிக்கொண்டு புலிகள் நடத்திவரும் பயங்கரவாதச் செயற்பாடுகளை இலங்கையின் நேச நாடுகளான மக்கள் சீனமும் இந்தியாவும் எதிர்க்கின்றன. எதிரியின் எதிரி எங்கள் நண்பனென்ற கோட்பாட்டின் அடிப்படையில் இரு நாடுகளின் சகலதுறை உதவிகளையும் பெற்று எமது நாட்டிலும் சமாதானத்தையும் சௌஜன்யத்தையும் சுபீட்சத்தையும் ஏற்படுத்துவோமாக.



> கூடிக் கிழப்பருவ மெய்தி - கொடுங்
> கூற்றுக் கிரையெனப்பின் மாயும் - பல
> வேடிக்கை மனிதரைப் போலே - நான்
> வீழ்வே யென்று நினைத் தாயோ?
>
> **- சுப்பிரமணிய பாரதியார்**



# கழுதையும் நாயும்



ஓர் ஊரில் ஒரு சலவைத் தொழிலாளி இருந்தான். அவனிடம் ஒரு கழுதையும் நாயும் இருந்தன. அவன் துணி மூட்டைகளைச் சுமந்து செல்ல கழுதையையும் காவல் செய்ய நாயையும் வளர்த்து வந்தான்.

தான் மட்டும் முதுகு வலிக்க மூட்டைகள் சுமந்து செல்வதும், நாய் ஒரு வேலையும் செய்யாமல் சாப்பிட்டு வருவதும் கழுதைக்குப் பிடிக்கவில்லை.

ஒருநாள் அது நாயிடம், “நண்பா, நானோ நாள் தோறும் முதுகுவலிக்க மூட்டைகளைச் சுமந்து செல்கிறேன். அப்படி இருந்தும் எஜமானன் என்னைத்தான் அடித்து துன்புறுத்துகிறார். என்னைப் போல் நீயும் ஒரு வேலைக்காரன் தான். அப்படி இருந்தும் உனக்கு அதிக வேலைகள் தராமல் செல்லமாக உன்னைக் கொஞ்சுகிறார். இது என்ன நியாயம்'' என்று முறையிட்டது.

“இதற்கு நான் என்ன செய்வேன்? பல நாளாக நீ பாடுபட்டு வந்தாலும் நான் இரவு முழுவதும் கண்

**பாப்பா முரசு சிறுகதை**

விழித்துத் திருடர்கள் மூட்டைகளைத் திருடிக் கொண்டு போய் விடாதபடி பாதுகாத்து வருகிறேன். அதனால் தான் எஜமானர் என்னிடம் பிரியமாக இருக்கிறார்'' என்றது நாய்.

“இது என்ன பிரமாதமான காரியமா? உன் வேலையை நான் செய்ய மாட்டேனா?'' என்று கழுதை கூறியது.

“எனக்கு ஆட்சேபனை இல்லை'' என்றது நாய்.

அச்சமயத்தில் ஒரு திருடன் சலலைத் தொழிலாளியின் வீட்டுச் சுவர் மேல் ஏறினான்.

இதைப் பார்த்த கழுதை, ‘திருடர்கள் வந்தால் நாய் குரைத்துத்தானே எஜமானரை எழுப்புகிறது? நாமும் அவ்வாறே செய்வோம்’ எனக் கருதி தன் கட்டைக் குரலில் கத்த ஆரம்பித்துவிட்டது.

கழுதையின் கத்தலைக் கேட்ட சலவைத் தொழிலாளியின் தூக்கம் கலைந்தது. தனது தூக்கத்தைக் கெடுத்ததற்காக அதன் மீது அவனுக்கு ஆத்திரம் வந்தது. மூலையில் சாத்தியிருந்த தடியை எடுத்துக் கொண்டு வந்து அதை நையப் புடைத்தான்.

சலவைத் தொழிலாளி சென்ற பிறகு நாய், கழுதையிடம் கூறியது.

“அவரவர் வேலையை அவரவர் தான் பார்க்க வேண்டும். பிறர் வேலைகளில் தலையிட்டால் இவ்வாறு தான் நேரும்.''

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 21.09.2005

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 613**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
**கொழும்பு**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 611

**பரிசுக்குரியவர்:**
**கு.ரஜந்தினி,**
**40, தபாற்கந்தோர் வீதி, திருகோணமலை.**

**பாராட்டுக்குரியவர்கள் :**

| | |
|---|---|
| ம.துபாகரன், நீதிமன்ற வீதி, மல்லாகம். | ஆர். தில்சான், 118/3, பரண கேஸ் பெலா வீதி, நுகேகொட. |
| எஸ்.எச்.எம். ரம்சாத், 268. ஹனிபா வீதி, கல்முனை - 07. | ப. காயத்திரி, தரம் 8C, மன்/நனாட்டான் ம.வி., அம்மன் கோவிலடி, நனாட்டான். |
| யூ. கியூரின் குயின், இதய தீபம் முன் பள்ளி, 18/16, பூம்புகார் வீதி, பாலையூற்று, திருகோணமலை. | ரொபின்சன் ஆன்கிறிஸ்டினா, 22 பெரிஸ்டர்புர, புத்தளம். |
| கமிலஸ் கிருத்திகன், தரம் 1A, விபுலானந்தாக் கல்லூரி, பண்டாரிக்குளம், வவுனியா. | ரா. திவ்யா, 175, லோவர் வீதி, பதுளை. |
| லெ. பெ.கீர்த்தனா, 53/19 ஸ்ரீ பிரியதர்ஷன மாவத்தை, கொழும்பு 10. | ரஹ்மத்அலி ஹாரிஸ் சிபானி, 16/2, ஹாஜியார் வீதி, தர்கா டவுன். |

# ஆத்திசூடி


## செய்வன திருந்தச் செய்

நீ செய்யக்கூடிய நல்ல காரியங்களை எவ்வித குறையும் ஏற்படாத வகையில் திருத்தமாகவும் சிறப்பாகவும் செய்.

-ஔவையார்

எஸ் நிரஞ்சலா, கண்டி.

# வீட்டைக் காக்கும் வீரா



வீட்டைக் காக்கும் வீரா
வேட்டை ஆட வாவா
உஞ்சு உஞ்சு வாவா
உனக்குச் சோறு தின்றின்.


ஆட்டை மாட்டை துரத்திடு
வீட்டுத் தோட்டம் காத்திடு

பழக்க மில்லா ஆட்களைப்
பாய்ந்து வெருட்டு போ - போ

இரவிற் கள்ளர் வந்தால்
இரைந்து குரைத்துக் காட்டு
விரைவில் வளவு முற்றும்
சுற்றிச் சுற்றி வாவா

# அதிசய உலகம்

## ஜேர்மன் விஞ்ஞானிக்கு மருத்துவத்துக்கான நோபல் பரிசு



மருத்துவத்திற்கான நோபல் பரிசு ஜேர்மனியைச் சேர்ந்த விஞ்ஞான ஆராய்ச்சியாளரான குயென்ரர் புளோபெல்லிற்கு வழங்கப்பட்டுள்ளது. கலங்களில் புரதங்களின் இயக்கத்திற்கான சமிக்ஞைகளை கண்டு பிடித்தமைக்காகவே இவருக்கு இப்பரிசு வழங்கப்பட்டுள்ளது. இச்சமிக்ஞைக் கலங்கள் எவ்வாறு தொழிற்படுகின்றன என்பதை அறிவதற்கு அவசியமாகும். கலங்களின் எல்லாத் தொழிற்பாட்டிற்கும் புரதங்கள் அவசியமாகும். இதனால் மருந்துப் பொருட்கள் தயாரிப்பதற்கு இவரது கண்டுபிடிப்பு பெரும் துணை புரிந்துள்ளது.


# உங்கள் பொது அறிவு எப்படி?

## உலகில் முக்கியமான எரிமலைகள்

| எரிமலையின் பெயர் | நிலையம் | உயரம் (மீற்றர்) |
|---|---|---|
| கொட்டேநபக்கி | இக்வடோர் | 5897 |
| மவுன்ற்வறங்கல் | அலாஸ்கா | 4267 |
| மவுனாலோவா | ஹவாய் | 4170 |
| எறிபஸ் | அந்தாட்டிக்கா | 3718 |
| எற்னா | சிசிலி | 3349 |
| கில்லன் | சிலி | 3200 |
| வில்லாறிச்சா | சிலி | 2842 |
| நுவா | நியூசிலாந்து | 2796 |
| அசாமா | ஜப்பான் | 2543 |
| ஹெக்லா | ஐஸ்லாந்து | 1491 |
| கிலாயிவா | ஹவாய் | 1247 |
| ஸ்ரொம்போரி | இத்தாலி | 925 |




## தடை தகர்ப்பு!



மெய்வல்லுநர் போட்டிகளில் ஒன்றாகத் 'தடை தாண்டும் போட்டி'யும் நடைபெறுகிறது. ஆனால் சில சமயங்களில் தடைகளை உடைத்தெறியும் நிகழ்வும் நடைபெறுகிறது. அமெரிக்க தடை தாண்டும் வீராங்கனை ஜோஹான் ஏஸ் அண்மையில் பின்லாந்தில் ஹெல்சின்கி தலைநகரில் நடைபெற்ற உலக மெய்வல்லுநர் 100 மீட்டர் தடை தாண்டும் போட்டியில் ஓடும் போது சந்தித்த சிக்கலே இது.

## தற்கொலை



தற்கொலைகளுக்குப் பெயர் போன நாடாக சீனாவும் கருதப்படுகிறது. அண்மையில் மத்திய சீனாவின் ஷான்க்சீ பிரதேச க்சியான் நகரப் பெண் ஒருவர் உயர்ந்த கட்டிடமொன்றின் கூரையில் ஏறி தற்கொலைக்கு முயலும் போது அதிர்ஷ்டவசமாக அங்கு வந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் சடுதியாக அவரைக் காப்பாற்றும் பணியில் ஈடுபடும் காட்சியே இது.

எல்டன் ஜோன் என்பவர் உலகப் பிரசித்தம் வாய்ந்த பாடகர் என்பதை நாம் அறிவோம். இவரது பாடலைக் கேட்டால் ஒருவருக்கும் உண்ணத் தோன்றாது. ஏனெனில் அவரது பாடல்கள் அவ்வளவு இனிமையானவை. இந்த எல்டன் ஜோனை முழுவதும் சொக்லேட்டைப் பயன்படுத்தியே வார்த்துள்ளனர். இது எதற்காக நடந்தது என்றால், உலகப் பிரபலமான கெட்பரி சொக்லேட் உற்பத்தியாளர்கள் நடத்திய வாக்கெடுப்பொன்றில், நாட்டின் பிரபல நட்சத்திரமாகத் தெரிவு செய்யப்பட்டார் எல்டன் ஜோன். அவரை கௌரவிப்பதற்காக எல்டன் ஜோனின் உயரத்திற்கு முழுவதும் சொக்லேட்டைப் பயன்படுத்தி இந்த 'சொக்லேட் ஜோனை' உருவாக்கினார்கள் கெட்பரி சொக்லேட் நிறுவனத்தார்.

## சொக்லேட் ஜோன்!



## ரோபோ நண்பன்

மக்களுக்கு உடற்பயிற்சி செய்வதற்கான காலத்தை நினைவூட்டுவதற்கும், அவர்கள் உணவுக் கட்டுப்பாட்டை சரியான முறையில் கடைப்பிடிக்கிறார்களா? என்பதைக் கண்காணிக்கவும் அமெரிக்காவின் மெசவுசேட் தொழில்நுட்ப நிறுவனம் ஓர் ரோபோவைக் கண்டுபிடித்துள்ளது. நாய்க் குட்டி ஒன்றின் உருவ அமைப்பில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த ரோபோவை அதன் உரிமையாளரின் இலத்திரனியல் உபகரணங்களில் பொருத்தியுள்ளதோடு, அதன் மூலம் கிடைக்கும் தகவல்களை உடனுக்குடன் அறிகின்றனர். எதிர்வரும் செப்டம்பர் 11ஆம் திகதி டோக்கியோவில் நடைபெறப் போகும் மாநாடொன்றில் இது சம்பந்தமாக முழு விளக்கமளிப்பதாகவும் அந் நிறுவனம் தெரிவித்துள்ளது.




மண் சரிவைப் பற்றிய பல செய்திகளை பல நாடுகளிலிருந்தும் கேட்டறிந்துள்ளோம். அதே போல் சேதங்கள் தொடர்பான படங்களையும் செய்தி ஊடகங்கள் வாயிலாக அறிந்தும் உள்ளோம். ஆனால், இது போல் மண் சரிவு நிகழும்போது பிடித்த படங்களை நாம் பார்த்துள்ளோமா? இந்தியாவின் இமயமலைப் பிரதேச சன்க்லா நகரில் ஓடும் பஸ்பா ஆற்றுக்குக் குறுக்காகக் கட்டப்பட்டுள்ள தொங்கும் பலகைப் பாலத்திற்குக் கீழாக அமைந்த மலைப்பகுதி ஒன்று சரிந்து விழும் காட்சியை பி.டி.ஐ. செய்திச் சேவையின் புகைப்படப்பிடிப்பாளர் ஒருவர் தனது கெமராவினால் இவ்வாறு சிறைப்படுத்தியுள்ளார்.





## தீக்கோழியின் ரகளை

அமெரிக்க சென் பிரான்ஸிஸ்கோவில் தீக்கோழி ஒன்று நெடுஞ்சாலையில் குறுக்கு மறுக்காக ஓடி ரகளை பண்ணியதால் 10 நிமிடங்களுக்கு போக்குவரத்து ஸ்தம்பித்தது. வாகனத்தில் பயணம் செய்து கொண்டிருந்த இந்தத் தீக்கோழி, கோல்டன் கேட் சப்பிரிஜ் பகுதியில் போய்க்கொண்டிருக்கும் போது வீதியில் குதித்ததாலேயே இக் களேபரம் நிகழ்ந்தது.













# மொட்டை அடிக்கத் தயார் - பூஜா

ஹீரோக்கள் மட்டும்தான் மொட்டை அடித்து நடித்துக் கலக்க வேண்டுமா, வாய்ப்புக் கொடுங்கள் நாங்களும் மொட்டைத் தலையுடன் புகுந்து விளையாடுகிறோம் எனக் கூறுகிறார்கள் சில நடிகைகள்.

வித்தியாசமான வேடங்களில் நடிக்க வேண்டும் என்றால் அப்போதும் சரி, இப்போதும் சரி, நாயக நடிகர்களும், வில்லன் நடிகர்களும் மொட்டையைத்தான் முதலில் நாடுகிறார்கள். சமீபத்தில் கஜினி படத்தில் சூர்யாவும், காக்கி படத்தில் சரத்குமாரும் மொட்டைத் தலையுடன் நடித்திருக்கிறார்கள்.

இப்போது இந்த மொட்டைத் தலைக்கு ஹீரோயின்கள் சிலர் சவால் விட்டுள்ளார்கள். "நாயகர்கள் மட்டும்தான் மொட்டை போட்டு நடிக்க வேண்டுமா, எங்களுக்கும் அப்படிப்பட்ட கேரக்டர் கொடுங்கள், கலக்குகிறோம்" எனக் கூறுகிறார்கள் நடிகைகள் பூஜாவும், அபிராமியும்.

"கதைக்குத் தேவைப்பட்டால் எப்படிப்பட்ட கெட்டப்புடனும் நடிக்கத் தயாராக இருக்கிறேன். எனது தலையை மொட்டை அடித்துக் கொள்ளவும் தயார்தான். மொட்டைத் தலையுடன் நடிகர்கள் மட்டும்தான் நடிக்க முடியும் என்றில்லை, எங்களாலும் நடிக்க முடியும்" என்கிறார் பூஜா.

பூஜாவுக்கு இப்போது கையில் படம் ஏதும் இல்லை என்பது இங்கே கொசுறுச் செய்தி.

நல்ல வேளையாக பூஜா தலையை மொட்டையடிக்க இதுவரை எந்தத் தயாரிப்பாளரும் முன்வரவில்லை என்பது ஆறுதல் செய்தி.


# தனுஷை சீண்டும் சிம்பு!

விஜய்க்கும், அஜீத்திற்கும் இடையே கொஞ்ச நாளாக நடந்து வந்த வசனப் போர், இப்போது சிம்பு - தனுஷ்க்கிடையே தீவிரமாகியுள்ளது. இப்போது சுத்தமாக மார்க்கெட் இழந்துவிட்ட தனுஷ், அது ஒரு கனாக்காலம் படத்தைத்தான் நம்பியுள்ளார். இப்படம் மூலம் இழந்த மார்க்கெட்டைப் பிடிப்பது, அதுவரை யாருடனும் பேசாமல் இருப்பது எனப் புதிய பாலிசியைக் கடைப்பிடித்து வருகிறார் தனுஷ்.

ஆனால் சிம்பு விடமாட்டேன் என்கிறார். 'மன்மதன்' படத்தில் தனுஷ்க்கு எதிராக வசனம் வைத்தார் சிம்பு. "யாரு ஜெயிக்கிறாங்கறது முக்கியமல்ல', ஜெயித்த பிறகும் யாரு நிலையா, உயரத்துல இருக்கிறாங்கறதுதான் முக்கியம்" என பஞ்ச் ... யலாக வைத்தார் சிம்பு. இது அப்படியே தனுஷ்க்காக வைக்கப்பட்ட வசனம்தான் என்பதை யாரும் மறுக்க ... முடியாது.

அத்தோடு விட்டாரா? இப்போது தனது கதை, வசனம், இயக்கத்தில் உருவாகி வரும் ... வல்லவன் படத்திலும் தனுஷை வம்புக்கு இழுத்துள்ளார் சிம்பு. மறைமுகமாக ரஜினியையும் இழுத்துள்ளார்.

வல்லவனில் இப்படி ஒரு வசனம் வருகிறதாம்: "அம்பானி மகளைக் கல்யாணம் பண்றது ஒன்னும் பெரிய விஷயமேயில்லை. ஆனால் அந்தளவுக்கு நமக்குத் தகுதி இருக்கான்னு யோசிக்கணும்" என்று வருகிறது அந்த வசனம்.




# விஜயகாந்த் செய்த துரோகம்!

இயக்குநர் தங்கர்பச்சான் விவகாரம் தொடர்பாக தயாரிப்பாளர் சங்கம் உறுதிமொழி அளித்தும் கூட, நடிகர், நடிகைகள் வேலை நிறுத்தம் செய்ததன் மூலம், தயாரிப்பாளர்களுக்கு நடிகர் சங்கத் தலைவர் விஜயகாந்த் துரோகம் இழைத்து விட்டார் என தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கத் தலைவர் தியாகராஜன் கூறியுள்ளார்.

நடிகைகள் குறித்து இயக்குநர் தங்கர்பச்சான் கூறிய கருத்துக்களையடுத்து, அவர் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று நடிகர், நடிகையர் கோரிக்கை விடுத்தனர். இல்லாவிட்டால் வேலைநிறுத்தம் நடத்தப்படும் என விஜயகாந்த் அறிவித்தார்.

இதைத் தொடர்ந்து நடிகர் சங்கத்திற்கு நேரில் சென்று தங்கர்பச்சான் மன்னிப்புக் கேட்டார். அப்போது நடிகைகள் குஷ்பு, விந்தியா போன்றோர் தங்கர்பச்சானை சரமாரியாகத் திட்டித் தீர்த்தனர். இந்த நிலையில் தங்கர்பச்சான் விவகாரத்தில், விஜயகாந்த் நடந்து கொண்ட விதம் மிகப் பெரிய துரோகச் செயல் எனத் தயாரிப்பாளர் சங்கத் தலைவர் தியாகராஜன் கூறியுள்ளார்.


அஸின்

# கோடம்பாக்கம்

கோடம்பாக்கம் படத்தை விஜய்யின் புதிய கீதை எனும் படத்தை இயக்கிய ஜெகன்ஜி இயக்குகிறார். சிற்பி இசை வழங்குகிறார். இதில் விசேட அம்சம் இலங்கையைச் சேர்ந்த - லண்டனில் வசிக்கும் - நம்மவர்களான கே.செவ்வேல், வி.எஸ். சதீசன் ஆகியோரே தயாரிக்கின்றனர்.

கோடம்பாக்கம் படத்தில் பிளாஷ்பேக் முழுவதும், கிராமத்தில் நடக்கிறது. அதில் நந்தா, தியா, கலைராணி, கஞ்சா கருப்பு ஆகியோரின் உடைகள் யதார்த்தமாக இருக்க வேண்டும் என்பதற்காக, மேட்டூரில் உள்ள பொது மக்கள் பயன்படுத்திய துணிகளை வாங்கிப் பயன்படுத்தியுள்ளனர்.

கோடம்பாக்கம் படத்திற்காக தியா சைக்கிள் ஓட்டிப் பழகியது போல், காமெடி நடிகர் முத்துக்காளை டிராக்டர் ஓட்டிப் பழகியுள்ளார்.

சூப்பர் ஸ்டார் ரஜினி படமான அருணாச்சலத்தில் பணிபுரிந்த கேமராமேன் யு.கே. செந்தில்குமார், சந்திரமுகியில் பணிபுரிந்த எடிட்டர் சுரேஸ் - அர்ஸ் இருவரும் இணைந்து கோடம்பாக்கம் படத்தில் பணிபுரிகின்றனர்.

# அவார்டுக்கு குறி வைக்கும் சிநேகா


ஆரம்பத்திலிருந்தே குடும்பக் குத்துவிளக்கு கணக்காக நடித்து வந்தார் சினேகா. அவரது அசத்தும் புன்னகை 'நம்ம பொண்ணு' என்று நினைக்க வைக்கும் முகவெட்டு, அழகு ஆகிய அத்தனையும் சேர்ந்து அடக்கம் ஒடுக்கமான வேடங்கள் கிடைத்து வந்தன. கனவு, ஆட்டோகிராப் - இந்த இரண்டு படங்களுமே சிநேகாவின் முதிர்ந்த நடிப்பை வெளிக்காட்டின. தொடர்ந்து பல படங்கள் வந்து குவியத் தொடங்கின. இந்த நிலையில்தான் மும்பை நடிகைகளின் ஆதிக்கமும், மலையாள நடிகைகளின் கவர்ச்சிக் களியாட்டமும் கோலிவுட்டைக் கலக்கத் தொடங்கின. அவரும் கிளாமருக்குத் தாவினார். ஆட்சேபனைகள் கொட்டின.


அலுத்துப்போன சிநேகாவுக்கு ஆறுதலாக இரு படங்கள் இப்போது உள்ளன. ஒன்று செல்வராகவன் இயக்கத்தில் உருவாகும் புதுப்பேட்டை. இன்னொன்று ஏ.பி.சி.டி. இரண்டு படங்களிலும் வித்தியாசமான ரோல்களில் நடித்து வருகிறார் சிநேகா. புதுப்பேட்டையில், அவருக்கு விலைமாது வேடமாம். இப்படத்தின் நாயகி சோனியா அகர்வால்தான் என்றாலும் நடிப்புக்கு சிநேகாவுக்கே அதிக வாய்ப்பாம். அம்மணியும் அடிச்சுத் தூள் கிளப்பி வருகிறார்.

அதேபோல 'ஏ.பி.சி.டி.' படத்தில் விதவையாக வருகிறார் சிநேகா.

"இந்த இரண்டு படமுமே எனக்கு நிச்சயம் விருது வாங்கித் தரும்" என்று அடிச்சுக் கூறுகிறார் சிநேக். அவரது இரசிகர்களும் அதற்கு ஆசி வழங்கி கடித மழை பொழிகிறார்களாம்.













# பிரசாந்த் திருமணம்


நடிகர் பிரசாந்த் - கிரஹலட்சுமி திருமணம் சென்னையில் கடந்த முதலாம் திகதி நடந்தது.

தொழிலதிபர் தனசேகர் - சிவகாமசுந்தரி ஆகியோரின் மகள் கிரஹலட்சுமிக்கும் பிரசாந்துக்கும் சென்னை சாந்தோமில் உள்ள மேயர் ராமநாதன் செட்டியார் திருமண மண்டபத்தில் காலை திருமணம் நடந்தது. 9.00 மணிக்கு மங்கள நாணை கிரஹலட்சுமியின் கழுத்தில் கட்டினார் பிரசாந்த்.

இந்த நிகழ்ச்சியில் நடிகர் விஜயகாந்த் - மனைவி பிரேமலதா, மணிரத்னம் - மனைவி சுகாசினி, செல்வமணி - மனைவி ரோஜா, மலேசிய அமைச்சர் டத்தோ சாமுவேல், தொழிலதிபர்கள் எம்.ஏ.எம்.ராமசாமி, ஏ.சி. முத்தையா, நடிகர்கள் நாகேஷ், விஜய்குமார், சூர்யா, டெல்லி கணேஷ், வெண்ணிறஆடைமூர்த்தி, கன்னட நடிகர் ரவிச்சந்திரன், நடிகைகள் கே.ஆர்.விஜயா, சுகன்யா, வைஜெயந்திமாலா, சரிதா, இயக்குநர்கள் கே.எஸ்.ரவிக்குமார், பாலுமகேந்திரா, சுந்தர், ஹரி உட்பட

ஏராளமான திரை நட்சத்திரங்கள், தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

மேலும் வால்டர் தேவாரம், 'துக்ளக்' ஆசிரியர் சோ, மாஜி மந்திரி செங்கோட்டையன் ஆகியோரும் மணமக்களை வாழ்த்தினர்.





...ர்கள் சார்பில்

... வாழ்த்துக்கள்

## த்ரிஷாவின் திடீர் மாற்றம்!

சரமாரியாக சர்ச்சைகளில் சிக்கி திக்குமுக்காடி வரும் த்ரிஷா, கண் போன பின் சூரிய நமஸ்காரம் என்பது போல கொஞ்சம் கொஞ்சமாகத் தன்னை மாற்றி வருகிறார்.

அட்டகாசமான தமிழச்சியான த்ரிஷா, யாரைப் பார்த்தாலும், ஆங்கிலத்தில்தான் பொளந்து கட்டுவார். எப்போவாச்சும் தமிழ் அவர் வாயில் எட்டிப் பார்க்கும். மறந்தும் தமிழில் பேசாமல் ஆங்கிலத்திலேயே வாய் ஜாலம் காட்டுவது த்ரிஷாவின் வாடிக்கை.


ஒரு திரைப்பட நிகழ்ச்சியில் த்ரிஷா ஆங்கிலத்தில் அளந்துகொண்டே போனார். இதைப் பார்த்துக்கொண்டிருந்த இயக்குநர் டி.ராஜேந்தர், தான் பேசும் போது த்ரிஷாவை கடுமையாக விமர்சித்தார்.

தமிழ்ப் பொண்ணே இப்படி ஆங்கிலத்தில் பேசினால், மும்பையிலிருந்து வரும் நடிகைகள் எப்படி தமிழில் பேச முன்வருவார்கள் என்று சூடு கொடுத்தார். ஆனால் த்ரிஷா இந்த விமர்சனங்களையெல்லாம் கண்டு கொண்டதே இல்லை. அவர் பாட்டுக்கு அவருக்குப் பிடித்த பாஷையில்தான் பேசிக் கொண்டிருந்தார்.

சமீபத்தில் சென்னை சைதாப்பேட்டைப் பகுதியில் சூர்யா, த்ரிஷா இணைந்து நடிக்கும் 'ஆறு' படத்தின் படப்பிடிப்பு நடந்தது. வழக்கமாக அல்டாப் அழகியாகக் காணப்படும் த்ரிஷா, அன்று மிக மிக அடக்கமாக அமைதியாகக் காணப்பட்டார்.

அடடா, த்ரிஷா மாறி விட்டாரே என்று சந்தோஷப்படும் நிருபர்கள் அவரை நெருங்கி "ஏன் மேடம் நீங்கள் மட்டும் அடிக்கடி சர்ச்சையில் சிக்குகிறீர்கள்?" என்று கேட்டால் "நடிப்பு எனது தொழில். எனது நண்பர்களுடன் நான் வெளியில் போனால் இவர்களுக்கு என்ன? வேண்டும் என்றே சிலர் என்னைப் பற்றி தவறான செய்திகளைப் பரப்பி கெட்ட பெயர் ஏற்படுத்துகிறார்கள். அதனால்தான் இப்போதெல்லாம் தேவையில்லாமல் யாரிடமும் பேசுவதில்லை" என்று புலம்பித் தள்ளுகிறாராம்.

மாற்றங்கள் வரவேற்கப்பட வேண்டியது தான்!





### 'ஜோ'வின் சொந்தப் படத்தில் சூர்யா!

சூர்யாவை வைத்து சொந்தப் படம் எடுக்கப் போகிறார் ஜோதிகா.


லைலா, மஜ்னு காதலுக்குப் பிறகு ரொம்பப் பிரபலமாகப் பேசப்படுவது ஜோதிகா, சூர்யா காதல்தான். காதலிப்பதே தெரியாமல் இருவரும் படு இரகசியமாகக் காதலித்து வருகிறார்கள். இவர்களது காதலில் புயலை விட தென்றலே அதிகம் வீசி வருவதால், நாளுக்கு நாள் காதல் வலுவடைந்து வருகிறது.

கூடிய விரைவிலேயே இருவரும் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறார்கள் என்ற அளவுக்கு இப்போது இவர்களது காதல் வளர்ந்து நிற்கிறது. இந்த நிலையில் சூர்யா தனது தம்பி கார்த்தியை வைத்து ஒரு சொந்தப் படம் எடுத்து வருகிறார். 'பருத்தி வீரன்' என்ற அப்படத்தின் உண்மையான தயாரிப்பாளர் சூர்யாதான் என்று கூறுகிறார்கள். ஆனால் தனது உறவினர் ஒருவரின் பெயரில் இப்படத்தை சூர்யா தயாரித்து வருவதாகக் கூறப்படுகிறது.

இதேபோல இப்போது ஜோதிகாவும் சொந்தப் படத் தயாரிப்பில் குதித்துள்ளார். இதுவரை வெறும் நடிகையாக மட்டுமே இருந்து வந்த ஜோதிகா, முதல் முறையாகத் தயாரிப்புத் துறையில் கால் பதிக்கிறார்.

இப்படத்தின் நாயகன் வேறு யாராக இருக்க முடியும்? சூர்யாவேதான்.

நந்தா - தேஜாஸ்ரீ
கோடம்பாக்கம்




சந்தியா & தியா


இலங்கையில் தனக்கென ஒரு இரசிகர் வட்டத்தைக் கொண்டிருப்பவரும் அவ்வப்போது பத்திரிகைகள் வாயிலான தொடர்புகளையும் கொண்டிருப்பவருமான லக்கி ஸ்டார் பிரசாந்திற்கு செப்டெம்பர் முதலாம் திகதி திருமணம் நடைபெற்றது.

அவரது திருமண வைபவப் புகைப்படங்களை 'முரசு' வாசகர்களுக்காக தந்து உதவியவர்கள், அவரின் விசேட அழைப்பின்பேரில் இலங்கையிலிருந்து சென்றிருந்த திரைப்படத் தயாரிப்பாளர் நிலாப்பிரியன், மெட்ரோ பொலிடன் பிஸினஸ் பாடசாலையின் உரிமையாளரான முகமட் சிராஷ் ஆகியவர்களாவர்.

'முரசு' வாசகர்களுக்காகப் பிரத்தியேகமாக இப்புகைப்படங்களைத் தந்துதவிய நிலாப்பிரியன், சிராஷ் ஆகியோருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளும் அதேவேளை பிரசாந்த் தம்பதிகளுக்கு 'முரசின் வாசகர்கள்' சார்பில் எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.









## விடை கொடு

ஆந்தையின் அலறலையும்
சிங்கத்தின் கர்ச்சனையையும்
சகித்துக் கொள்வேன்
ஆனால் -
உன் மௌன பாஷைக்கு
என்னால் -
ஈடுகொடுக்க முடியவில்லை!

மொழிகளை
நீண்ட நாட்களுக்கு முன்
சிறைவைத்து விட்டவள் போல்
விழிகளால் ஏன்
தவிக்க வைக்கிறாய்?

தகைமை
குறைவாக இருப்பினும்
உன்
காதல் நேர்முகத் தேர்வில்
எனக்கு வாய்ப்பளித்து
இதய அறையின்
நுழைவுச் சீட்டையும் தந்துவிடு
லஞ்சம் வேண்டுமானாலும்
கொடுத்து விடுகிறேன்!

அது முத்தமாக இருந்தாலும்
கொடுப்பதற்கு
வசதி - மிச்சமின்றி
எனக்கு.

உன் நினைவுகளை மட்டும்
சுவீகரித்து வாழும்
என் இதயம்
இறந்து போவதற்குள்
இதமான விடை கொடு!

–எம்.ஏ.றமீஸ்,
அட்டாளைச்சேனை – 10.

## காத்துக்கிடக்கிறேன்...

நாயகனே
நாளும் உன்
நினைவு
என்னுள் வந்து
நர்த்தனமாடுது
ஏனோ தெரியா
உன் முகம்
என்
சிந்தையில் வந்து
சித்திரம் போடுது
மன்னா
உன் மனதில்
ஓர்
இடத்துக்காக
என் மனம்
ஏங்குது
தேனே உன்னை
சிகரத்தில்
வைக்க என்
இதயம் நாடுது
நானே
உன் காதலன்
என்று சொல்லமட்டும்
ஏன் உன்
உதடுகள் நடுங்குது
நீயே என் காதலி
என்று சொல்
உன் உதடுகள்
திறந்திடும்
உன் நினைவால் தினம்
என் சிந்தை தீயினில்
வேகுது
தீயாய் என்னுடலும்
உன் வரவுக்காய்
ஏங்குது.
நீயாய் என்னை நாடி
வருவாய் என
நாளும் என் மனம்
ஏங்குது....

–மாதன் கவிதா,
அனலைதீவு – 05.

## நினைவுகள்

பள்ளிப்பருவத்தின்
பழைமையான
நினைவுகளில்
இன்று நான்

அ, ஆ முதல்
பல்கலைக்கழகம் வரை
ந(க)டந்து வந்த
பசுமையான நிகழ்வுகள்

பிரம்படிகளோடு
சொல்லடிகளும் பெற்ற
அந்த நாட்கள்

பால்யம் முதல்
யௌவனம் வரை
அனைத்தும்
துளித்துளியான
சந்தோசிப்புக்கள்.

பழைய நினைவுகளேயானாலும்
நிஜமாய் இனிக்கும்
பள்ளிப் பருவ
குதூகலிப்புக்கள்.

–நஸீஹா சம்சாத், ஏத்தாலை.

## வி(வீ)தி

பயணம் ஒன்றுக்காகப்
பாதை ஓரமாக
நின்றேன்...
பாதை அதைக்
குறுக்கறுத்துப் போன
பக்கத்து வீட்டு நாய்
உந்துருளியில் அடிபட்டு
'உயிர்' துடிதுடித்தது....
உயிர் காப்பதற்காக
ஓடிப் போனேன்.....
ஓவர் ஸ்ப்பீற்றில்
உறுமி வந்த
இன்னுமொரு வாகனம்
என்னையும் நாயையும்
ஒரே அடியாய்
அடித்துப் போட்டு விட்டுப்
பறந்து போனது...
'பார்வையாளர்கள்'
கூடினார்கள் - ஆனால்
பக்கத்தில் வரவில்லை
எட்டத்தே நின்றபடி.....
கிட்டவந்தாலோ
தொட்டாலோ
கெட்டுப் போய் விடும்
இவர்களது தகுதி...
அதனால் தள்ளியே
நின்றபடி....
விமர்சனம் செய்தார்கள்....
வேடிக்கை பார்த்தார்கள்...
பறந்தோடி விட்டார்கள்...!
அடிபட்டுக் கூட
நெடு நேரம் வரை
நீடித்துக் கிடந்த
நாயினதும் எனதும்
'உயிர்'...
'மதம்' இதனைக் கண்டு
ஏங்கிய ஏக்கத்தோடு தான்
இயமலோகம் பறந்தது...!
நாயினதும்
எனதும் விதி.....
வீதியிலேயே முடிந்தது....!
இதுவும் ஒரு
பயணம் தான்
நீண்ட தூரப் பயணம்...!
நன்றியுள்ள ஆத்மத்தோடு
எனது ஆத்மமும்
ஒன்றாக முடிந்ததையிட்டு
எனக்கோ பெரும்
நிம்மதியாய் இருந்தது.

–கன்னிமுத்து வெல்லபதியான்
– எருவில்.

## கனவுகளோடு

வா கண்மணி
வரலாற்றின்
துக்கம் நிரப்பப்படாத
இடைவெளிகளில்
நாமிருவரும்
உட்கார்ந்துகொள்வோம்

கண்களுக்குள்ளேயே
தொலைந்துபோன
கனவுகளைத் தேடி
அலைவோம்

மண்ணிலிருந்து
முளைத்தெழும்
அரும்புகளை
வாழ்த்துவோம்.

வாழ்ந்து சலித்து
வீழ்ந்து கிடக்கும்
இலைகளுக்காய்
இரங்கல்
செய்வோம்.

வெளியில் உலவும்
நம் மக்களின்
ஏக்கங்களைக்
கட்டிக்கொண்டு
அழுவோம்.



கனவுகளே
நிரந்தரமிங்கு
நாமும்
அலைகளோடே
வாழ்வோம்.

–மு.கீர்த்தியன்,
லபுக்கலையூர்.

## உன் ஒக்சிஜன்!

ஒரு வேளை
உன் துப்பட்டாவே
எனக்கு
தூக்கு கயிறாய்
மாறலாம்!
சிலவேளை - உன்
பட்டங்களே - எனை
பட்டதாரியாய்
மாற்றலாம்!

காதலி
புதுவீட்டிற்கு
புறப்படுகிறாள்
பழைய வீடு
காலியாகி விட்டது...
உனக்கான
பார்வைகள்,
நீ கேட்பாயென
என் இசைத்தட்டில்
மிதக்கும் பாடல்,
ஜன்னலோர
புன்னகை,
காத்திருப்புக்கள்,
எல்லாமே
நிறுத்தப்பட்டு
விடுமோ....
அவள்
வீட்டைப் பூட்டும்
சத்தம்
கேட்கிறது - என்
மாரடைப்புச்சத்தம்
கேட்டிருக்குமா?
உடைந்த உசுருக்கும்
கலப்படமற்ற
நினைவுகளுக்கும்
முடிவு
தந்துவிட்டுப்போ?

–நஸீம் ரூமி, புத்தளம்.

## சொப்பனங்கள்

இரவில்
கருத்தரிக்கப்பட்ட
சொப்பனங்கள்
பகலில்
உனக்காக
என்
கையெழுத்தில்
பிரசவித்தேன்.

–இர.கோணேஸ்வரன்,
நுவரெலியா.

## மறக்க முடியவில்லை

அம்மா தந்த
ஆசை முத்தம்
மறந்து விட்டது!
ஆசிரியர் தந்த
அறிவு பாடம்
மறந்து விட்டது!
அருமை நண்பன்
அருகாமையும்
மறந்துவிட்டது! அன்பே.....
உன் பார்வையின்
காதல் பாஷைகள் மட்டும்
மறக்கவில்லை.

–ஏ.வி.ஜீவகன் அமலதாஸ்,
அடப்பங்துளம்.

## இன்றும்

கனவுகள் எரித்த
வாழ்க்கையின்
கலைந்த
நினைவுகள்....
நிலைக்குத்தாவும்,
மேலும் கீழுமாயும்
சதுரம் காட்டி நின்றிற்று

இன்னுமொரு
கட்டங்களில்
சமாந்தரம்
கோடுகீறுமென்பதில்
உடன்பாடு
யாருக்கிடையிலோ?

இது உயிர்ப்பா,
மரணமா
பிரசவம் பார்க்க -
எங்கள் தேசத்தில்
ஆட்களில்லை?

நாம்தான்....
நீ வருகின்றாயா;
அவன் வருகின்றானா
சந்தியில் நின்று
கூவி
அழைத்தோமோ
இல்லையோ....
இங்கு மூன்றாம்
மத்தியஸ்தம்!
வெள்ளையனிடம்
சுதந்திரம்
பறித்தோம்.
சமாதானமும்
அவன்தான்
தர வேண்டுமோ?

–முல்லை நிலா.

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

"நீங்களும் குழந்தைகள் ஆகாவிட்டால் மோட்ச சாம்ராஜ்யத்தினுள் ஒருபோதும் நுழைய முடியாது" என்று பெரியவர்களைப் பார்த்து யேசு கிறிஸ்து சொன்னார். குழந்தைகளாய் இருப்பதற்கு முன், குழந்தைகளின் மன உலகை அறிந்து கொள்ள நாம் முயற்சி எடுக்க வேண்டும். அவர்களுக்குள் பெரியவர்களாகிய நம்மைத் திணித்துவிடுவதையே நாம் பெரிதும் செய்துவருகிறோம். நம்முடைய நிறைவேறாத ஆசைகளை நம் பிள்ளைகளினூடாக நிறைவேற்றிக் கொண்டு விடும் ஆவலாதியையே எல்லாப் பெற்றோரும் காண்பித்து வருகிறார்கள். நம் குழந்தையின் வயதுக்கு மீறிய புத்திசாலித்தனம், ஞாபகசக்தி, பாடுதல், ஆடுதலை மற்றவர்க்குக் காண்பித்து தம்பட்டமடிப்பதிலேயே நம் பெருமையெல்லாம் இருக்கிறது. நம் சந்தோஷத்திற்காக, குழந்தையைக் குழந்தையாக இருக்கவிடாமல், 'அதைச் செய்துகாட்டு, இதைச் செய்துகாட்டு' என்று சித்திரவதைப்படுத்த நாம் தயங்குவதில்லை. நம்மைப் பார்த்துத்தான் கலீல் ஜிப்ரான் சொன்னார் ;

"உங்கள் குழந்தைகள் உங்களுடையவை அல்ல; உங்கள் மூலமாக உலகத்துக்கு வருகின்றன - அவ்வளவே!"

அவர்களின் மீது நம்மைத் திணிக்க வேண்டாம். ஏனெனில் இன்னொரு 'நான்' இந்த உலகுக்குத் தேவைதானா?

குழந்தைகள் குறித்த மூன்று கவிதைகள் :

## குழந்தைகள் உலகம்

சில சதுர அடிகளே ஆன
எங்கள் ஒண்டுக் குடித்தன கவலை
மகளை தீண்டுவதில்லை.

தனக்கான வீட்டை
அவள் வரைந்து கொள்கிறாள்.

வரைந்த வீட்டின்
வண்ணக் கலவை முகத்தில்
ஒளியாய் வழிய
தூங்கிப் போகிறாள்.

சில பென்சில்களும்
கொஞ்ச நேரமும்
போதும் அவளுக்கு
வடிவங்கள் உயிர்பெற.

ஒரு சமயம் வெகுநேரம் கழித்து
எழுந்தவள்
தன் வீட்டில் குழந்தை நண்பர்களுக்கு
விருந்து வைத்ததாகச் சொன்னாள்.
அப்போது தேவன் வந்து போனாராம்.

ஒரு மழை நாளில்
வீடு வந்து சேர்ந்த
வெள்ளை பூனைக்குட்டியை விரட்டியபோது
அழுதுவிட்டாள்.

தன் புதிய வரைபட வீட்டில்
அதற்கு ஒரு அறை ஒதுக்குவதாக
தூக்கி அணைத்துக் கொண்டாள்

குழந்தைகளின் உலகத்தில்
யாருக்குத்தான் இடமிருக்காமல் போகாது.

–ராஜாசந்திரசேகர்

## வலி

ஒரு குழந்தை மரிக்கும் போது
எல்லோரும்
யாருடைய மரணம் யாருடைய மரணமென்று
கேட்கிறார்கள்.
பிரபஞ்சம், என்னுடைய மரணம்
என்னுடைய மரணமென்று
ஓயாமல் கதறுகிறது.
அதனால்தான்
புயலால் அடித்துக் கொல்லப்பட்ட
மீனவன் ஒதுங்காத ஒரு சமுத்திரக் கரையில்
கடற் சங்குகளை
வாரியிறைத்துப் போட்டது
அலைத் துயர்!

–பாலைநிலவன்

## சிருஷ்டி நகரம்

ஒரு சொட்டுக் கண்ணீரேனும்
சிந்தாமல்
ஒரு நாளும் பள்ளிக்குப்
போவதில்லை
என் மகன்.

புகார்கள் நிரம்பித் ததும்பும் பையுடன்
மாலையில் வந்து சேர்வான்.
பையை அவன் திறக்காமல் இருக்க
வேண்டும்
என்பதே என் அன்றாடக் கவலை.

நடக்கும் தூரத்திலுள்ள
பள்ளி ஒன்றில் சேர்த்துவிட்டேன்.
செல்ல அரைநாளும்
திரும்ப அரைநாளும்
எடுத்துக்கொண்டான்.

வாகனத்தில் கொண்டுவிடும்
தூரமுள்ள
பள்ளிக்கு அனுப்பினேன்.
வாகனம் பழுதாகவேண்டும் எனவும்
வாகனத் திருடன் விரைவில்
வரவேண்டும் எனவும்
அவனுடைய கடவுள்களிடம்
வேண்டுதல் செய்தான்.

பேருந்தில் செல்லும் தொலைவிலுள்ள
பள்ளி ஒன்றைக் காட்டினேன்
உயர்ந்த கட்டிடங்களை அண்ணாந்து
பார்த்துப்
'பொக்ளின்' வந்தால்
ஒரு மணி நேரத்தில் இடிந்துவிடுமா?
என்று கேட்டான்.

அவனுக்கான பள்ளியை
எப்படிச் சிருஷ்டிப்பதென
யோசித்துக்கொண்டிருந்த நாளில்
வீட்டிற்குள் அவனோர்
அற்புத நகரம் உருவாக்கியிருந்ததைக்
கண்டேன்.

கண் விரியப் பார்த்த என்னை
நகரத்துக்குள் அழைத்துச் சென்றான்.
கூரிய கட்டிடங்கள்
மிதக்கும் சாலைகள்
விளையாட்டுத் திடல்கள்
எல்லாம் சுற்றி முடித்த நான்
"எங்கே உன் பள்ளிக்கூடம்?"
என்றேன்.
வினோதமாக என்னைப் பார்த்த
அவன்
முகம் சுருங்கி
"இது பள்ளியில்லா நகரம்" என்றான்.

–இளமுருகு.

## பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி



பெயர் : எஸ். சுதர்சனராஜ்.
வயது : 21
முகவரி : P.O.Box - 60100, Alkhor, Doha - Qatar.
பொழுதுபோக்கு: கதை புத்தகம், ரீ.வீ.



பெயர் : எம்.பி.கே. மகேந்திரன்.
வயது : 26
முகவரி : தீவன் வீதி, நெடுங்கேணி.
பொழுதுபோக்கு : வழமையானவை.



பெயர் : எம்.எஸ்.எம். ஜஃபர்
வயது : --
முகவரி : 1018/1, மீராகேணி வீதி, ஜயங்கேணி, ஏறாவூர்.
பொழுதுபோக்கு : வழமையானவை.



பெயர் : வ.மகேஸ்வரன்.
வயது : 18
முகவரி : 61, கோணேசபுரம், உவர்மலை, திருகோணமலை.
பொழுதுபோக்கு : பத்திரிகை, புத்தகம்.

# உபவாசமும் ஒருவகை சிகிச்சைதான்

உடல் தன் இயல்பு நிலையிலிருந்து மாறுவதே நோய் என நோயியல் வல்லுநர்கள் குறிப்பிடுகிறார்கள். உடலை மறுபடியும் தன் இயல்பு நிலைக்குத் திரும்ப வைப்பதே இயற்கை மருத்துவ சிகிச்சையின் நோக்கம். மற்ற சிகிச்சை முறைகளில் உள்ளதுபோல் நோய்க்குத் தக்கவாறு மருந்துகள் என்று இதில் இல்லை. எந்த சிகிச்சை முறையைப் பயன் படுத்தினாலும் இயல்பு நிலைக்குத் திரும்ப வைப்பதே இதன் நோக்கம்.

இந்த முறைகளில் உபவாச சிகிச்சை



தலைசிறந்தது. இயற்கை மருத்துவத்தின் மற்ற எந்த சிகிச்சையும் விட, உபவாசமும், பிராணாயாமமும் உடலை சீக்கிரம் தன் இயல்பு நிலைக்குத் திருப்புகிறது. உபவாசத்தை, பட்டினி கிடப்பது என்று பலர் குறிப்பிடுகிறார்கள். பட்டினிக்கும், உபவாசத்திற்கும் வேறுபாடு உண்டு. நாம் அன்றாடம் உண்ணும் உணவில் எல்லா பகுதியையும் உடல் உபயோகித்துவிடு வதில்லை. ஒரு குறிப்பிட்ட பகுதியை உடல் உபயோகப்படுத்தாமல் சேமிப்பில் வைத்துக் கொள்கிறது. என்றாவது உடலுக்கு கிட்ட வில்லை என்றால் அந்த சேமிப்பு உணவை உடல் உபயோகப்படுத்திக் கொள்கிறது.

உடலில் சேமிப்பு இருக்கும் வரை நாம் உணவு கொடுக்காமல் இருந்தால் ஒன்றும் பெரிய தவறில்லை. அந்த சேமிப்பும் கரையும் பொழுது நம்முடைய உபவாசம் தொடருமா னால்,அதற்கு மேல் உடல் தளர்ந்து கொண்டே வருகிறது. இந்தத் தளரும் நிலைக்கு நாம் வந்து அதற்கு மேல் உணவு அருந்தாமல் இருந்தால்தான் பட்டினி என்பதாகும்.

உடலில் இந்தச் சேமிப்பு உணவு இருந்து கொண்டிருக்கும் பட்சத்தில் நாம் உணவு கொடுக்காமல் இருந்தால் உடல் தன்னுடைய பல வேலைகளைக் குறைத்துக்கொண்டு தன் னைத்தானே சுத்திகரிக்கும் பணியில் ஈடுபடுகிறது. உடலில் தேங்கியுள்ள நச்சுப் பொருட்களையும், நோய்களுக்குக் காரணமாக உள்ள உடலுக்கு ஒவ்வாத கழிவுத் தேக்கங் களையும் வெளியேற்றுவது இந்தச் சுத்திகரிப்பு.

நோய் உண்டாக்கும் கிருமிகளை அழிக்கும் சக்தி நம் இரத்தத்தில் உள்ள வெள்ளை அணுக்களுக்கு உண்டு. இந்த அணுக்களின் முழுமையான திறன், உணவு அருந்திக்கொண்டிருக்கும் நாட்களை விட உபவாச நாட்களில் அதிகம் வெளிப்படுகிறது. உபவாசம் உடலுக்கு ஓய்வாக அமைகிறது. உடலின் உள்ளுறுப்புகளின் இயக்கங்களுக்கும் ஓய்வு தருகிறது. இந்த முழு ஓய்வு கிடைக்கும்பொழுது உடல் தானே சீரடைகிறது. உபவாசத்தில் பல வகைகள் உள்ளன. தண்ணீர்கூட அருந்தாமல் இருந்துவிடுவது நிர்ஜலோபவாசம் என்பது.

இது உடல் ஆரோக்கியத்திற்காக இருப்பதைவிட ஆன்மீக ஆரோக்கியத்திற்காகத் தான் பின்பற்றப்படுகிறது உடல் ரீதியில் ஏதாவது பிரச்சினைகள் வந்தால் இது அவ்வளவாக உபயோகமாக இராது.

அடுத்தது தண்ணீர் மட்டும் அருந்தி உபவாசம் இருத்தல். நாள் முழுவதும் 3 முதல் 4லீட்டர் அருந்தி முழு ஓய்வு எடுப்பது. இது உடல் நோய்களைச் சீர்படுத்த வல்லது. காய்ச்சல், வயிற்றோட்டம், ஜலதோஷம், தொண் டைக் கட்டுகள் எனப் பல நோய்களுக்கு இது நல்ல பலன் தரும்.


நாட்பட்ட உடலில் பிரச்சினை கொடுத்து வரும் மூட்டு வலிகள், ஆஸ்துமா போன்ற நோன்ற நோய்கட்கும் ஆரம்ப காலக்கட்டத்தில் உடல் சுத்திகரிப்புக்கும் இது மிகவும் பலன் தரும். ஒன்று முதல் மூன்று நாட்கள் வரை உடல் எந்தளவுக்கு இடம் கொடுக்கிறதோ, அந்த அளவுக்கு உபவாசம் இருக்கலாம். கொஞ்சம் மன உறுதியும் பொறுமையும் தேவைப்படும்.

அடுத்த ரக உபவாசம் எல்லோராலும் பின்பற்றக்கூடியதே பழரசங்கள், இளநீர் போன்ற இயற்கையான பானங்களை மொத்தம் இரண்டு முதல் இரண்டரை லீட்டர் வரை குடித்து, மேலும் இரண்டரை லீட்டர் வரை நீர் அருந்திக்கொண்டு உபவாசம் இருத்தல்.

இயற்கை மருத்துவத்திற்குப் புதிதாக வரும் நோயாளிகள் இந்த முறையைப் பின்பற்றி உடல் சுத்திகரிப்புச் செய்து கொள்வர்.

## தண்ணீர மட்டும் அருந்தி உபவாசம் இருத்தல்

நோய்கள் நீங்கி உடல் தன்னிலைக்கு திரும்ப ஏதுவாயிருக்கிறது. பழக்கமில்லாதவர்கள்



பழரசங்கள், இளநீர் போன்ற இயற்கையான பானங்களை உட்கொண்டு தண்ணீரும் நிறைய அருந்தி உபவாசம் இருக்கலாம்.

*உபவாசத்தின் போது கவனிக்க வேண்டியவை*

உபவாசமிருப்பதற்கு முன் தினமே இரவு மாமிசம், மசால் உணவுகள், எண்ணெய்ப் பதார்த்தங்கள் தவிர்க்கப்பட வேண்டும். எளிய உணவு உட்கொண்டு பழங்கள் முதலானவை சற்று அதிகமாக எடுத்துக் கொண்டால் உபவாச தினத்தில் காலை மலச்சிக்கல் இன்றி எளிதாகவே இயற்கையாக உபாதையைத் தீர்க்க இயலும்.

உபவாசத்தன்று மலச்சிக்கல் காரணமாக குடலில் கழிவுகள் தேங்கினால் அதிகமாக வாயு உற்பத்தியாகி தலை வலி, உடல் இறுக்கம், வலிகள் ஆகிய உபாதைகள் இருக்கும்.

## எனிமா

மலச்சிக்கல் இருப்பது போலத் தோன்றினால், எனிமா சிகிச்சை எடுத்துக் கொள்வது அவசியம். சோப்புத் தண்ணீரைப் பயன்படுத்தாமல், சாதாரண நீரையே பயன்படுத்தலாம். ஆசன வாய் வழியாக பெருங்குடலில் ஒன்றிரண்டு டம்ளர் தண்ணீரைச் செலுத்தினால் மலத்தைக் கழுவி வெளியேற்றி விடுகிறது.

## வயிற்றுப் பட்டி

வயிற்றில் வாயு தொந்தரவு, அதிகப்படியான பசி முதலியவை அடங்கியிருந்தால் உபவாசத்தில் தொந்தரவு இருக்கும். அதற்கு ஏதுவாக வயிற்றுக்கு களிமண் பட்டிகள் காலை, மாலை, இரவு மூன்று வேளைகளிலும் போட்டுக்கொள்ள வேண்டும்.

சுத்திகரிக்கப்பட்ட களி மண்ணை இயற்கை மருத்துவ மையங்களில் ஊறப்போட்டு வைத்திருப்பார்கள் :

சில்லென்று இருக்கும் இதை ஈரமான பருத்தித் துணியில் பொட்டலம் போலக் கட்டி வைப்பது மண்பட்டி. அது கிடைக்காத பட்சத்தில் சற்றே கனமான துவாலையை பானைத் தண்ணீரில் அவ்வப்போது நனைத்து முக்கால் வாசித் தண்ணீரைப் பிழிந்துவிட்டு மண் பட்டிபோல் வயிற்றில் போட்டு வைத்துக் கொள்ளலாம். இது இரத்த ஓட்டத்தை அதிகரிக்கச் செய்து, பெருங்குடல், சிறுகுடல் போன்றவற்றைச் சீராக இயக்குகிறது.

வயிற்றின் உள்ளுறுப்புகள் சீராக இயங்கினால் வாயு கட்டாமல், வயிற்று வலியோ, தலைவலியோ இல்லாது இருக்கும்.

## மனோநிலை

உபவாசமிருக்க மனம் தயாராக இருக்க வேண்டும். அதிகமான வாசனை வரக்கூடிய இடங்களிலும், விருந்து கேளிக்கை நடக்கும் இடங்களிலும் உபவாசம் இருப்பது கடினம்.

## தண்ணீர் குடித்தல்

காலை முதல் நீர் அருந்தி வரவேண்டும். நாள் முழுவதும் இடையிடையே அரை டம்ளர், ஒரு டம்ளர் நீர் அருந்திக் கொண்டு வந்தால் பசியிருக்காது, சுத்திகரிப்பும் சீராக நடக்கும்.

ஒரே சமயத்தில் இரண்டு மூன்று டம்ளர் நீரை அருந்தினால் சிலருக்கு வாந்தி வருவது போலிருக்கும். ஆகவே, கொஞ்சம் கொஞ்சமாக அருந்திவர வேண்டும். இரண்டரை முதல் மூன்று லீட்டர் வரை குறைந்த பட்சம் குடிக்க வேண்டும். பழச்சாறானால் இரண்டு லீட்டரும், நீராக இருந்தால் சுமார் ஐந்து லீட்டர் வரையிலும் குடிக்கலாம்.

## ஓய்வு

உபவாச தினத்தில் உடலுக்கும், உள்ளு றுப்புகளுக்கும், மனத்திற்கும், புலன்களுக்குமாக நான்கு வித ஓய்வுகள் தரவேண்டும்.

## செய்யக்கூடாதவை

அலைச்சல், காபி, டீ, சிகரெட், மாத்திரைகள், டி.வி.பார்த்தல், சென்ட் உபயோகித்தல், வாசமுள்ள மலர்களைச் சூடிக்கொள்ளுதல், அருந்தும் சாறுகளில் வாசனை சேர்த்தல் அல்லது சுவை கூட்டல் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும்.


அல்சர் டி.பி, சர்க்கரை உள்ளவர்கள் உபவாசத்தைத் தவிர்ப்பது நல்லது.

உடலையும், மனதையும் ஒருசேர சுத்திகரிப்பதற்கு உபவாசம் ஒரு சிறந்த வைத்தியமாகும்.




# மேற்கத்திய கலாசாரத்தால் வரும் வினை...!

இன்று நமது பெண்கள் மத்தியில் மேற் கத்திய கலாசாரம் வேகமாகப் பரவி வருகிறது. உணவு பழக்கங்களிலும் சரி, வாழ்க்கை முறைகளிலும் சரி, நிறைய மாற்றங்கள் செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் இத் தகைய மாற்றங்களால் ஒரு நன்மையும் இல்லை. அதற்குப் பதில் மனித குலத்தை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொடிய மார்பகப் புற்றுநோய் ஆபத்து உயரும் என்று



மருத்துவ வல்லுநர்கள் எச்சரித்து உள்ளனர்.

பெண்கள் குழந்தை பெறுவதாக இருந்தால் 27 வயதுக்கு முன் பெற்றுக் கொள்ள வேண்டும். அப்படி பெற்றுக் கொள் ளாமல். சராசரியை விட எடையும் கூடுதலாக இருந்தால் மார்பகப் புற்றுநோய் ஆபத்து மிகப் பெரிய பிரச்சினையாகத் தோன்றும். 20 வருடங்களுக்கு முன் இந்தியப் பெண்களின் எடை சராசரியைக் காட்டிலும் 5 கிலோதான் கூடுதலாக இருந்தது. ஆனால் தற்போது உணவு முறையில் நிறைய மாற்றங்கள் வந்து விட்டதால் நிலைமை விபரீதமாகி விட்டது எனச் சொல்லலாம். இது போதாதென்று மேலைநாட்டுப் பாணியில் குறைவான உடல் உழைப்பு, நல்ல சத்துள்ள உணவு என்று வந்து விட்டதால், உடல் பெருத்து விடுகிறது.

கொழுப்பு செல்களில், குறிப்பிட்ட என்சைம்கள் வேதி வினை புரிந்து ஈஸ்ட் ரோஜன் ஹார்மோன்களாக மாற்றுகின்றன. இது மாதிரி தருணத்தில் ஈஸ்ட்ரோஜன் ஹார் மோன் அதிமாக வெளிப்பட்டால், மார்பகப் புற்றுநோய் ஆபத்து கூடும். இப்படிப்பட்ட நிலையில் உடல் எடை கூடினால் என்ன நடக்கும்? என்பதை யூகித்துக் கொள்ளுங்கள்.

இதுதவிர, தற்போது பெண் குழந் தைகள் பருவம் அடையும் வயது குறைந்து கொண்டே போகிறது. 11 வயதிலேயே வயதுக்கு வந்து விடுகிறார்கள். இது இன்னும் போகப் போகக் குறையும் வாய்ப்பு உள்ளது. இதுபோல சின்ன வயதிலேயே பருவத்துக்கு வந்து விடுவதால், மெனோ பாஸ் வயதும் தள்ளிப் போகும். அதாவது 45 வயதில் வரும் மெனோபாஸ். 50 மற்றும் அதற்கும் அதிகமாகப் போகும்.

புற்றுநோயைப் பொறுத்தவரை ஒரு சோம்பேறி தான். அது ஆரம்பத்தில் ஆமை போல பரவ ஆரம்பிக்கும். கிட்டத்தட்ட 30 ஆண்டுகள் பிடிக்கலாம். இந்நிலையில் இடைப்பட்ட காலத்தில் நாம் என்னென்ன செய்கிறோமோ, அதைப் பொறுத்து புற்றுநோய் இன்று வரலாம். அல்லது தள்ளிப் போகலாம். அவ்வளவு தான்.

(மார்பக) புற்றுநோய் கட்டிகள் 1 செண்டி மீட்டர் அளவில் இருக்கும் போது அமெரிக்காவில் 90 சதவீதம் கண்டுபிடித்து விடுகிறார்கள். ஆனால் நம் ஊரில் 60 சதவீதம் மட்டுமே கண்டுபிடிக்கப்படுகிறது. ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து விட்டால் ஆபத்தைக் குறைக்க முடியும்.

மார்பகப் புற்றுநோயைப் பொறுத்தமட்டில் நம் நாட்டில் விழிப்புணவு போதுமானதாக இல்லை. இதே நிலை நீடித்தால் கர்ப்பப் பை பை புற்றுநோய் தான் நம்பர் 1 கில்லர் என்ற நிலை மாறி, மார்பகப் புற்றுநோய் அந்த இடத்தைப் பிடித்து விடும்.

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது —ஷோபா—*

## சோள வடை

*தேவையானவை :*

| | |
|---|---|
| சோளம் | - ஒரு கிலோ |
| அரிசி | - 2 ஆழாக்கு |
| கடலைப் பருப்பு | - 2 ஆழாக்கு |
| காய்ந்த மிளகாய் | - கைப்பிடி அளவு |
| சுக்கு | - சிறு துண்டு |
| பெருங்காயம், உப்பு, காய்ந்த கருவேப்பிலை | - தேவைக்கேற்ப |

*செய்முறை :*

மேற்குறிப்பிட்டவற்றை மிஷினில் கொடுத்து, பாதி மாவாகவும் பாதி நைஸ் ரவையாகவும் அரைத்துக் கொடுக்கச் சொல்லவும்.

தேவைப்படும் போது, இரண்டு ஆழாக்கு மாவைத் தண்ணீரில் பிசிறி வைத்து விட்டு, உப்புத்தூள், நறுக்கிய வெங்காயம், கொத்தமல்லிக் கீரை சேர்த்துப் பிசைந்து கொண்டு, வாணலி யில் எண்ணெய் காய்ந்ததும், மாவை வடை போல தட்டிப் போட்டு எடுத்தால், சோளவடை ஐந்து நிமிடங்களில் தயார்.

# நோய் எதிர்ப்புப் பொருட்களின் தாய்....!

அடுத்த முறை பிசா ஆடர் செய்யும் போது காளானில் தயாரிக்கப்பட்ட பிசா வேண்டும் என்று கேட்டு வாங்கிச் சாப்பிடுங்கள்.ஏனெனில் காய்கறிகள், பழங்கள், முழுத்தானியங்கள், கொட்டை கள் மற்றும் டீ - காபி ஆகியவற்றில் இருக்கும் ஆன்டிஆக்ஸிடென்டுகள் (நோய் தடுப்புப் பொருட்கள்) காளானிலும் நிறைய காணப்படுகிறது.

ஆன்டி ஆக்ஸிடென்டுகளை பொறுத்தமட்டில் பல வகை உண்டு. ஆனால் விஞ்ஞானிகள் அவை அனைத் தையும் அடையாளம் காட்டவில்லை. எனினும் சுற்றுப்புற மாசுபாடுகள் மற்றும் நோய் ஆகியவற்றால் உடம்பு பாதிக்கப்படாமல் காக்கும் ஆற்றல் இந்த ஆன்டி ஆக்ஸிடென்டுகளுக்கு இருப்பதாக அவர்கள் கூறியுள்ளனர்.

நல்ல திக்கான நிறம் கொண்ட பழங்கள் மற்றும் காய்கறிகளில் காணப் படும் ஆன்டி ஆக்ஸிடென்டுகள் ஆர்த்ரைட்டிஸ் (Arhritis ) எனப்படும். மூட்டு வீக்க நோயை குறைப்பதாக விஞ்ஞானிகள் ஏற்கனவே நிருபித்துள்ளனர். இந்நிலை யில் லேட்டஸ்ட்டாக, பழங்கள் மற்றும் காய்கறி ஜூஸ்களில் காணப்படும். ஆன்டி - ஆக்ஸிடென்டுகள் அல்சீமர் ஆபத்தைக் குறைக்கும் என்று விஞ்ஞானிகள் உறுதி



செய்துள்ளனர். இது தவிர, இருதய நோய்கள் மற்றும் புற்றுநோயைத் தடுக்க உதவயுமா? என்ற ஒரு கேள்வியும் விஞ்ஞானிகள் மத்தியில் நிலவுகிறது.

கோதுமையுடன் ஒப்பிடும் போது காளான் களில் 12 மடங்கு கூடு தலான Er gothioneine (ஆன்டிஆக்ஸிடென்டுகள்) காணப்படுகின்றன. கோழிக் கறியை எடுத்துக் கொண்டால் அதை விட 4 மடங்கு கூடுதலான ஆன்டி ஆக்ஸிடென்டுகள் காளான்களில் உள்ளன. இந்தக் காரணத்தால் காளான்களை ஆன்டி ஆக்ஸிடென்டுகளில் தாய் என்று கூடச் சொல்லலாம்.

# ஒரு தாய் மகள் 48

சென்ற வாரம்
ஜேன் அழைத்து செனெட்டரின் மனைவியைப் பற்றி ஒரு தகவலைக் கூறுகிறாள். அவளின் தகவலை பேஜ் நிராகரித்து வீட்டு ஆஸ்பத்திரிக்குச் செல்கிறாள். அங்கு ஆலிஸன் தேறி வருவதாக டாக்டர்கள் கூறவே மீகவும் சந்தோஷப்படுகிறாள். தாரென்ஸனும் ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்கிறான்....


எழுதியது: டேனியல் ஸ்டீல்
தமிழில்: ரா.கி. ரங்கராஜன்

"ஆமாம். ஆண்டியிடம் நான் இன்னும் ஒன்றும் சொல்ல வில்லை."

"நான் பாவம் என்று சொன்னது ஆண்டியைப் பற்றி அல்ல. உன்னைப் பற்றி. பிராட் செய்வது ஏதோ தற்காலிகமான சபலம் என்று நினைத்திருந்தேன்...."

"இல்லை. இது ரொம்ப நாளாக நடந்து கொண்டிருக்கிறது. வீட்டை விட்டுப் போய் விடுவதாகக் கூட அவர் சொல்லிக் கொண்டி ருக்கிறார்" என்றாள் பேஜ். எவ்வளவு சுலபமாக அமைதியாக அந்த வார்த்தைகள் தன் வாயிலிருந்து வந்து விட்டன என்பதை நினைத்தபோது அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது. பதினாறு வருஷ தாம்பத்தியம்! அதை முறித்துக் கொண்டு வெளியே போவதாகக் கணவன் சொல்கிறான்! இந்தச் சனி ஞாயிறில் வீட்டுக்கு வருவதற்கில்லை என்று இன்று காலை கூடச் சொன்னான்! அப்படியும் அதைப் பெரிதாக நினைக்கத் தோன்றவில்லை!

"நான் கொஞ்சம் கூடச் சந்தேகப்படா மல் இருந்து விட்டேன். அடி முட்டாள் நான். ஆனால் ஒன்று. முந்தாநாள் ராத்திரி, கிட்டத் தட்ட இறந்து விட்டாள் என்ற நிலைமைக்கு ஆலி போய்விட்டு உயிரோடு திரும்பி வந்த



பிறகு, எனக்கே ஏதோ புதிய தெம்பு பிறந்த மாதிரி இருக்கிறது. பிராட் விஷயம் அப்படியொன்றும் தலை போகிற ஆபத்தாக இப்போது தோன்றவில்லை. எங்கேயிருந்து தான் எனக்குப் பலம் வந்ததோ, ஆச்சரியமாக இருக்கிறது" என்றாள் பேஜ்.

"இந்த மனம் இருக்கிறதே. இது ஒரு அற்புதமான பொக்கிஷப் பெட்டி. நமக்கு எப்போது என்ன தேவையோ அப்போது அதைக் கொடுக்கும்" என்றான் தாரென்ஸன். "சரி, நாளை சாயந்தரம் உனக்கு ஏதாவது வேலை இருக்கிறதா?"

"ஆலியைப் பார்ப்பதற்காக இங்கே ஆஸ்பத்திரிக்கு வர வேண்டும். எதற்குக் கேட்கிறீர்கள்?"

"நீ ஆண்டியுடன் என் வீட்டுக்குச் சாப்பிட வாயேன். என் பெரிய பையன் நிக் காலேஜுக்குப் போய் விட்டான். இங்கே க்ளோவை அவள் சினேகிதிகள் வந்து பார்த்துக்கொள்வதாகச் சொல்லியிருக்கி றார்கள். நானும் என் சின்னப் பையன் பிஜானும்தான் வீட்டில் இருப்போம். நீ ஆண்டியை அழைத்துக் கொண்டு வந்தால் அவனுடன் பிஜான் சந்தோஷமாக விளை யாடிக் கொண்டிருப்பான்" என்றான் தாரென்ஸன்.

பிஜானுக்கு ஏறத்தாழப் பதினெட்டு வயதாகப் போகிறது. ஆனால் மனவளர்ச்சி குன்றியவனாகையால், பத்துப் பன்னிரெண்டு வயதுச் சிறுவன் போல இருந்து வந்தான்.

"உங்களுக்கு ஏன் வீண் சிரமம்? என்று சொல்லிப் பார்த்தாள் பேஜ். ஆனால் தாரென்ஸனின் கண்களில் தெரிந்த மன்றாடல் சரியென்று சொல்ல வைத்தது.

"அப்பா இந்த வாரம் வீட்டுக்கு வரமாட்டார்" என்று பேஜ் சொன்னபோது, ஆண்டிக்கு ஏமாற்றமாக இருந்தது. "என்னம்மா, சனிக்கிழமை ஞாயிற்றுக்கிழமை களில் கூடவா அப்பாவுக்கு ஆபீசில் வேலை?" என்று முணுமுணுத்தான். ஆனால் தாரென்ஸனின் வீட்டுக்குப் போகப் போகிறோம் என்றதும் திருப்தியாகி விட்டது.

தாரென்ஸனின் வீட்டில் ஆண்டியும் பிஜானும் மிகவும் சினேகமாகி விட்டார்கள். இரண்டு பேருக்குமே பேஸ்பால் விளையாட் டில் ஆர்வம் உண்டு. இரண்டு பேரின் அக்காக்களும் ஆஸ்பத்திரியில் இருக்கி றார்கள். அது அவர்களிடையே ஒரு பந்தத்தை ஏற்படுத்தியது. தந்தைக்கு ஒத்தாசையாகத் தானும் சிறிது சமையல் வகைகளைச் செய்தான் பிஜான். சாப்பிட உட்கார்ந்தபோது அவர்கள் இருவரும் கலகலப்பாகப் பேசிக்கொண்டிருப்பதைக் காணத் தாரென்ஸனுக்கும் பேஜுக்கும் ஆறுதலாக இருந்தது.

பேஜ் ஆஸ்பத்திரிக்குப் புறப்பட வாசல்வரை வந்த தாரென்ஸன், "பிஜானை வளர்க்க நான் பட்டபாடு கொஞ்சநஞ்சமல்ல. எவ்வளவோ காயங்கள், விபத்துக்கள். ஒரு தடவை ஸ்டவ் பற்றவைத்து, தீக்காயம்கூட ஏற்படுத்திக் கொண்டான். மகா பொறுமை யுடன் அவனைக் காப்பாற்றி வந்திருக்கிறேன். நாளைக்கு ஆலியைக் கவனித்துக் கொள்ளும்போது உனக்கும் அப்படியொரு பொறுமையும் விடாமுயற்சியும் இருக்க வேண்டும். கஷ்டமான சமயங்களில் எனக்கு உதவி செய்ய நடுநடுவே யாராவது நல்ல மனிதர்கள் கிடைப்பதுண்டு. உனக்கும் அந்த மாதிரி கிடைப்பார்கள். தைரியமாக இரு" என்றான்.

பிஜானும் ஆண்டியும் புல்வெளியில் பேஸ்பால் விளையாடுவதைப் பார்த்தபடி ஒரு நிமிடம் நின்றுவிட்டு ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டாள் பேஜ். நெடுங்காலத்துக்குப் பிறகு அவள் மனசில் அமைதி நிரம்பி யிருந்தது.

எத்தனை கஷ்டங்கள் வேண்டுமானா லும் வரட்டும். பரவாயில்லை. தாங்கிக் கொள்ளலாம். கை கொடுக்க இதோ தாரென்ஸன் இருக்கிறார். நல்ல சினேகிதர்.... கொந்தளிக்கும் கடலிலிருந்து தப்பி, பசுஞ்சோலைகள் நிறைந்த தீவில் கரையேறினாற்போல இருந்தது அவளுக்கு.

ஆஸ்பத்திரிக்குச் சென்றவள், ஆலிஸனின் நிலைமை மோசமடையாமல் அப்படியே இருப்பதை அறிந்து கொண்டு அவளருகில் சிறிது நேரம் உட்கார்ந்து இருந்து விட்டு, ஆண்டியை அழைத்துக் கொள்வதற்காகத் தாரென்ஸனின் வீட்டுக்குத் திரும்பினாள்.

அவளைப் பார்த்ததும் புன்னகை செய்தான் தாரென்ஸன்.

"என் பையன் உன் பையனை விட மாட்டேன் என்கிறான். ராத்திரிச் சாப்பாட்டுக்கும் நீ இங்கேதான் தங்க வேண்டியிருக்கும்" என்றான்.

இதயம் படபடத்தது பேஜுக்கு. தன் வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்படப் போகிறது என்று அவள் உள்மனம் சொல்லியது.

தாரென்ஸனின் அழைப்புக்கிணங்க அன்று ராத்திரி பேஜ் அவன் வீட்டுக்குப் போனபோது, பிஜானும் ஆண்டியும் சீட்டு விளையாடிக் கொண்டு, சிரித்து விளையாடிக் கலாட்டா செய்து கொண்டிருந்தார்கள்.

சமையலில் ஈடுபட்டிருந்த தாரென்ஸன், "ஆஸ்பத்திரியில் க்ளோவைப் பார்த்தாயா? எப்படி இருக்கிறாள்?" என்று விசாரித்தான்.

"ரொம்ப நன்றாக இருக்கிறாள். அவளு டைய சினேகிதப் பையன் ஜேமி வந்திருந் தான். பாவம், எல்லாம் தன்னால்தான் என்று மனம் நொந்து போயிருக்கிறான். வருத்தத்துடன் பேசினான்" என்று சொல்லும்போது, எந்த நினைவுமில்லாமல், ஆறுதலுமில்லாமல் ஆஸ்பத்திரியில் தனியே கிடக்கும் ஆலிஸனின் நினைவு ஏற்பட்டு அவள் நெஞ்சை அறுத்தது. "போன வாரம், சொல்லப்போனால் இதே கிழமை, இதே நேரம்... ஆலி என் சிவப்பு ஸ்வெட்டரைக் கேட்டு வாங்கிப் போட்டுக் கொண்டு போனது இப்போது போல்தான் இருக்கிறது. அது எனக்கு ரொம்பப் பிடித்தமான ஸ்வெட்டர் தரவே மாட்டேன் என்றேன்...."

ஆலிஸன் ஆஸ்பத்திரிக்குப் போனவுட னேயே அந்த ஸ்வெட்டரைத் துண்டு துண்டாக வெட்டியெடுக்கும்படி ஆகிவிட்டது.

(தாய் தொடர்வாள்.....)

# ஒரு கிராமத்துப் பறவையும் சில கடல்களும் 7



பதிவு செய்த பிறகு வெள்ளையிளம் தேவதை வந்து அவள் அறைக்குள் என்னை அழைத்துப் போனாள்.

ஜாக்ளர் அவள் பெயர் - ஸ்கான்டிநேவியன் பெண். பனியில் குளித்து சூரியோதயத்தின் முதல் கிரணம் எடுத்துத் துவட்டிக் கொண்ட தூயமலராய் இருந்தாள் அவள்.

உயரமான சாய்வு நாற்காலியில் என்னை அமர்த்தினாள் என் காலணி - காலுறை களைந்தாள்.

பாதங்கள் விரல்கள் புரட்டிப் பார்த்தாள். என்னைப் போல் பாதம் - நகம் பராமரிப்போர் யாருமில்லை என்ற என் கர்வத்தின் மீது கல்லெறிந்தாள்.

இப்படியா நகங்களை நெருக்கி நறுக்குவது என்று கடிந்து கொண்டாள்.

நகங்கள் விரல்களின் கவசங்கள்; சில மில்லி மீட்டர்களாவது விரலுக்கு வெளியே நீண்டிருக்க வேண்டுமென்றாள்.

கருவிகள் எடுத்தாள்.

துடைத்தாள் - சுத்திகரித்தாள் - நெம்பினாள்.

அராவினாள் - களிம்பு தீட்டினாள் - நுனிகள் சீர் செய்தாள் - பிசிறு களைந்தாள் - பளபளப் பூட்டினாள் அத்தனை பணிகளையும் அரைமணி நேரம் செய்து முடித்துக் கடைசியில் கத்தியெடுத்தாள்.

'வலித்தால் சொல்லுங்கள்' என்று சொல்லிக் கொண்டே பரபரவென்று பாதம் சீவினாள். பனை நுங்கின் மேலோடு போலப் பாதச் செதில்கள் உதிர்ந்தன.

களிம்பு தடவினாள்; பையப் பையப் பாதம் குழைந்தாள்; பாதங்களுக்குள் சண்டையிட்டுக் கிடந்த நரம்புகளைச் சமாதானம் செய்தாள். மெல்லிய பஞ்சு கொண்டு தூய்மை செய்தாள்.

கடைசியில் தன் புறங்கைகளில் மணத்தூள் கொட்டிப் பாதப் பள்ளங்களில் அப்பினாள்; முடிந்தது என்றாள்.

மூன்று வருடப் பட்டப் படிப்பாம் நகம் வெட்டுவதற்கும், பாத சேவைக்கும்.

நரம்பு மண்டலங்களின் சந்திப்பு மையம் என்பதால் பாதங்களைப் பராமரிப்பதைக் கலையாகவும் விஞ்ஞானமாகவும் கருதுகிறார்கள் அவர்கள்.

கட்டணம் எவ்வளவு தெரியுமா?

90 ஸ்விஸ் ஃபிராங்குகள் - 2.250 ரூபாய். 2.250 ரூபாய் கொடுத்து நகம் வெட்டினேன் என்ற செய்தி எங்கள் கிராமத்துக்கு தெரிந்தால் என்னாகும்.

'ஏம்ப்பா வைரமுத்து - அந்த ரூபாய்க்கு நம்மூர்ல தலையையே வெட்டலாமே! நீ நகமா வெட்டிட்டு வந்த?'

நிச்சயம் கேட்பார்கள்; சொல்லக் கூடாது.

அந்தப் பாதசேவை நிலையத்தின் ஒருநாள் வருமானமென்ன என்று கணக்குப் போட்டுப் பார்த்தேன்.

அந்த நிலையத்தில் மொத்தம் 7 நாற்காலிகள். ஒரு நாற்காலியில் ஒரு நாளுக்கு 8 பேர்வீதம் 56 பேர்கள். ஓர் ஆளுக்கு ரூபாய் 2,250 வீதம் ஒரு நாள் வருமானம் ஒரு லட்சத்து இருபத்தாறாயிரம்.

விடுமுறை நாட்கள் போக 24 நாட்கள் பணி செய்தாலும் மாதத்துக்கு முப்பது லட்சத்து இருபத்து நான்காயிரம் ரூபாயாகும். அந்தக் கணக்கில் பார்த்தால் அதன் ஆண்டு வருமானம் மூன்று கோடியே அறுபத்திரண்டு லட்சத்து எண்பத்து எட்டாயிரம் ரூபாயாகும்.

நம்மூரில் ஒரு 'நகைக் கடை' வைத்து ஈட்ட முடியாத பொருளை அந்நாட்டில் சில பெண்கள் 'நகக்கடை' வைத்தே ஈட்டுகிறார்கள்.

வருமானமற்ற நாடு வருமானத்தை உருவாக்க வேண்டும். தொழிலற்ற நாடு தொழில்களைக் கண்டறிய வேண்டும். பாதம் எனக்குச் சொல்லித் தந்த பாடம் இது.

மறுநாள் மாலை லண்டன் பயணம். ஜூரிச் விமான நிலையத்தில் கண்களிலிருந்து உருவம் மறையும் வரை கையசைத்து விடை தந்தார்கள் அன்புத் தோழர்கள்.

வானத்திலிருந்து பார்க்கும் போது ஏதுமறியாத சாந்த சொரூபியாய் மஞ்சள் விளக்குகளின் மத்தியில் மிதந்தது லண்டன்

உலகப் படத்தை உற்றுப் பார்த்தால் ஓர் ஒற்றை பூட்ஸ் வடிவில் தெரியும் லண்டன் ஆனால், உலகின் தலையில் கால் வைத்தழுத்திய ஒற்றை பூட்ஸ் அல்லவா அது!

உலகம் எப்படி அசைய வேண்டும் என்பதை ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்கும் இந்த சிறிய நிலப்பரப்புத்தானே தீர்மானித்தது.

அரசுகள் கொல்லப்பட்டன; செல்வங்கள் அள்ளப்பட்டன; புதியதோர் ஆட்சிமுறை புகட்டப்பட்டது என்ற கோபங்களுக்கு மத்தியிலும் கிழிந்து கிடந்த தேசத்தை வாள் முனையால் தைத்து இந்தியா என்று உருவாக்கியவர்கள் இவர்கள்ததாமே என்றுமே தோன்றுகிறது.

வண்டு வந்து தேன் கொண்டு போகிறதே என்று பூ வருத்தப்பட்டாலும் அதன் விளைவாக மகரந்தச் சேர்க்கையும் நிகழ்ந்து முடிக்கிறதே! அப்படித்தான் பலவற்றை எடுத்துச் சென்றாலும், சிலவற்றைக் கொடுத்தும் சென்றது பிரிட்டிஷ் அரசு.

விமான நிலையம் விட்டு வெளிப்பட்ட போது தமிழ்நாட்டுக்கே வந்து விட்டோமா என்று கோலாகலம் செய்து விட்டார்கள் அருமை நண்பர்கள்.

அன்புச் சகோதரர் வீரா - ரவி - அண்ணாதுரை - கருணாநிதி - அன்பழகன் - செழியன் - மகேந்திரன் - பாண்டித்துரை - சபாபதி, லண்டன் தமிழ்ச்சங்கத் தலைவர் அருமை நண்பர் அசோகன் - செயலாளர் சீனிவாசன் - தமிழ்ச் சங்க உறுப்பினர்கள் - தமிழர் முன்னேற்றக் கழகத்தின் செயல்வீரர்கள் அனைவரும் பாசம் பொங்க வரவேற்ற போது இந்த அன்புக்கு நான் என்ன செய்து விட்டேன் என்று வெட்கியது மனசு.

எல்லா நாடுகளுக்கும் வரலாறு இல்லை. வரலாறு உள்ள நாடுகளெல்லாம் அதைப் பதிவு செய்வதில்லை. பதிவு செய்து வைத்திருந்தாலும் திட அடையாளங்கள் பாதுகாக்கப்படுவதில்லை.

இந்த மூன்றின் மீதும் பிரிக்க முடியாத காதல் கொண்டது பிரிட்டன். அந்த அடையாளச் சின்னங்களைக் கோட்டைக்குள் வைத்துக் காத்து வருவதும் பிரிட்டன்.

மறுநாள் 'வின்ட்சர் கோட்டை' காணவேண்டும் என்ற நீண்ட விருப்பத்தை நிறைவேற்றி வைத்தார் வீரா.

வின்ட்சர் கோட்டையின் உள்ளே புகுந்து வெளியே வந்த போது ஆயிரம் ஆண்டுகளின் காலப்பரப்பில் பின்னோக்கிப் பறந்து வெளியே வந்து விழுந்த மாதிரி இருந்தது.

கோட்டை என்றால் அதுதான் கோட்டை; பிரமாண்டமான கோட்டை; வானத்தை முட்டத் துடிக்கும் மூர்க்கமான கோட்டை.

பதினோராயிரம் நூற்றாண்டில் மன்னர் இரண்டாம் வில்லியம் கட்டத் தொடங்கி ஒவ்வொரு மன்னராலும் நீட்டிக்கப்பட்ட பெருங்கோட்டைச் இடவலமாய்ச் சுற்றும் பூமியை, வல இடமாய்ச் சுற்ற வைக்க முடியுமா என்று வாள் முனையில் சிந்தித்த கோட்டை.

ஆட்சி பீடமாய் இருந்து இன்று வரலாறுகளைச் சேமித்து வைத்திருக்கும் காட்சி பீடமாய் காணக்கிடைக்கும் கோட்டை.

நாங்கள் கோட்டை வாயிலை அடைந்த போது முணுமுணுக்கும் மழையில் குடைபிடித்துக் கொண்டு இரண்டு மைல் நீளத்திற்கு நின்றதொரு நெடுங்கூட்டம்.

கோட்டை பார்க்கவா இத்தனை கூட்டம் என்றேன்.


"இல்லை; நூற்று ஒரு ஆண்டுகள் மண்ணிலிருந்து அண்மையில் மறைந்து போன 'ராஜ மாதா' வின் கல்லறைக்கு அஞ்சலி செலுத்த" என்றார் வீரா.

*(தொடரும்...)*

*நன்றி :– திருமதி வைரமுத்து*

# காஸாவை மீட்டது பாலஸ்தீனம்

**காஸா** நிலப்பரப்பு அனைவரும் அறிந்ததே. இந்த நிலப்பரப்பு பல அழிவுகளையும் உயிரிழப்புகளையும் சந்தித்துள்ளது. ஆம், இந் நிலப்பரப்பு யாருக்குச் சொந்தமானது என்ற பெரும் போராட்டம் இஸ்ரேல் - பாலஸ்தீன நாடுகளுக்கிடையில் கடந்த 38 வருடங்களாக நடைபெற்று வந்தது. போராட்ட முடிவில் 2005ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் பாலஸ்தீனமே காஸாவை தனக்குரியதாக



உள்வாங்கியது.

ஆக, 350 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு கொண்ட காஸா நிலப்பரப்பு இஸ்ரேல் - பாலஸ்தீன நாடுகளின் எல்லையாகவும் அமைந்துள்ளது. இந் நிலப்பரப்பினை இஸ்ரேல் அத்துமீறிக் கைப்பற்றி வைத்திருந்ததன் விளைவே இப்போராட்டம். மிகப் பழங் காலத்தில் ஓட்டமன் எனும் சக்கரவர்த்தியால் ஆளப்பட்டு வந்த இவ்விரு நாடுகளும் பிரிட்டனின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி, கடைசியில் 1948ஆம் ஆண்டு எகிப்திய ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டு, இஸ்ரேல் நாடு தோற்றுவிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இருந்த பலஸ்தீன் எனும் நாட்டின் எல்லைப் பகுதிகளை உள்ளடக்கி யூத மக்கள் தங்களுக்கென்ற ஒரு நாட்டை அதாவது, இஸ்ரேலை உருவாக்கியதுதான் தாமதம் பாலஸ்தீன மக்கள் தங்கள் நிலப்பரப்புக்காகப் போராட்டத்தில் இறங்கினர். இவ்வாறு ஆரம்பமான இப்போர் 38 வருடங்களாக இடம்பெற்று கடைசியில் பாலஸ்தீனத்திற்கே காஸா என்ற நிலை ஏற்பட்டுள்ளது.


காஸா 1.3 மில்லியன் பாலஸ்தீன மக்களை உள்ளடக்கியது. இதில் முக்கால்வாசி மக்கள் இன்று அகதி முகாம்களிலேயே தங்கி வாழ்கின்றனர். போராட்ட வரலாற்றைப் பொறுத்தவரை முஸ்லிம் மக்களைக் கொண்ட பாலஸ்தீனம், யசீர் அரபாத் தலைமையில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினை (PLO) உருவாக்கி போராட்டப் பாதையைத் தொடர்ந்தது. அதேபோல் இஸ்ரேலும் தனது நாட்டு தேசிய இராணுவத் தினரையும் ஏனைய நாட்டு இராணுவத் தளபாடங்களையும் பயன்படுத்தி யுத்தத்தில் குதித்து போரிட்டு வந்தது. ஒப்பீட்டளவில் பாலஸ்தீனத்தின் இராணுவ பலம் குறைவாக இருந்த போதும், பாலஸ்தீனர்கள நுட்பமான போர்த்திறன்களைக் கையாண்டு வந்தனர். தமது நாட்டை எப்படியாவது மீட்டுவிட வேண்டும் என்ற பாலஸ்தீனர்களின் வெறி மற்றும் கனவு என்பன சேர்ந்ததே இவ் வெற்றி. யசீர் அரபாத் எனும் உன்னதமான தலைவரைப் பெற்றுக்கொண்ட (PLO) இயக்கம் தொடர்ந்து நுட்பமான கெரில்லா தாக்குதலை நடத்தியே வந்தது. ஈடுகொடுக்க முடியாத இஸ்ரேலிய இராணுவம் அப்பாவி மக்களையே சித்திரவதை செய்தது.





யசீர் அரபாத்தும் தன் மக்கள் சித்திரவதை செய்யப்படும் போதெல்லாம் அதனைப் பொறுத்துக் கொண்டும், கோபத்தை அடக்கி பொறுமை காத்தும் வந்தார். ஆயினும், இப் பொறுமையை சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட இஸ்ரேலியர்கள் மேலும் மேலும் பாலஸ்தீனத்தைத் தாக்கத் தொடங்கினர். பொறுமை கடந்த பாலஸ்தீனியர்கள் தமது இயக்கப் போராளிகளை தற்கொலைக் குண்டுதாரிகளாகப் பயன்படுத்தியே இஸ்ரேலியர்களை வென்றனர்.

யசீர் அரபாத்தின் மறைவுக்குப் பின் நல்ல ஒரு தலைமை கிடைக்குமா? என எதிர்பார்த்த போதே தலைவராக மஹ்மூத் அப்பாஸ் தெரிவானார். அவர் சமாதான வழியைப் பின்பற்றுவோம் என்று சற்று அமைதியாகவே தனது அரசியலை நகர்த்தினார். அந்த வகையில் அவர் இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனுடன் கைகுலுக்கியும் கொண்டார். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த எகிப்திய பேச்சு வார்த்தையையும் நிகழ்த்தினார். எப்படியாவது காஸாவை விடுதலை செய்வேன் என்று உறுதிபடக் கூறியிருந்தார். அவரின் கூற்று பலத்த எதிர்ப்புகள், விமர்சனங் களுக்கும் உட்பட்டது, அதையெல்லாம் பொருட்படுத்தாத அபாஸ் கடைசி வரைக் கடைபிடித்த சமாதான முயற்சியிலேயே தனது சொந்த நிலத்தை மீட்டெடுத்தார்.



இன்று காஸா பாலஸ்தீனர்களின் வசமானாலும், அது முற்றாகச் சீரழிந்த நிலையிலேயே இருக்கிறது. காஸாவை மீண்டும் கட்டியெழுப்ப குறைந்தது 2.6 பில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது. முற்றாக அழிந்த 20ஆயிரம் வீடுகளையும், சிறிய இடிபாடுகளுடன் காணப்படும் பல கட்டடிங்களையும் சீர்படுத்த நிதியுதவியையும் தாங்கள் தருவதாகவும் இஸ்ரேல் ஒப்புக்கொண்டுள்ளது. அதற்கு கைமாறாக காஸாவில் இருக்கும் யூதர்களின் வணக்க ஸ்தலங்களை அழிக்க வேண்டாமென இஸ்ரேல் கேட்டுள்ளது. அந்த நிபந்தனைகளுக்குப் பாலஸ்தீனம் இறங்கிவரவில்லை. யூத வணக்கஸ்தலங்கள் இருக்க அனுமதிக்கப் போவதில்லை என்று பாலஸ்தீனம் தெரிவித்துள்ளது. இதுவொரு பெரிய பிரச்சினையாக உருவெடுக்குமா? என்பது அடுத்த கேள்வி. வெண்ணெய் திரண்டு வரும்போது பானையைப் போட்டுடைத்த கதையாக மாறிவிடாமல் இருந்தால் மக்களுக்கு சந்தோசம்தான்.

இஸ்ரேலின் இந்த விட்டுக்கொடுப்பு நமக்குப் பெரியதொரு பாடம்தான். தமிழீழம், தேசியம், தலைமைத்துவம் என்றெல்லாம் கேட்பது பெரிய தவறல்ல. அதனைப் பெற்றுக்கொள்ள நாம் என்ன செய்தோம்? என்பதே கேள்வி. எம்மிடத்தில் ஏதாவதொரு விட்டுக்கொடுப்பு இல்லாமல் தனிநாடு, தேசியம் என்று போராடுவது ஏதேனும் அர்த்தமுள்ளதாக தெரியவில்லை. கோரிக்கைகள் பெரியளவில் வைத்தாலும், அதனை நிறைவேற்ற நாம் என்ன செய்யவேண்டும் என்பதை எமக்குக் காட்டியுள்ள இஸ்ரேல் - பாலஸ்தீன உறவுகளை நாமும் ஒரு பாடமாக எடுத்துக் கொள்ளலாம் என்றே நினைக்கத் தோன்றுகிறது.

---


**தினமுரசின் அபிமான வாசகர்களே! உங்களுக்காக சனிப் பெயர்ச்சியின் பின்னரான பலாபலன்களை விரிவாக கணித்துத் தந்துள்ளார் உலக மாந்திரீக சித்தர் பேராசிரியர் டாக்டர் பி.கே.சாமி ஐயா அவர்கள். அறிந்து அனுகூலமடையுங்கள். இதோ அவரது ஆசியும், அருளும்.**

# சனிப் பெயர்ச்சி பலன்கள்

**இந்தப் பகுதியில் சனிப் பெயர்ச்சியையும் குரு மாற்றத்தையும் கலந்து எழுதியுள்ளேன். பொதுவாக ராசி வாரியாக கொடுத்து இருந்தாலும் தீய பலன் உள்ளவர்கள் பயப்பட அவசியம் இல்லை. காரணம் உங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ராசி நேயருக்கு இந்த சனிப் பெயர்ச்சி நன்மையாக இருந்தால், நீங்களும் தீய பலனில் இருந்து விலக வாய்ப்பு இருக்கின்றது. நல்ல திசைகளும் துணைக் கிரகங்களின் பார்வைகளும் நன்மையாக இருந்தால் தீய பலன் வருவதற்கு வாய்ப்பு இல்லை.**

**ஓம் சத் மத் யத் மத்**

## கும்பம்



**கும்ப ராசி - 6இல் சனி அள்ளித் தருவார்!**

சனி பகவான் 24.06.2005 முதல் ராசி மாறி உங்கள் ராசிக்கு ஆறாமிடத்தில் சஞ்சரிக்க உள்ளார். சனியின் சஞ்சாரத் திற்கு ஆறாமிடம் மிகவும் அற்புதமான இடமாகும். ஆறாமிடச் சனி அனேக நன்மைகளை அள்ளித் தருவார். இவ் வருடத்தில் எவ்வாறெல்லாம் மகிழ்ச்சி அடையப் போகிறீர்கள் என்று. ஆறாமிடச் சனி ஒரு அசத்து அசத்திவிடுவார்.

முப்பது ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் பரிசு இது. இப்போது இது உங்களுக்குக் கிடைத்தி ருக்கிறது.

இதுவரையில் ஏற்பட்டிருந்த பொருளா தாரச் சிக்கல்கள் தீர்ந்து கையில் தாராளப் பணப்புழக்கம் ஏற்படும். கொடுக்கல் வாங்கல் சரளமாகும். வரவேண்டிய பாக்கிகள் உரிய நேரத்தில் வசூலாகும். பெரிய முயற்சிகள் இன்றியே பழைய நிலுவைகள் கைக்கு வரும். அந்தப் பணத்தை வேறு நல்ல தொழில், வியாபாரத்தில் முதலீடு செய்யலாம்.

பல வகையிலும் வருமானம் உண்டாகும். இதுவரையில் தொல்லை கொடுத்து வந்த கடன்காரர்கள் தணிந்து போவார்கள். பண வரவு சரளமாக இருப்பதால் கடன்களைப் பெருமளவு அடைத்து விடலாம். யார் யாருடைய பணமெல்லாமோ உங்கள் கையில் புழங்க ஆரம்பிக்கும். மன மகிழ்ச்சியும் நிம்மதியும் உண்டாகும்.

செய்தொழில், வியாபாரம் முதலிய வற்றில் ஏற்பட்டிருந்த போட்டி, பொறாமைகள் விலகும். போட்டியாளர்களால் ஏற்பட்டிருந்த சில நெருக்கடிகள் மறைந்து போகும். தொழில், வியாபாரம் முதலியவை அபிவிருத்தியடைந்து இலாப வரவுகள் பெருகும்.

குடும்பம், உற்றார், உறவினர் தொடர்பு களில் ஏற்பட்டிருந்த விரிசல்கள் சரியாகும். கணவன் - மனைவி உறவு பலப்படும். சொந்த பந்தங்கள் உதவிக்கு வருவார்கள். இது வரையில் போக்குக் காட்டி வந்த வழக்குகள் உங்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பாகும். திட்டமிட்ட காரியங்களில் சுலபமாக வெற்றி கிட்டும்.

உடல் ஆரோக்கியத்தில் ஏற்பட்டு இருந்த நோய் நொடிகள் விலகும். உடல் நலமடைந்து பலம் பெற்று விளங்கும். படுத்த படுக்கையாய்க் கிடந்தவர்கள் கூட எழுந்து நடமாடலாம். இதற்கு முன் ஏற்பட்டிருந்த அனாவசிய செலவுகள் குறையும். இன்னும் சொல்லப் போனால் மற்றவர் செலவிலேயே காலம் தள்ளக் கூடிய சான்ஸ்கூட ஒரு சிலருக்குக் கிடைக்கும்.

இனி சனி பகவானின் பார்வைகளின் மூலம் அடையக் கூடிய நன்மைகளைப் பார்ப்போம்.

சனி பகவான் மூன்றாம் பார்வையாக உங்கள் ராசிக்கு எட்டாமிடத்தைப் பார்க்கிறார். இதனால் கண்டங்கள் மறையும். ஆபத்துக்கள் அபிவிருத்தி அடையும். திட்டமிட்ட காரியங்களில் ஏற்பட்டிருந்த தடை தாமதங்கள் விலகும். எதையும் துணிந்து செய்யும் ஆற்றல் உருவாகும். சோம்பலும், அசதியும் மறைந்து சுறுசுறுப்பும் தன்னம் பிக்கையும் உருவாகும். அரசாங்கத்திட மிருந்து கிடைக்க வேண்டிய சலுகைகள் உடனடியாகக் கிடைக்கும்.

சனி பகவான் ஏழாம் பார்வையாக உங்கள் ராசிக்குப் பன்னிரண்டாமிடத்தைப் பார்க்கிறார். இதனால் தேவையற்ற விரயச் செலவுகள் குறையும். நிம்மதியான தூக்கமும் மன அமைதியும் பெறலாம். எல்லாவற்றையும் சமாளித்து விடலாம் என்ற மனோதிடமும் உண்டாகும். எதிரிகள் அடங்கிப் போவார்கள்.

சனி பகவான் பத்தாம் பார்வையாக உங்கள் ராசிக்கு மூன்றாமிடத்தைப் பார்க் கிறார். இதனால் சகோதர, சகோதரிகளால் உதவியும் ஆதாயமும் கிட்டும். போக பாக்கியங்கள் சிறப்படையும். வேலையாட்கள் விசுவாசமாக நடந்து உங்களது முன்னேற்றத்திற்காகப் பாடுபடுவார்கள். தொழில் தகராறுகள், கதவடைப்புகள் முடிவுக்கு வரும். மனத்தில் ஏற்பட்டிருந்த குழப்பம், அச்சம், கவலை விலகி துணிச்சல் உண்டாகும்.

அடுத்து, குரு பகவானைப் பற்றிப் பார்ப்போம். குரு பகவான் வருட ஆரம்பம் முதல் 19.09.2005 வரை உங்கள் ராசிக்கு எட்டாமிடத்தில் சஞ்சரிக்கவுள்ளார். எட்டாமிடம் குருவின் சஞ்சாரத்திற்கு உகந்த இடமல்ல.

அடுத்து, குரு பகவானைப் பற்றிப் பார்ப்போம். குரு பகவான் வருட ஆரம்பம் முதல் 19.09.2005 வரை சனியும் அரைகுறை மனத்தோடு செயல்படுவதால் ஆண்டின் நடுப்பகுதி வரை மிகவும் ஜாக்கிரதையாகத் தான் செயல்பட வேண்டும் என்பதை மறந்து விடாதீர்கள். மற்றவர்களின் உதவி இருந்த போதிலும் வருட கிரகங்களின் தாக்கு தலுக்குப் பதில் சொல்லியே ஆகவேண்டும்.

இதனால் உடலாரோக்கியம் பாதிப்பு அடையும். மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற வேண்டிய சூழ்நிலை ஏற்படும். யாருக்கும் அஞ்சாத நிலை மாறி பயம் தோன்றும். மனம் கவலையால் அலை மோதும். செய்தொழில் வியாபாரம் பயன் தராது. பிரயாணத்தில் இடையூறு உண்டாகும். குடும்பத்தில் பிரச்சினை தோன்றும். பொருள் விரயம் உண்டாகும்.

குரு பகவான் ஐந்தாம் பார்வையாக உங்கள் ராசிக்குப் பன்னிரண்டாமிடத்தைப் பார்ப்பதால் அனாவசியச் செலவுகள் அதிகரிக்கும். யார் பேச்சையாவது கேட்டு ஆசைப்பட்டு பணத்தை எதிலாவது முடக்கி விடுவீர்கள். தேவையற்ற அலைச்சல் திரிச்சல்கள் உண்டாகும். இரவில் நிம்மதியான தூக்கம் இருக்காது. மனத்தில் நல்ல எண்ணங்கள் தோன்றாது. இனம் புரியாத குழப்பங்கள் ஏற்படும்.

குரு பகவான் ஏழாம் பார்வையாக இரண்டாம் இடத்தைப் பார்ப்பதால் பொருளாதார நிலையில் சரிவு தோன்றும். பணத் தட்டுப்பாடு ஏற்படும். வரவேண்டிய பாக்கிகள் உரிய நேரத்தில் வசூலாகாது. குடும்பத்தில் குழப்பம் தோன்றும். கணவன் - மனைவி ஒற்றுமை குறைந்து போகும்.

குரு பகவான் ஒன்பதாம் பார்வையாக நாலாம் இடத்தைப் பார்ப்பதால் உடல் நலம் பாதிப்படையும். மாணவர்கள் படிப்பில் மந்த நிலை அடைவார்கள். தேர்வில் மதிப்பெண்கள் குறைந்து போகும். வாகன யோகம் பலன் தராது. மாடு கன்றுகள் நஷ்டம் தரும். உடல் ஆரோக்கியத்தில் சில பல கோளாறுகள் உருவாகும். புதிய வாகனங்கள், மாடு கன்றுகள் வாங்குவதை ஒத்திப்போடலாம்.

இத்தகைய இன்னல்களைக் கொடுத்து வந்த குரு பகவான் 19.09.2005 முதல் ராசி மாறி உங்கள் ராசிக்கு ஒன்பதா மிடத்தில் சஞ்சரிக்கவுள்ளார். ஒன்பதாமிடம் உயர்வான இடம்தான். இனி நன்மையான பலன்களை அருள்வார். உங்களைப் பொறுத்தவரை இது உவப்பான செய்திதான். இந்தக் கால கட்டத்தில் சனியும் முழு உதவி செய்யவிருப்பதால், இதனால் மனம் தெளிவடைந்து மாபெரும் காரியங்களில் ஈடுபாடு உண்டாகும். விவசா யிகள் அமோக விளைச்சலை அடை வார்கள். உத்தியோகஸ்தர்கள் பதவி உயர்வு சம்பள உயர்வு பெறுவார்கள். திருமணமாகாத இளம் வயது ஆண், பெண்களுக்கு திருமண வாய்ப்புக் கூடி வரும்.

குரு பகவான் ஐந்தாம் பார்வையாக உங்களது ஜென்ம ராசியைப் பார்ப்பதால் உடல் நலம் பெற்று விளங்கும். மனத்தில் தெளிவு உண்டாகும். சமுதாயத்தில் உங்களது மதிப்பு, மரியாதை, கௌரவம், அந்தஸ்து ஆகியவை உயர்வடையும். சமுதாய மதிப்பு மிக்க பதவி ஒன்றும் உங் களைத் தேடி வரும்.

குரு பகவான் ஒன்பதாம் பார்வையாக உங்கள் ராசிக்கு ஐந்தாமிடத்தைப் பார்ப்பதால் ரேஸ், சூதாட்டம், மார்க்கெட் முதலியவற்றில் அதிர்ஷ்டப் பரிசுகள் கிட்டும். முன்னோர்கள் தேடி வைத்த பூர்வீகச் சொத்தில் வில்லங்கம் நீங்கி கைக்கு வந்து சேரும். அவற்றில் வருமானம் அதிகரிக்கும். ஸ்திரீ புத்திரர்கள் சம்பந்தப்பட்ட விஷயங்கள் எல்லாம் நல்லபடியாக நடக்கும்.

*(அடுத்த வாரம் மீன ராசியைப் பற்றி பார்க்கலாம்...)*

# மூட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## தமிழ் மக்களின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்திய தாக்குதல்

தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்திய சம்பவங்களில் அனுராதபுர தாக்குதலுமொன்று. ஏற்கனவே கென்ற் டொலர்பாம் களில் அரசாங்கம் திட்டமிட்ட முறையில் குடியேற்றிய சிங்களக் கைதிகள் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் பலர் கொல்லப்பட்டனர். 1984ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முப்பதாம் திகதி இத்தாக்குதல் நடைபெற்றது. எந்தவொரு விடுதலைப் போராட்ட இயக்கமும் அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்த மாட்டாது. அப்படித் தாக்குதல் நடத்தப்படும் பட்சத்தில் அது பயங்கரவாத இயக்கமாகவே பரிணமிக்கும். இன ரீதியான விடிவுக்காகப் போராடுவதாகக் கூறிக்கொள்ளும் ஓர் அமைப்பு, மாற்றினத்தைச் சேர்ந்த அப்பாவி மக்களைத் தாக்குவது அப்பட்டமான மனித உரிமை மீறல் மட்டுமல்ல, பயங்கரவாத நடவடிக் கையுமாகும். அரசு இயந்திரத்தின் அச்சாணியாகத் திகழும் ஆயுதப்படைகள் மற்றும் அந்த இயந்திரத்தின் பொருளாதார மற்றும் கேந்திர மையங்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை நியாயப்படுத்த முடியும். அப்பாவி மக்களை எதிரியாகக் கருதி, தாக்குதல் நடத்தும் அரச படைகளை அரச பயங்கரவாதிகளென்று அழைக்கலாம். இதே போன்று எந்தவித நோக்கமுமின்றி அப்பாவி மக்கள் மீது அடாவடித்தனங்களைக் கட்டவிழ்த்து விடும் ஆயுத இயக்கங்களை பயங்கரவாத இயக்கங்களென்று வர்ணிப்பதுண்டு. இந்த வகையில், புலிகள் நடத்திய அனுராதபுரத் தாக்குதல் அவர்களைப் பயங்கரவாதிகளென இனம் காட்டியது.




**அப்பாவிச் சிங்கள மக்கள் மீது புலிகள் கட்டவிழ்த்து விட்ட கொடூரம், தமிழ் மக்களுக்கு உலகளாவிய ரீதியில் கிடைத்திருந்த அபிமானத்தைக் கொச்சைப்படுத்தியது. அரச பயங்கரவாதிகளோ ஆயுதம் தாங்கிய பயங்கரவாதிகளோ ஒருவரை மற்றொருவர் செய்யும் கொடூரங்களுக்குப் பழிவாங்குவதாகக் கூறியே அப்பாவிகளான மக்கள் மீது தாக்குதல்களைத் தொடுக்கின்றனர். இதனால்தான் 1985ஆம் ஆண்டு மே மாதம் 9, 10ஆம் திகதிகளில் வல்வெட்டித்துறை, பொலிகண்டி, உடுப்பிட்டி ஆகிய இடங்களில் ஆயுதப் படையினர் கட்டவிழ்த்துவிட்ட அடாவடித்தனங்களுக்கு பதிலடியாகவே அனுராதபுரத்தில் சிங்கள மக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகப் புலிகள் நியாயம் கற்பித்தனர்.**

1983ஆம் ஆண்டு ஜ"லை மாதம் அரசாங்க அனுசரணையோடு அப்பாவித் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள், இலங்கை அரசாங்கத்தை உலகளாவிய ரீதியில் தலைகுனிய வைத்தது. இலங்கை அரசாங்கத்தின் மீது இனஒடுக்குமுறை அல்லது இன ஒழிப்பு முத்திரை உலக நாடுகளிலெல்லாம் குத்தப்பட்டது. இதனால்தான் தமிழ் மக்கள் சார்பாக ஆயுதமேந்திய தமிழீழ இயக்கங்களுக்கு, விடுதலைப் போராட்ட அமைப்புகளென்ற அந்தஸ்து வழங்கப்பட்டது. அடாவடித்தனங்கள் அக்கிரமங்களிலிருந்து தப்பியோடிவரும் மக்களென்ற ரீதியில் தமிழ் மக்களுக்கு இந்தியாவும் மேற்கு ஐரோப்பிய நாடுகளும் ஸ்கண்டிநேவிய நாடுகளும் அகதிகளாக வரக் கதவு களைத் திறந்து விட்டன. இந்த வகையில் அப்பாவிச் சிங்கள மக்கள் மீது புலிகள் கட்டவிழ்த்து விட்ட கொடூரம், தமிழ் மக்களுக்கு உலகளாவிய ரீதியில் கிடைத்திருந்த அபிமானத்தைக் கொச்சைப்படுத்தியது. அரச பயங்கரவாதிகளோ ஆயுதம் தாங்கிய பயங்கரவாதிகளோ ஒருவரை மற்றொருவர் செய்யும் கொடூரங்களுக்குப் பழிவாங்குவதாகக் கூறியே அப்பாவிகளான மக்கள் மீது தாக்குதல்களைத் தொடுக்கின்றனர். இதனால்தான் 1985ஆம் ஆண்டு மே மாதம் 9, 10ஆம் திகதிகளில் வல்வெட்டித்துறை, பொலிகண்டி, உடுப்பிட்டி ஆகிய இடங்களில் ஆயுதப் படையினர் கட்டவிழ்த்துவிட்ட அடாவடித்தனங்களுக்கு பதிலடியாகவே அனுராதபுரத்தில் சிங்கள மக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகப் புலிகள் நியாயம் கற்பித்தனர்.

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

(அரசியல் தொடர்)

அனுராதபுரத் தாக்குதல் நடத்தப்பட்ட அன்றைய தினம் அனுராதபுரத்தில் தமிழ் மக்கள் தாக்கப்பட்டனர். அவர்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. பலர் அகதிகளாகத் தப்பியோட்டம் பிடித்தனர். திட்டமிட்ட சிங்களக் காடையர் குழுக்களே இத் தாக்குதலை நடத்தின. அன்று கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்தை நோக்கிச் செல்லவிருந்த யாழ்தேவி ரயிலில் பயணிக்கும் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்காக பெருந்தொகையான காடையர்கள் அனுராதபுர ரயில் நிலையத்தில் காத்து நின்றனர். அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்ததும் மாகோ ரயில் நிலையத்தில் யாழ்தேவி நிறுத்தப்பட்டது. தமிழ் பயணிகளை பாதுகாப்பான இடங்களுக்குத் திரும்பிச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டது. அன்றைய தினம் யாழ்தேவி ரயில் அனுராதபுர ரயில் நிலையத்தை சென்றடைந்திருக்குமென்றால் பெருந்தொகையான தமிழ் மக்கள் கொல்லப்பட்டிருப்பார்கள். இனவெறிகொண்ட காடையர்கள் மட்டுமல்ல, கொள்ளையர் கும்பலும் காத்து நின்றது.

யாழ்தேவி ரயில் மாகோவில் நிறுத்தப்பட்ட தகவலையறிந்ததும் ஆத்திரம் கொண்ட சிங்களக் காடையர் கூட்டம் அனுராதபுர ரயில் நிலையத்தில் கடமையாற்றிய ஆறு தமிழ் உத்தியோகஸ்தர்களை அடித்தும், வெட்டியும், குத்தியும் கொன்றது. இதேவேளை பாதுகாப்புத்தேடி பெருந்தொகையான தமிழ் மக்கள் அனுராதபுரம் விவேகானந்தா மகா வித்தியாலயத்திற்கு வந்து சேர்ந்தனர். நல்லெண்ணம் கொண்ட சிங்கள மக்கள் சிலர், பல தமிழ் குடும்பங்களுக்குப் பாதுகாப்பளித்தனர். இராணுவமும் பொலிஸ"ம் அகதிகளுக்குப் பாதுகாப்பளித்தனர். 17ஆம் திகதிவரை விவேகானந்தா மகா வித்தியாலயத்தில் தங்கியிருந்த பல நூற்றுக்கணக்கான அகதிகள் இராணுவ பாதுகாப்போடு வவுனியா நகருக்கு ஆறு பஸ்களில் கூட்டி வரப்பட்டனர். இவர்களைக் கூட்டிவந்த பெரும்பான்மை இன இராணுவ அதிகாரி வவுனியா நகரை பஸ்கள் வந்தடைந்ததும் அனைவரையும் இறங்கி வீதிகளில் அமருமாறு பணித்தார். என்ன நடக்கப்போகிறதோ என்று தமிழ் அகதிகள் பரிதவித்துக் கொண்டிருந்தனர்.

"உங்களில் பணம் வைத்திருப்பவர்கள் கைகளை உயர்த்துங்கள்" என்று அந்த இராணுவ அதிகாரி கேட்டார். பலர் கைகளை உயர்த்தினார்கள். பிறகு "பணமில்லாதவர்கள் கைகளை உயர்த்துங்கள்" என்று கூறினார். அந்த இராணுவ அதிகாரி கூற, மேலும் சிலர் கைகளை உயர்த்தினர். "சரி உங்களைப் பாதுகாப்பாக பாதுகாப்பான இடத்துக்குக் கொண்டு வந்து விட்டுள்ளோம். வீடு செல்வதற்கு பணமுள்ளவர்கள் பணமில்லாதவர்களுக்கு உதவுங்கள்" என்று கூறிவிட்டு அந்த இராணுவ அதிகாரி திரும்பிச் சென்றார்.

மனித நேயமுள்ள சிங்கள இராணுவ அதிகாரிகளும் இருக்கிறார்கள் என்று அந்த அகதிகளில் பலர் பேசிக் கொண்டார்கள். தமிழ் பயணிகள் மீதான மற்றொரு பயங்கரத் தாக்குதல் மறுநாள் நெடுந்தீவுக் கடலில் இடம் பெற்றது. நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவான் இறங்கு துறைக்கு தமிழ் பயணிகளை ஏற்றிச் சென்ற 'குமுதினி' எனும் பெயர் கொண்ட படகு, இடைநடுவில் கடற்படையினரால் வழிமறிக்கப்பட்டது. திபு திபுவென படகுக்குள் பாய்ந்த கடற்படையினர், பயணிகள் மீது கண்மூடித்தனமாகத் தாக்குதல்களை நடத்தினர். கடற்படையினர் சுட்டும் வெட்டியும் குத்தியும் நடத்திய தாக்குதல்களில் 34 பயணிகள் சடலங்களாகப் படகுக்குள் சாய்ந்தனர். 30 பேர் படுகாயங்களுக்கிலக்காகி துடிதுடித்துக் கொண்டிருந்தனர். தகவல்கள் கிடைத்ததும் தமிழீழ இயக்கங்கள் விரைந்து சென்று காயமுற்றவர்களைக் காப்பாற்றி வந்து சிகிச்சைக்குட்படுத்தினர்.

குமுதினிப் படகுக் கொடூரம், புலிகளைக் கொதிப்படைய வைத்தது. புலிகள் இயக்கத்தின் திருமலைத் தளபதி புலேந்திரன் பழிவாங்கத் துடித்துக் கொண்டிருந்தார். மே மாதம் 30ஆம் திகதி புலேந்திரன் தலைமையிலான புலிகளின் அணியொன்று திருகோணமலை, பொலனறுவை மாவட்ட எல்லையிலுள்ள இரு சிங்களக் குடியேற்றக் கிராமங்களைத் தாக்கியது. மஹிந்தபுர, தெஹிவத்த என்ற பெயர்கள் கொண்ட இக் கிராமங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில் 15 சிங்கள அப்பாவிகள் கொல்லப்பட்டனர். பின்னாட்களில் புலேந்திரன் சயனைட் அருந்தி தற்கொலை செய்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழகத்திலிருந்து ஆயுதங்களோடு படகொன்றின் மூலம் வல்வெட்டித்துறையை நோக்கி வந்து கொண்டிருந்த புலேந்திரன், குமரப்பா உட்பட 17 புலி உறுப்பினர்களை இலங்கைக் கடற்படையினர் 1987ஆம் ஆண்டு கைது செய்திருந்தனர். இலங்கை - இந்திய ஒப்பந்தம் அப்போது அமுலிலிருந்ததால் இவர்களை விடுவித்துத் தருமாறு புலிகள் இந்திய அரசைக் கோரினர்.

(தொடர்ந்து 'வடியும்....)




"சந்துநாயருக்கு எதிரா நாம என்னமோ செய்யறதா அவருக்குத் தோணியிருக்கலாம். இல்லேன்னா இந்த மாதிரியெல்லாம் நடக்கிறதுக்கு வாய்ப்பே கிடையாது. அப்புறம் நீங்க இன்னொரு விஷயத்தையும் புரிஞ்சுக்கணும். நான் ரொம்பப் பெரிய மந்திரவாதியெல்லாம் கிடையாது. ஜோஸியம் தெரியும். ஓரளவுக்கு இந்த மாதிரி நடவடிக்கைகளை யார் செய்யுறாங்கன்னு தெரிஞ்சுக்க ஹோமம் பண்ணுவேன்" கிருஷ்ண குறூப்பு இருளை வெறித்தபடி பேசினார்.



"அப்படீன்னா இதுக்குப் பின்னால யார் இருக்காங்கன்னு பார்த்துடலாமா?" குமார் கேட்டார்.

"பார்த்துட்டா போகுது. என்கூடக் கிளம்புங்க!"

"இந்த நேரத்துலயா?"

"இந்த மாதிரி விஷயங்களுக்கு ராத்திரி-பகல்ங்கிற வித்தியாசமெல்லாம் கிடையாது. இன்னைக்கு அமாவாசை. ரொம்பவும் பொருத்தமான நாளும்கூட."

குறூப்பின் யோசனையை

**எழுதுவது சிவன்**

அவர்கள் ஒப்புக்கொண்டனர். மூவரும் உடனே அங்கிருந்து புறப்பட்டனர்.

குறூப்பு தனது வீட்டுக்கு வந்தவுடனேயே ஹோமம் தொடங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். அந்த நடு ராத்திரியில் சின்னச் சின்ன சப்தமும், 'ஹோ'வென்று கேட்டது.

ஹோமம் ஆரம்பிக்கப்பட்டது. ஹோமகுண்டத்திலிருந்து புகைச்சுருள்கள் உயர்ந்தன. சற்று நேரத்துக்குள் நெருப்பு, கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது.

அதன் முன்னால் அமர்ந்தபடி குறூப்பு கண்களை மூடி, மந்திரங்களை உருவேற்றிக் கொண்டிருந்தார்.

அப்போது -

ஹோம குண்டலத்திலிருந்து உயர்ந்து வந்த புகைச் சுருள் மற்றும் அக்னி ஜ"வாலைகளுக்கு மத்தியில் ஒரு முகம் தெளிவாகத் தெரிந்தது.

குமாரும், பிரபாகரனும் அதை வியப்போடு கவனித்தனர்.

கிட்டத்தட்ட ஒரு குதிரையைப் போலிருந்தது அந்த பைசாசிகமான முகம். கிருஷ்ண குறூப்பு மெதுவாகக் கண்களைத் திறந்தார்.

அவரது நாக்கு அசைந்து ஒரு பெயரை உச்சரித்தது: "ஜயந்தன்!"

குறூப்பு, அப்படிச் சொன்னதும் சட்டென்று அந்த முகம் நெருப்பு குண்டலத்திலிருந்து மறைந்தது.

"அந்த முகத்தைக் கவனித்தீர்களா!" கிருஷ்ண குறூப்பு கேட்டார்.

"பார்த்தோம்.... இந்த அளவு பயங்கரமான ஒரு முகத்தை இதுவரைக்கும் எங்கேயுமே நாங்க பார்த்ததில்லை."

"உண்மைதான். நீங்க பார்த்திருக்க முடியாது. இவன் பேரு ஜயந்தன். நாகத்தான் பாறையோட அடிவாரத்துல குடியிருக்கிற பெரிய மந்திரவாதி. அவனை எதிர்க்கறதுங்கறது அசாத்தியமான காரியம்" கிருஷ்ண குறூப்பு ஏமாற்றமும், அச்சமும் நிறைந்த குரலில் பேசினார்.

"அப்படின்னா இப்ப நாம என்னதான் செய்யறது?" என்றான் பிரபாகரன்.

அவன் குழம்பிப் போயிருப்பது குரலில் தெரிந்தது.

'ஜயந்தனை எதிர்ப்பது கஷ்டம்' என்று கிருஷ்ண குறூப்பு சொன்னது பிரபாகரனை ரொம்பவே அதிர வைத்தது.

கிருஷ்ண குறூப்பு சற்று நேரம் தீவிரமாக யோசித்தபடி மௌனமாக உட்கார்ந்தார்.

சற்று நேரத்துக்குப் பிறகு மெதுவான குரலில், "துர்மந்திரவாதம் செய்வதில் ஜயந்தன் பெரிய கில்லாடி. அவனைப் பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கேன். உண்மையைச் சொல்றதானா, அவங்கிட்ட மோதுற அளவுக்கு எங்கிட்ட எந்தவிதமான தந்திர சக்தியும் கிடையாது" என்றார் விரக்தியோடு.

"ரொம்பவும் சிக்கலான நிலைமை. என்ன செய்யறதுன்னே ஒண்ணும் புரியலை!" என்றார் குமார் குழப்பத்தோடு.

மறுபடியும் யோசனையில் ஆழ்ந்த கிருஷ்ண குறூப்பு சற்றுநேரம் கழித்து, "எனக்குத் தெரிஞ்சு, ஜயந்தனோட மோதற அளவுக்கு நம்ம பக்கத்துல யாரும் இருக்கிறதாத் தெரியலை. வடக்குல (மலபார் பகுதி) என்னோட தாய் மாமா ஒருத்தர் இருக்கிறார். 'கேளு குறூப்பு'ங்கிறது அவர் பேரு. அவருக்கு வயது தொண்ணூறு இருக்கும். வேணும்னா அவர்கிட்ட விசாரிச்சுப் பார்க்கிறேன்!"

"அதை உடனடியாகச் செய்யுங்கள்!" - பிரபாகரன் பரபரத்தான்.

கிருஷ்ண குறூப்பு அன்றிரவே புறப்பட்டார்.

மறுநாள் காலையில் எழுந்து கோயிலுக்குப் போய் விட்டு வந்தார் குமார்.

(வாசனை வீசும்....)

# 'கைசன்' கொள்கை தெரியுமா?

செல்வச் செழிப்பு அடைந்திருக்கும் நாடுகளின் மக்கள், தங்கள் நாடுகளை உயர்த்த எந்த விதமான கொள்கைகளைக் கையாண்டார்கள் என்பது பற்றிச் சொல்லட்டுமா?

அமெரிக்கா, ஐரோப்பா போன்ற மேலைநாட்டினரிடம் ஒரு அணுகுமுறை இருக்கிறது. ஒரு ஏக்கர் நிலத்தில் இரண்டாயிரம் ஆப்பிள் விளைய வேண்டும் என்று அவர்கள் நிர்ணயித்தால், அந்த இலக்கை எப்படியும் அடைந்துவிட வேண்டும் என்று அவர்கள் விடாப்பிடியாகப் பாடுபடுவார்கள். அந்த ஒரு ஏக்கர் நிலம் செழிப்பானதோ, இல்லையோ, அதுபற்றி அவர்களுக்குக் கவலையில்லை. ரசாயன உரத்தைப் பயன்படுத்தியாவது ஏக்கருக்கு இரண்டாயிரம் ஆப்பிளை அவர்கள் விளைவித்து விடுவார்கள். அவர்களின் இந்த அணுகுமுறைக்கு Result Oriented Management என்று பெயர்.

செல்வச் செழிப்பு அடைந்திருக்கும் ஜப்பானியர்களின் அணுகுமுறை வேறுவிதமானது. இவர்கள் அமெரிக்கர்களைப் போல் ஏக்கருக்கு இரண்டாயிரம் ஆப்பிள் விளையவேண்டும் என்பதில் குறியாக இருக்கமாட்டார்கள். 'ஆப்பிளை என்ன மாதிரியான நிலத்தில் பயிரிடவேண்டும்..... எத்தனை நாளைக்கு ஒருமுறை நீர் ஊற்ற வேண்டும்' என்ற எண்ணிக்கையில் குறியாக இல்லாமல், அதை அடையும் வழிமுறையில் முழுக் கவனத்தையும் செலுத்துவார்கள். இந்த அணுகுமுறைக்கு Process Oriented Management என்று பெயர்.

ஒரு ஏக்கரில் அமெரிக்கர்களை விட ஜப்பானியர்கள் விளைவித்த ஆப்பிளின் எண்ணிக்கை சில சமயம் குறைவாகக்கூட இருக்கும். ஆனால், ஜப்பானியர்கள் விளைவித்த ஆப்பிளில்தான் சுவை கூடுதலாக இருக்கும்.

ஜப்பானியர்களின் இந்த அணுகுமுறை, 'பலனை எதிர்பாராமல் கடமையைச் செய்' என்ற நமது கீதையின் சாரம்தானே.

ஜப்பானியர்களின் வெற்றிக்கு முதுகெலும்பாக விளங்கும் இன்னொரு கொள்கை - 'கைசன்'! இதன் அர்த்தம் என்ன தெரியுமா? மேலும் மேலும் சிறப்பு. அதாவது, 'ஒரு வேலையை எவ்வளவுதான் சிறப்பாகச் செய்தாலும், அடுத்த முறை இந்த வேலையை இதைவிடச் சிறப்பாகச் செய்யவேண்டும்' என்பதுதான் அந்தக் கொள்கை.

நாம் ஒருவர் இன்னொருவரைப் பார்க்கும்போது 'வணக்கம்' சொல்லிக்கொள்வதுபோல ஜப்பானியர்கள் ஒருவர், இன்னொருவரைப் பார்க்கும்போது, "வாழ்க்கை எனும் நதிக்கு வெற்றி" என்று கூறிக்கொள்வார்கள். ஜப்பானியர்களுக்கு வெற்றி என்பது இலக்கு அல்ல... ஒவ்வொரு கணத்தையும் பொழுதுபோக்காக நினைக்காமல் 'வெற்றி' என்ற நோக்கிலேயே பார்க்கிறார்கள். ஜப்பானியர்களுக்கு வாழ்க்கை என்பதே வெற்றிதான்.



வெற்றியைப் பற்றிப் பேசும்போது இதையும் நிச்சயம் குறிப்பிட்டாக வேண்டும். இரண்டு பேர் சண்டைபோட்டால் ஒருவர் வெற்றி பெறுவார்... இன்னொருவர் தோல்வி அடையத்தான் செய்வார். இருவருமே வெற்றியடைய முடியுமா?

முடியும்! அதற்கு Win-Win Method என்று பெயர். கம்பெனியில் ஒரு பிரச்சினை.... இரண்டு நிர்வாகிகள் இதுபற்றி விவாதிக்கிறார்கள். ஒருவர் ஒரு கருத்தைச் சொல்கிறார். அடுத்தவர் இவரின் கருத்துக்கு மாறுபட்ட கருத்தை வைத்திருக்கிறார். இருவரும் விவாதம் செய்கிறார்கள். இந்த விவாதத்தில் ஒருவர் ஜெயித்தால் இன்னொருவர் தோற்க வேண்டும். ஆனால், இந்த இருவருமே, "உன்னுடைய கருத்து சரியா?" என்று பார்க்காமல், "இந்த நேரத்துக்கு எந்தக் கருத்து சரி?" என்று கருத்தின் தன்மையை மட்டும் பார்த்து ஒரு முடிவுக்கு வரும்போது, பிரச்சினைக்குச் சரியான தீர்வைக் கண்டறிந்த மகிழ்ச்சியில் இருவருமே வெற்றி அடைந்ததைப் போல சந்தோஷப்படுவார்கள்! இதுதான் Win-Win Method.

மேலைநாட்டினரின் இந்த யுக்தியை இப்போது நம் நாட்டிலுள்ள நிர்வாகிகள்கூடத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தும்போது பயன்படுத்துகிறார்கள்!

இதையெல்லாம் படித்துவிட்டு, "வெற்றி மீது எனக்கு ஆசை இருக்கிறது... எனக்குத் திறமையும் இருக்கிறது. ஆனால், உடன் வேலை செய்பவர்கள்தான் என்னை அமுக்கி வைக்கிறார்கள்... முன்னேற விடாமல் தடுக்கிறார்கள்" என்று யார் சொன்னாலும் அதை நம்புவது சிரமமாக இருக்கும்! ஏனென்றால், வெற்றிப் படிகளில் ஏற விரும்புவது யாராக இருந்தாலும், அவர்களைக் குப்புறத் தள்ளிக் குழி தோண்டி மண்ணுக்கு அடியில் புதைத்தாலும், அவர்கள் மரமாக மீண்டும் முளைத்துக் கொண்டு மேலே வருவது நிச்சயம்!

தீப்பந்தத்தைப் பூமியை நோக்கிக் கவிழ்த்தாலும், தீயின் ஜுவாலை வானத்தை நோக்கித்தான் இருக்கும்!

ஒரு மரம், சிறந்த மரமா, இல்லையா என்பதை யாரும் மரத்தைக் கேட்டு தீர்மானிப்பதில்லை! அந்த மரம் கொடுக்கும் பழங்களை வைத்துத்தான் 'மரம் சிறந்ததா, இல்லையா' என்று ஊரார் தீர்மானிப்பார்கள்.

அதேபோலத்தான், நீங்கள் சாதிக்கப் பிறந்தவரா, இல்லையா என்பதை உங்களைக் கேட்டு இந்த உலகம் தெரிந்து கொள்ளாது! உங்களின் சாதனையை வைத்துத்தான் உலகம் உங்களை எடை போடும்!

நன்றி : சுவாமி சுகபோதானந்தா.

(தொடர்ந்து வரும்........)

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 136க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

சி.கோமதி, எம்.ஓ.எச்.விடுதி ஒழுங்கை, கல்முனை.

### பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

1. திருமதி ஜெயா ஜேசுதாசன், 155/07 ஜெம்பட்டா வீதி, கொழும்பு 13.
2. எம்.எச்.எம். ஜவ்பர், 207, கல்பொக்கை வீதி. வெலிகம.
3. சீ தங்கவடிவேல், அரசினர் வைத்தியசாலை, மட்டக்களப்பு.
4. ஆர்.எம். பாயிஸ், பனூஸா ஸ்டோர், பிரதான வீதி, மூதூர் - 01.
5. ஏ.ஜே. பாத்திமா பஸ்னா, 61/1A/1 மகாபுத்கமுவ, முல்லேரியாவ.
6. எம்.ஜே. பெர்னாண்டோ, 30/3, புனித லூசியாஸ் ஒழுங்கை, கொழும்பு 13.
7. ஏ.எம். முஸ்தபா, இன்டர் நெட் கொம், பிரதான வீதி, ஏறாவூர்.
8. ஏ.கே. நவாஸ், 596, ஓடாவியார் வீதி, ஏறாவூர் 02.
9. க. பவன், இராமகிருஷ்ண வீதி. களுதாவளை -03, களுவாஞ்சிக்குடி.
10. த. நாகையா, நியு ராணி ஸ்ரூடியோ. கல்முனை.

### குறுக்கெழுத்துப் போட்டி 138

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | |
| 7 | | 9 | | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | |
| 19 | | 21 | | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | |
| | 32 | | 34 | 35 | 36 |

### இடமிருந்து வலம்

1. கட்ரீனாவால் தாக்கப்பட்ட உலக வல்லரசு.
11. வெள்ளைக்காரரிடமிருந்து நாம் கற்றுகொண்ட தின்பண்டம் (மாறியுள்ளது).
13. விவசாய ஆராச்சி நிலையம் அமைந்துள்ள இடம்.
23. ஜோக்கில் ஒரு வகை: நாயின் செயல்களில் ஒன்று.
25. ஆடம்பரம் (குழம்பியுள்ளது).
34. தானுண்ட நீரை தலையால் கொடுக்கும் (வலமிருந்து இடம்).

### குறுக்கெழுத்துப் போட்டி 136 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 க | 2 தி | 3 ற் | 4 கா | 5 ம | 6 ற் |
| 7 ட | 8 ஓ | 9 தி | 10 ற் | | 12 தூ |
| 13 ற் | | 15 ற | | 17 க | 18 ளி |
| 19 ம | 20 தி | 21 வி | 22 ற | 23 தை | |
| 25 டை | 26 ம | | | 29 கா | 30 சு |
| | 32 சு | 33 ச | 34 ம் | 35 வி | 36 வா |

### மேலிருந்து கீழ்

1. யானையை அடக்கப் பயன்படுவது.
3. வலதுசாரி எதிர்ப்பதம் (குழம்பியுள்ளது).
5. பொழுது விடிந்தவுடன் மனிதர்கள் கழிப்பது (குழம்பியுள்ளது).
26. இல்லையின் எதிர்ப்பதம் (திரும்பியுள்ளது).
28. கற்பகதரு என அழைக்கப்படும் மரம்.

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 21.09.2005 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-138
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# கோபம்



-சின்னத்தங்கச்சி, லண்டன்.

**ம**ந்திகை ஆஸ்பத்திரிக்குப் போயிருந்தேன் ஒரு நண்பனின் வருத்தம் பார்க்க. நெருப்புத் தண்ணி வாசம் வஞ்சகமில்லாமல் எங்கும் வீசியது. கண்கள் பஞ்சடைத்தபடியோ, இருமிக் கொண்டோ, கை, கால்களில் வெள்ளை நிறக் கண்ணறைத் துணியால் கட்டுப் போட்ட படியோ...(சிலருடைய கட்டுக்கள் ஊத்தை பிடித்தும், ஊனம் படிந்ததுமாய்... சிலருடைய கட்டுக்கள் வெள்ளை வெளேரென்று புதிதாக...) நோயாளிகள். வெள்ளை உடுப்புகளில் எடுப்பாகத் தாதிகள் காணும் இடமெல்லாம் எதிர்ப்பட்டனர். மருத்துவர்கள் யாரும் கண்ணில் படவில்லை. வெளிநாடு போக வசதியில்லாத அல்லது சமூக சிந்தனையோடு இங்கே தங்கிவிட்ட ஓரிரு மருத்துவர்கள் இங்கு எங்கேயாவது இருக்கக்கூடும்.

நண்பன் இருக்கும் வார்ட்டுக்குப் போவதற்கு குறுக்கு வழி என்று இன்னொரு வார்ட்டைக் காட்டிவிட்டார்கள். இரு மருங்கும் ஆண் நோயாளிகள் படுத்தபடியோ, எழும்பி இருந்தபடியோ, நலம் விசாரிக்கப்பட்டபடியோ காணப்பட்டார்கள். இதற்குள்ளும் தெரிந்த முகங்கள் யாரும் இருக்கக்கூடும். கண்களை மேலோட்டமாக மேய விட்டபடியே நடந்தேன்.

7-8 கட்டில்கள் தாண்டியபின் வலப் பக்கத்தில் இருந்த கட்டிலில் படுத்திருந்தவர் எனக்குத் தெரிந்தவராக இருக்க வேண்டுமென்று அந்தக் கட்டிலைக் கடந்தபிறகுதான் என் மூளை சொன்னது. பின்னால் இரண்டு எட்டு வைத்து முகத்தைப் பார்த்தேன்.

அத்தான். நாதன் அத்தான். அவரும் என்னைப் பார்த்துவிட்டார். என்னைப் பார்த்ததில் அவர் முகத்தில் விவரிக்க முடியாத பிரகாசம். இதழ்களில் புன்னகை.

"மூத்தவா வாடா. நீ என்னைப் பாக்க வருவாயெண்டு நினைக்கவேயில்லையடா. சரியான சந்தோசமாக் கிடக்கு. வாடா, இப்பிடி இரடா" என்று தன் கட்டிலருகே கை காட்டினார். எழுந்திருக்கவும் முயற்சித்தார்; முடியவில்லைப் போலும்.

நான் முகத்தைத் திருப்பிக் கொண்டு விறுவிறுவென்று அவரைக் கடந்து நடந்தேன். புன்னகையோடிருந்த அந்த முகம் ஒரு நொடியில் இருளாகிப் போயிருக்கும்!

சீ எதுக்கடா இதுக்குள்ளால வந்தேன் என்றிருந்தது எனக்கு. நான் அவரோட கதைக்காமல் விட்டே ஒரு வருடத்துக்கும் மேல ஆகுது. இந்தப் போக்கிலித் தனமான மனிசனோட என்ன கதைக்க இருக்குது!

நாதனத்தான் எங்கட பெரிய மாமாவின்ர மூத்த மகன். நிறைய காணி பூமிகளுக்கு சொந்தக்காரர். அனேகமாக எங்கட காணிகளும் அவற்ர காணிகளும் பக்கத்துப் பக்கத்து காணிகளாயிருக்கும். எங்கட தங்கச்சிக்குக் கொடுத்த வீடு வளவுக்குப் பக்கத்துக் காணி அத்தானுடையது தான். அதை அத்தான் விற்கத் தீர்மானித்திருந்தார். எனது தங்கையின் கணவர் அதனை வாங்க நினைத்து என்னிடம் உதவிக்கு வந்தார்.

"டேய் மூத்தவா, உங்களுக்கு விக்கிறது எனக்கும் சந்தோசம்தான். நீ காசை ஆயித்தப்படுத்தச் சொல்லு எழுதியிடலாம்." என்றார் அத்தான்.

நாங்கள் காசை ஆயத்தப்படுத்திவிட்டு அவரை அணுகியபோது, தலையைக் குனிந்தபடியிருந்தார். அவரது சம்பந்த பகுதிக்கு அந்தக் காணியை விற்றுவிட்டது எமக்கு அப்போதுதான் தெரிய வந்தது.

நான் நிலத்தில் காறித் துப்பிவிட்டு,

"நீயும் ஒரு மனிசனே? இனி உன்ர வீட்டுப் பக்கம்கூட தலை வைச்சும் படுக்கமாட்டா டோம்" என்று சொல்லிவிட்டு வந்ததுதான். இதுவரை அவருடைய முகத்தைப் பார்க்கக்கூட நான் விரும்பியதில்லை.

அதற்குப் பிறகு இந்த ஒரு வருடத்தில் என்னென்னெல்லாமோ நடந்துவிட்டது. எங்கள் ஊரையே பாதுகாப்பு வலயமாக இராணுவம் கைப்பற்றிக் கொள்ள, காணிக்காரரான நாமெல்லாம் ஒன்றுமில்லாதவர்களாக இன்று உறவினர்களின் இரவல் கோடியில் ஒட்டிக் கொண்டிருக்கிறோம்.

ஏன்தான் இந்தாளைப் பார்த்தோமோ என்று மனம் சொல்லிக் கொண்டாலும். என்னைப் பார்த்த கணத்தில் அவரின் முகத்தில் தெரிந்த அந்தப் பிரகாசம் மீண்டும் மீண்டும் என் கண்முன் வந்து என்னை என்னவோ செய்தது. அவரின் அந்தச் சந்தோசத்தை எரித்துவிட்டு வந்தது சரியா? நான் இந்தளவுக்குக் கல் நெஞ்சக்காரனா?

உண்மையில் அத்தானுக்கு நானென்றால் சரியான விருப்பம். நான் சின்னப் பெடியனாக இருந்தபோது தன்னுடைய சைக்கிளில் ஏற்றி எங்கெல்லாமோ சுற்றி வருவார். படத்துக்குக் கூட்டிக்கொண்டு போவார். எனக்குச் சைக்கிள் பழக்கி விட்டதும் அவர்தான். அத்தானின் வீட்டுக்குப் போனால் சாப்பிடாமல் அங்கிருந்து வரமுடியாது. அத்தானின் பிள்ளைகள் கூட "மாமா மாமா" என்று என்னோடு நல்ல பாசம்.

எவ்வளவோ நல்லது செய்த மனிதர் ஒரு தவறு செய்துவிட்டால் அத்தனையையும் மறந்துவிட்டு அந்த ஒன்றைத்தான் பெரிதாகத் தூக்கிப் பிடிக்கிறோம். அந்தக் காணியை விற்கும்போது அவருக்கு எத்தகைய சூழ்நிலையோ! எதுவானாலும் என்னிடம் ஒரு வார்த்தை சொல்லியிருந்திருக்கலாம் சரி, இப்ப அவர் அது தராமல் விட்டது நல்லதாத்தானே போச்சு. என்னதான் கோபமென்றாலும் ஒரு மனிதர் துன்பத்திலிருக்கும் போது அதை நாம் காட்டக்கூடாது. சரி, போகும்போது அத்தானையும் பார்த்துவிட்டுப் போவோம். இந்த முடிவுக்கு வந்தபோது மனம் இலகுவாகிப் பஞ்சுபோலானது.

சுகமில்லாத எனது நண்பனுக்குக் கொடுப்பதற்காக 5-6 தோடம்பழங்களும், இரண்டு பக்கற் உப்பு பிஸ்கட்டும், ஒரு வீவா போத்தலும் கொண்டு போயிருந்தேன். அதில் வீவாவை மட்டும் நண்பனுக்குக் கொடுத்து விட்டு, மற்றதை அத்தானுக்காக எடுத்துக் கொண்டேன்.

அத்தானை விரைவாகப் பார்த்துவிட வேண்டும். அதே பிரகாசத்தை அவர் முகத்தில் திரும்பக் கொண்டுவந்துவிட வேண்டுமென்று மனம் அங்கலாய்த்தது.

நண்பனுடன் அதிக நேரம் செலவிடாது விடைபெற்று அத்தானின் வார்ட்டுக்குப் போனேன். அங்கே துருவித் துருவித் தேடியும் அத்தானைக் காணவில்லை.

அங்குள்ளவர்களிடம் விசாரித்ததில் அவருடைய கட்டில் இலக்கம் 15 என்றும், இப்பதான் திடீரென்று கடுமைப்படுத்தி அவரை உள்ளே கொண்டுபோயிருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள்.

'கடவுளே என்ன இது! ஒரு பத்து நிமிசத்துக்கு முதல் இதால நான் போகேக்க சிரிச்சுக் கொண்டிருந்த மனிசனுக்கு இப்படியுமாகுமோ! இறைவா அவருக்கு ஒரு கெடுதலுமில்லாமல் காப்பாற்று என்று மனதுக்குள் வேண்டிக் கொண்டேன்.'

சிறிது நேரத்துக்குப் பின் தாதியொருவர், "இஞ்ச நாதன்ர சொந்தக்காரர் ஆரும் நிக்கிறியளோ?"

"ஓம் ஓம்" நான் விழுந்தடித்து முன்னால் போனேன்.

"ஓம் நான் அவற்ர சொந்தக்காரன். என்ன உதவி வேணும் சொல்லுங்கோ"

தாதி ஒருகணம் மௌனமாயிருந்தார். பின்னர், "சொரி" அவர் இறந்திட்டார்.

"ஐயோ.....என்ன இது! இப்ப கொஞ்ச நேரத்துக்கு முதல் நல்லா இருந்த மனிசன்! அத்தான்...ஐயோ அத்தான்..."பொது இடம் என்பதையும் மறந்து பெருஞ் சத்தம்போட்டு அழுதேன். என்னால் தாங்கமுடியவில்லை. என்ன சொல்லியும் என் மனதை ஆற்ற முடியவில்லை.

சிறிது நேரத்துக்கு முன்னர் அவரைப் பாத்தபோது தன்னைத்தான் நான் பார்க்க வந்திருக்கிறேன் என்று நினைத்து அவர் முகம் பிரகாசமான போது இரண்டு வார்த்தை அவருடன் ஆறுதலாகக் கதைத்திருந்தால் எனக்கிப் போது இத்தனை வலி இருந்திருக்காது.

மனிதனே சமாதானம் செய்ய ஒரு கணத்தையும் வீணடிக்காதே!

*(யாவும் கற்பனை)*

# மனங்கள் மாறட்டும்

**"ஓர்** காட்டுப் பாதையால் ஓர் மனிதன் நடந்து சென்று கொண்டிருந்தான். திடீரென அப்பாதையில் சிங்கம் எதிர்ப்பட்டது சிங்கத்திடமிருந்து உயிரைக் காக்க அம் மனிதன் ஓடிச் சென்று மரத்திலே ஏறிகொண்டான். மரத்தில் ஏறிய மனிதனுக்கு ஒரே அதிர்ச்சி. மரத்திலே ஓர் கரடி. கரடியிடமிருந்து தப்பித்து வீட்டுக்கு ஓடிப் போன போது வீட்டிலே தன் அண்ணனால் அடித்துக் கொலை செய்யப்பட்டான். இக் குட்டிக் கதையை உச்சரித்துக் கொண்டு பாலசுந்தரத்தின் கடைக்குட்டி ஜீம் வீடெல்லாம் சுற்றி ஓடிக் கொண்டேயிருந்தான். அன்றைய புதினப் பத்திரிகையோடு போராடிக் கொண்டிருந்த பாலசுந்தரத்திற்கு இக் கதை ஓர் திகைப்பை ஏற்படுத்தியது.

"என்னடா மகன் நல்லதொரு கதை சொல்கிறாய். யார் சொல்லித் தந்தது?" என்று பாலசுந்தரம் கேட்க, "ரீச்சரப்பா" என்று சொல்லிவிட்டு பாலசுந்தரத்தின் பதிலை எதிர்பார்க்காது மகனின் கதை தொடர்கிறது. "பாவமப்பா அந்த மனிதன். காட்டு விலங்குகளிலிருந்து உயிரைப் பாதுகாக்க எவ்வளவோ போராடிக் வீட்டுக்குப் போனபோது வீட்டிலே அண்ணன் அடித்துச் சாகவைத்துப் போட்டார்" என்ற ஜீம், முகத்திலே கவலை நிரம்பியவனாக, "அப்பா இந்தக் காலத்தில் காட்டு விலங்குகளைவிட நாட்டுக்குள் உள்ள மனிதர்களுக்குத்தான் நாங்கள் பயப்பட வேண்டும்; எமது உயிரைப் பாதுகாக்க வேண்டும்" எனக் கூறிவிட்டு அந்தப் பிஞ்சு உள்ளம் தனது வழக்கமான பாணியிலே சுற்றி ஓடி விளையாடி கொண்டிருந்தது.



க.நிசாந்தன் ஸ்ரீபன், பிலிமத்தலாவ.

தனது மகனின் குட்டிக் கதையையும் கேள்வியையும் கேட்ட பாலசுந்தரத்தின் இதயத்தில் யாரோ சம்மட்டியால் அடிப்பது போலிருந்தது. வாயிருந்தும் பேசமுடியாத ஊமையை போல விடையின்றி தத்தளித்துக் கொண்டிருந்த பாலசுந்தரத்தின் அடிமனது பல்வேறு கேள்விகளை எழுப்பிக்கொண்டிருந்தது. மனிதன் மனிதனுக்கு உலைவைக்கும் காலமிது. தெருவோர நாய்களைப் போல விரும்பியவாறு சுட்டுக்கொல்லும் காலமிது. மனித உயிர்களுக்கு மதிப்பற்று மாண்பற்றுப் போன சூழ்நிலையில் இப் பிஞ்சுவின் கேள்விக்கு யார் விடை கூறுவது? நமது சமூகம்தான் இதற்கான விடையைக் கூறவேண்டும் என்று நினைத்துக் கொள்கிறார். விடுதலைப் போராட்டத்தில் தங்களது விடிவை இழந்தவர்கள் எத்தனை பேர்? இனவாத வெறியில் வாழ்விழந்தவர்கள் எத்தனை பேர்? மதவாத சிந்தனையில் சுட்டெரிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்? என்று கேள்விக்கு மேல் கேள்விகளை எழுப்பி கொண்டேயிருந்தது மனம். இக் கேள்விகளுக்கு விடை கூறுவது போல எதற்கெடுத்தாலும் வன்முறைகள் மூலம் முடிவு காண ஏன் மனிதர்கள் முயற்சி செய்கிறார்கள்? சமரசப் பேச்சுக்கும் விட்டுக்கொடுப்புக்கும் இடமில்லை ஏன்? இவற்றைக் கடைப்பிடித்தால் என்ன என்று யாரோ சொல்வது போலிருந்தது.

பாலசுந்தரம் தனது மகனைக் கூப்பிட்டு, "மகனே நீ வளர்ந்து யாரையும் வன்முறை மூலம் கொலை செய்யக்கூடாது. இரத்தம் சிந்துதலை வெறுக்க வேண்டும். பிரச்சினைகளுக்கு விட்டுக்கொடுப்புடன் - புரிந்துணர்வுடன் தீர்வு காண வேண்டும்" என்று தொடர, அதற்கிடையில் குறுக்கிட்ட மகன் "ஆமாம் அப்பா, எங்கட ரீச்சர் சொல்லித் தந்தா. இனம், மதம், மொழி வேறுபாடு காட்டாமல் எல்லோரையும் சகோதரர்களாக ஏற்றுக்கொண்டு அன்பு, இரக்கம் ஆகிய பண்புள்ளவர்களாக வாழவேண்டுமென்று; பிறரை குற்றப்படுத்தாமல் புரிந்துணர்வுடன் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று என்றான்.

இதைக் கேட்ட பாலசுந்தரம் ஆனந்தக் கண்ணீரோடு தனது மனைவி பத்மாவைப் பார்த்து எனது மகனின் ஆசிரியர் நல்லதொரு விதையை விதைத்திருக்கிறார். இது நிச்சயம் பலன்கொடுக்கும். இவ்வாறான ஆசிரியர்கள் எமது நாட்டிற்குத் தேவையானவர்கள். இவ்வாறான மாணவர்கள் எமது சமூகத்துக்குத் தேவையானவர்கள் என்று நினைத்துவிட்டு

எமது நாட்டின் அழிவுக்குரிய ஆயுதங்கள், வாழ்வுக்குரிய காப்புக்களாக மாற வேண்டும். இதற்கான அடித்தளத்தை இடுபவர்கள் ஆசிரிய சமூகமே; இவ்வாறான சமூகம் உருவாக அனைத்து மனங்களும் மாற வேண்டும் என எண்ணியவாறு குடும்பத்தோடு மதிய உணவுக்கான பந்தியில் அமர்ந்தார்.

*(யாவும் கற்பனை)*

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

# சிந்தித்துப் பார்க்க...

## ஆளுமையை விருத்தி செய்வோமாக!

மக்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட இடங்களையும் தங்களின் சொந்த உடைமைகளையும் பராமரிக்கத் தவறும்பொழுது அது உங்களின் சொந்த உடைமைகள் மீதும் தெறிக்க ஆரம்பித்துவிடும்.

மக்கள் தங்களுக்குச் சொந்தமான உடைமைகள் மற்றும் இடங்கள் ஆகியவற்றை பராமரிக்கும் திறன் இல்லாத நிலை ஏற்பட்டால், அது அவர்கள் மனதிற்குள் உள்ள எண்ணங்கள் தாம் அவை. அவர்கள் சிறுவயதாக இருக்கும்போது இம்மாதிரியான பொருட்கள் கொடுக்கப்பட்ட போதே கூடவே ஏராளமான எச்சரிக்கைகளையும் சேர்க்கப்பட்டிருக்கும். அல்லது அவற்றை அக்குழந்தையின் பெற்றோரோ அல்லது சகோதர சகோதரிகளோ எடுத்துக் கொண்டிருப்பர், எனவே, அக்குழந்தைகள் அம்மாதிரியான செயல்களை வரவேற்க மாட்டார்கள்.

- 'மகிழ்ச்சி' எனும் நூலிலிருந்து.

# அவனை தன்னுள் நுழையவிட்ட கண்கள் கண்ணீரால் கன்னத்தைச் சுட்டது



**தருவது முழுடில்யன்**

இழுத்துக் கட்டப்பட்ட ரப்பர் துண்டை நடுவே விரலால் பிடித்திழுப்பது போன்ற ஓர் அந்தரங்கம் மனம் முழுவதும் நிரம்பியிருந்ததை உணர்ந்தாள் சாரங்கா. எண்ணி எண்ணி இம்சைக்குள்ளாகித் துடிக்கிற ஓர் அனுபவம் அவ்வளவு மகிழ்ச்சியாகவும் இருக்குமென்பதை வாழ்வில் முதல் முறையாக அறிந்தாள். துயரம் கலந்த ஒரு ஏக்கம் சொல்லொணா இனிமையுடன் உடம்பெங்கும் பரவியிருந்தது. அடுத்த நாளைப் பற்றிய எந்த நினைவும் அவள் இதுவரை படுக்கைக்குப் போகுமுன் மனதில் வந்ததில்லை. ஒரு நாள் இரவு கூட எண்ணியெண்ணி வதைபடும் அல்லது மகிழும் ஒரு நினைவுடன் படுத்ததில்லை.

இன்றுமட்டும், நாளை எப்போது வரும் என்ற ஒரு கேள்வி அவள் மனதில் வீங்கிப் பெருத்திருந்தது. உடல் உறுப்புகள் இல்லாமலாகி மனசு மட்டும் உடம்பு முழுவதும் நிறைந்து இயங்குவதாகப் பட்டது.

சாரங்கா எழுந்து சென்று கண்ணாடியில் தன்னைப் பார்த்தாள். பின்னால் தூணோரமாக எவரோ நிற்பது போலிருக்க, திடுக்கிட்டுத் திரும்பினாள். யாருமில்லை. தனது அந்தரங்கத்தில் ஓடும் இந்தப் புதிய எண்ணங்களை யாரோ ஒளித்திருந்து பார்க்கிறார்கள் என்ற உணர்வு அவளை நடுக்கமுற வைத்தது. பதற்றமுடன் மீண்டும் கண்ணாடிக்குத் திரும்பினாள். திரும்பிய கோணத்தில் தன் அகன்ற விழிகளைப் பார்த்தாள். இப்படித்தான் அவன் தன்னைப் பார்த்தான் என்ற எண்ணம் ஓடி, அவள் மனதைப் பொங்கி அடைக்க வைத்தது.

அவன் கண்களில் தெரிந்தது என்ன? எதையோ இறைஞ்சுபவன் போலல்லவா அந்தப் பார்வையை சில நிமிடங்கள் அசைக்காமல் வைத்திருந்தான்.

தனது முகம் அவனுக்கு எப்படித் தோன்றியிருக்கும். ஆடியில் தெரிந்த பிம்பம் அவளை மலர வைத்தது. அவள் கண்களை, உதடுகளை, கழுத்தை, தோள்களை, கைகளின் மெல்லிய மயிர்ப்பரப்பை, விரல்களை... என்று ஏதோ காணாததைக் கண்டது போலல்லவா மேய்ந்து கொண்டிருந்தான். அவள் ஓரக்கண் பார்வையைச் சந்தித்த போதெல்லாம் அவன் கண்கள் பதறி விலகுவதையும் அவள் கண்டாள். முன்பின் பழக்கமில்லாத ஒரு பெண்ணை இப்படியா பாம்புப் பார்வை பார்ப்பார்கள்? இப்போது அவளுள் வெட்கமும் கோபமும் கிளைத்தது.

ஆனால், அவன் பார்த்தபோது, தன்னையறியாமலே உடையைச் சரிசெய்வதிலும் கூந்தலை ஒதுக்குவதிலும் தான் காட்டிய தேவையற்ற நளினத்தை நினைத்தாள். 'ச்சீ நானும் ஒரு வெட்கம் கெட்டவள்' என்று திட்டிக் கொண்டாள். வீடு திரும்பும் வரை அவன் தன்னைப் பின்தொடர்ந்து வருகிறான் என்ற போதை எண்ணத்திலேயே திரும்பிப் பார்க்காமல் தான் வந்து கொண்டிருந்ததையும் நினைத்தாள். வீட்டுக்குள் நுழைந்ததும் ஓடிச் சென்று ஜன்னல் வழியாகத் தெருவைப் பார்த்தாள். தூரத்தில் மறைந்த உருவம் அவனுடையதாகத்தான் இருக்கும் என்று எண்ணியதில் அவளுக்கு இதுவரையில்லாத கிளர்ச்சி ஏற்பட்டது. படபடக்கும் நெஞ்சை அழுத்திப் பிடித்து நிறுத்த முடியவில்லை.

இரவெல்லாம் புரண்டு புரண்டு படுத்தாள். அவனைத் திரும்பவும் சந்திப்பது பற்றிய திட்டங்கள் எத்தனை எத்தனையோ வகையாக மனதில் ஓடியது.

அவன் என்ன பேசுவான்... பதிலுக்குத் தான் உரைக்க வேண்டிய சொற்கள் பற்றி... பேச முடியவில்லை என்றால் முதல்நாள் போல பயந்து பார்வையை அவனுக்குத் தந்து மிரட்டி விடாமல், அவனுக்குப் புரியவைப்பது மாதிரி - மகிழ்வளிப்பது மாதிரி எப்படிப் பார்ப்பது... கண்டவுடன் பதறி ஓடித் திரும்பிவிடாமல் இந்தக் கால்களுக்கு வலு கொடுப்பது எப்படி... என்று திரும்பத் திரும்பத் திட்டங்கள் வரைந்தாள். அந்தத் திட்டங்களைப் பற்றி மீண்டும் மீண்டும் யோசிப்பதன் மூலமே முழு இன்பத்தையும் அனுபவிப்பவள் போல் போதையில் ஆழ்ந்து கிடந்தாள்.

கண்களைச் சற்று நேரம் மூடியபடி கிடந்தால் தூக்கம் வந்துவிடும் என்று முயற்சி செய்தாள். இமைகள் பாரமாய் அழுத்துவதையே விழிகள் உணர்ந்தபடி இருந்தன. அவனைத் தன்னுள்ளே நுழைய விட்ட கண்களைச் சிறிது நேரம் சபித்தாள். அவஸ்தைக்குக் காரணம் இந்தக் கண்கள் தானே! இந்தப் புது நோயை உருவாக்கி விட்டவை கண்கள்தான். உள்ளே புகுந்த நோய் இப்போது நெஞ்சினுள் நெருப்பாய்ச் சுட்டபடி...

'கடவுளே, அவனைப் பார்க்கக் கூடாது' என்று படுக்கையில் முகத்தைப் புதைத்து அழுத்தியபடி ஒரு கணம் நினைத்தாள். மறுகணமே அவனைப் பார்க்காமலிருப்பதை நினைத்தாலே அச்சமும் வெறுமையுமாய் மனம் இருளாகி அடைப்பதை உணர்ந்தாள். கட்டுப்படுத்த முடியாத ஓர் ஊசலில் அவளது ஆட்டம் முடிவுறாதிருந்தது. மார்பை உலுக்கியபடி அழுகை வந்தது. தலையணையில் கசிந்த கண்ணீர் கன்னத்தைச் சுட்டது. குப்பையைக் கிளறுவது போல வலிக்க வலிக்க நகங்களால் இதயத்தைப் பிராண்டும் இந்த வலியை நிறுத்துவது எப்படி? வெளியே யாருக்கும் தெரியாத இந்த இரத்தப் பீறிடலையும் வலியையும் நிறுத்த யார் உதவுவார்கள்? அவன் திரும்பவும் என்னைப் பார்க்க வருவானா என்றும் தெரியவில்லை. நான் போய் பார்ப்பது எப்படி என்றும் புரியவில்லை. கூரிய முட்களுக்குள் வைத்து இதயத்தை அழுத்திப் பிசையும் இந்த ஊமை வலியை நான் எப்படிப் போக்குவேன்?

குப்பையைக் கிளறும் கோழிகள் விலக்கி விட யாருமில்லாமல், ஒன்றையொன்று கொத்திக் கொண்டைகள் கிழிந்து இரத்தம் வழியச் சண்டையிடுவது போலல்லவா என் வேதனையும் விலக்குவோரின்றித் தொடர்கிறது. அந்தக் கோழிகள் விலக்கவும் ஆட்களின்றி, தம்மிடையே சமாதானமும் உறாமல் ஒன்றையொன்று கொத்திக் கொத்தியே மடியும்.

என் நோய்க்கும் அதுதான் கதி. விலக்குவாரும் இல்லை. ஆறுதல் கூறி நிறுத்துவாரும் இல்லை. களைப்புற்று இந்த வேதனை ஓய்வதாயுமில்லை. இந்த வேதனையால் நான் மடிவதைத் தவிர வேறு வழியில்லைப் போலிருக்கிறதே!

கண்ணீர் வழியப் படுக்கையில் புரண்டாள் சாரங்கா.

*கண்தர வந்த காம ஒள்ளெரி*
*என்புஉற நலியினும் அவரொடு*
*பேணிச் சென்று நாம் முயங்கற்கு*
*அரும் காட்சியமே; வந்து அரூர்*
*களைதலை அவர் ஆற்றலரே*
*உய்த்தனர் விடாஅர், பிரிந்து இடை*
*களையார்; குப்பைக் கோழித் தனிப்*
*போர் போல; விளிவாங்கு விளியின்*
*அல்லது; களைவோர் இலை*
*யான் உற்ற நோயே*

*(குறுந்தொகை :305)*

# சிந்தியா பதில்கள்

**நமக்குத் தலையில் குட்டிக் குட்டிப் படிப்பித்த ஆசிரியர்களை இப்போது நினைத் தால் வியப்பாக இல்லையா? குட்டியவர்கள், குட்டு வாங்கியவர்களை விட அறிவுத் தரத்தில் குறைந்தே இருப்பது உறுத்துவதில்லையா?**

-எம்.எஸ்.எம்.முஸம்மில், குருநாகல்.

இல்லை. படிகளின் இருப்பே, படிகளைத் தாண்டிச் செல்ல உதவுவதற்காகத்தான் என்பதும் புரிந்துவிட்டதால் எந்த வியப்பும் இல்லை.

**சிம்ரனுக்குப் பிறகு அந்த 'இடைப் பிரதேசம்' என்னவாயிற்று?**

-எம்.எ.்.ப்.ஹில்மி, தெகிவளை.

சதாவின் ஆக்கிரமிப்பு கொஞ்சம் நடந்திருக்கிறது.

**ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தில் பிரதான பிரச்சினையாக மிளிரப் போவது எது?**

-ச.நிரஞ்சஜலா, மஹியாவ.

எந்தப் பிசாசின் கையைப் பிடித்துக் கொண்டாவது கதிரையில் பாய்ந்து ஏறிவிட வேண்டும் என்று அல்லாடுகிறார் ஒருவர். அவர் நம்பியிருப்பவர்களே அவரது காலை வாரிவிட மாட்டார்களா என்று நாக்கைச் சப்புக்கொட்டிய படி கதிரையை நோக்கி ஏக்கப் பார்வையுடன் பாய்ந்துகொண்டிருக்கிறார் மற்றவர். ஹ்ம்ம்... சமாதானமாவது... விலைவாசியாவது...!

**விவேக்கின் 'சொல்லி அடிப்பேன்' முடங்கிவிட்டதா, அவ்வளவுதானா?**

-ப்ரியநேசி, களுத்துறை தெற்கு.

அதை விட்டுவிட்டு, அவர் சொல்லி ஜெயிக்க வேண்டியது, மீண்டும் சுழன்று எழுந்திருக்கும் வைகைப் புயலை!

**தனிநாடு சாத்தியமில்லை என்று நம்புகிறவர்கள் கூட, ஏன் நிரந்தரத் தீர்வுக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஏதும் கருத்துச் சொல்ல முயற்சிப் பதில்லை?**

-கண.மகேசன், கொழும்பு - 13.

பதில் எல்லோருக்கும் தெரிந்ததுதான். ஆகவே, அதன் ஆன்மாவைத் தொட்டுக் காட்டும் நாடகப் பகுதி ஒன்றைத் தருகிறேன். எஸ்.வி.ராஜதுரை தனது கட்டுரை ஒன்றில் மொழிபெயர்த்துத் தந்திருக்கும் பண்டைய கிரேக்க நாடகத்தின் ஒரு சிறு உரையாடற் பகுதி:

"எதிரிகளாகவே இருக்க வேண்டுமா? உங்களுக்கு நாங்கள் நண்பர்களாக இருக்கலாம் என்பதை நீங்கள் ஒத்துக் கொள்ளவில்லையா?"

"இல்லை. எங்களுக்கு ஊறுவிளைப்பது நீங்கள் காட்டும் பகைமை அல்ல. மாறாக, நாங்கள் உங்களுடன் நட்புடன் இருந்தால், எங்கள் குடிமக்கள் அது எங்கள் பலகீனம் என்று கருதுவார்கள். மாறாக, நீங்கள் எங்கள் மீது காட்டும் வெறுப்பு, எங்களது வல்லமைக்கான சான்றாக இருக்கும்."

**உண்மையான நட்பு எப்படி இருக்க வேண்டும்?**

-ஏ.எம்.ஐ.எ.்.ப். ஜெரோஸா, புதிய காத்தான்குடி - 06.

நான் இது செய்தால், அவர் அது செய்வார் என்று எதிர்பார்க்காததாக.

**தமிழ் மக்களில் பெரும்பான்மையினர் ஒரு பக்கம் நிற்கும் போது, அதை ஏற்றுக்கொள்வதுதானே ஜனநாயகத்தை மதிப்பவர்களது கடமை?**

-ஆர்.முருகநேசன், யாழ்ப்பாணம்.

சிறுபான்மையினர் தமது நம்பிக்கைகளையும், கொள்கைகளையும், அரசியல் பார்வைகளையும் அழித்துக் கொண்டு பெரும்பான்மை எழுச்சிக்குள் அடக்கமாகி விட வேண்டும். (இல்லையேல் கொல்லப்படுவது தவிர்க்க முடியாதது) எனச் சொல்வது ஜனநாயகமல்ல. அதன் பெயர் பெரும்பான்மைவாதம் (Majoritarianism ). இது பாசிஸத்திற்கு அடிப்படையானது.

ஏகப்பிரதிநிதித்துவ இறைவழிபாட்டுடன் விடுதலை முக்தியடைய விரும்பாதவர்கள் தமது உரிமைகளை தக்க வைத்துக் கொள்வதற்கும், கொள்கைகளையும் நம்பிக்கைகளையும் பிரசாரம் செய்வதற்குமான சூழல் நிலைநிறுத்தப்படுவதே ஜனநாயகம்.

**சமீபத்திய ஆச்சரியம்?**

-க.கமால்தீன், ஏறாவூர் - 03.

'ஒரு நாள் ஒரு கனவு'. இவ்வளவு ஓட்டைகளுடன் ஏனோ தானோவென்று ஒரு படத்தை வெளியிட .்.பாசிலுக்குமா துணிச்சல் இருக்கிறது!

**பல சம்பியன் பட்டங்களை வென்ற அந்ரே அகாஸி இன்றும் விளையாடித் தோற்றுக் கொண்டிருப்பது பற்றி....?**

-வே.கமலநாயகி, கொழும்பு - -05.

கடைசியாக ஒரு பட்டம் வென்றுவிட்டு விடைபெற்றுக் கொள்ளலாமே என்று அவர் கருதக்கூடும். ஆனால், அவரது மனைவியைப் பின்பற்றி, இளமை முச்சுக்கு வாழ்த்துச் சொல்லி அந்தக் கவர்ச்சி வீரரும் ஒதுங்கி விடலாம் என்பது என் நினைப்பு.



சதா

**போராடுபவர்களை எதிர்ப்பது சரியா? அப்படியானால் நமக்கு சுதந்திரம் வேண்டாமா?**

-வி.மங்களாம்பிகை, வவுனியா.

நம்முடைய துரதிர்ஷ்டத்தைப் பாருங்கள். நமக்காகப் போராடுபவர்கள் எப்படியான சுதந்திரங்களைத் தங்களிடத்தில் வைத்திருக்கிறார்கள். கொலை செய்வதற்கான சுதந்திரம், அழித்தொழிப்பதற்கான சுதந்திரம், அடிமை கொள்வதற்கான சுதந்திரம், அச்சத்தில் வைத்திருப்பதற்கான சுதந்திரம், கப்பம் வாங்குவதற்கான சுதந்திரம், இனத்தின் துரோகிகள் யார் என்பதைத் தீர்மானிப்பதற்கான சுதந்திரம், அவர்களைத் துடைத்தழித்து இனத்தைச் சுத்திகரிப்பதற்கான சுதந்திரம், எந்நேரமும் போரைத் தொடங்குவதற்கான சுதந்திரம்.... மக்களுக்காகக் கொல்லும் உரிமையையும் சுதந்திரத்தையும் ஒரு குழுவிடம் கொடுத்துவிட்டு, நாம் சுதந்திரக் கனவில் இருந்தால் எப்படி?

**இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் எழுச்சி எதைக் காட்டுகிறது?**

-ஏ.எஸ்.ஹெரோல் நில்சன், பொகவந்தலாவ.

2007 சுவாரஸ்யமாக இருக்கப் போகிறது என்பதை!

**ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்க் கூட்டமைப்பு என்ன செய்யப் போகிறதென்று தெரியவில்லையே?**

-கே.தனபால், மட்டக்களப்பு.

என்ன இழவைப் பேசித் தொலைப்பது என்று தெரியாத எரிச்சலில் அவர்கள் தங்கள் தங்கள் காரியங்களைக் கவனித்துக் கொண்டிருக்க, கடைசி நேரத்தில் தமிழ் வாக்குகள் என்னவாக வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் 'திறில்' தான் தமிழ்த் தேசிய வல்லமையும், தமிழர்களின் ஏக பக்தி இனப் பரவசமும் சங்கமிக்கும் அற்புதம்! காணத் தவறாதீர்கள்!

**தன்னடக்கத்திற்கு விளக்கம் தர முடியுமா?**

-மனோ கோபாலன், ஹப்புத்தளை.

சாதத் ஹசன் மண்டோவின் சொற்சித்திரம் ஒன்றைத் தருகிறேன். அதன் தலைப்பு 'தன்னடக்கம்' என்பதுதான்!

ஓடிக்கொண்டிருந்த ரயிலைக் கட்டாயப் படுத்தி நிறுத்தினார்கள். நிறுத்தியவர்கள் "அந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் எல்லோரையும் திட்டமிட்ட முறையில் பொறுக்கி எடுத்து வாளாலும், துப்பாக்கியாலும் படுகொலை செய்தார்கள். மற்றப் பயணிகள் எல்லோருக்கும் பாலும், அல்வாவும், பழங்களும் வழங்கினார்கள்.

ரயில் வண்டி புறப்படுவதற்கு முன், இந்த விருந்தோம்பலுக்கு ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தின் தலைவன், பிரயாணிகள் முன் ஒரு சொற்பொழிவை நிகழ்த்தினான் : "அன்புள்ள சகோதர, சகோதரிகளே, இந்த ரயில் வருவது பற்றிய தகவல் எங்களுக்குத் தாமதமாகத்தான் கிடைத்தது. அதனால்தான் உங்களை இன்னும் சிறப்பாக உபசரிக்க முடியாமல் போனது."

**நம்மவர்களிடம் நல்ல சினிமா ரசனையை வளர்க்க என்ன செய்யலாம் என்பதைக் கொஞ்சம் சொல்லுங்களேன்?**

-ஏ.ஏ.எம்.இர்.்.பான், கொழும்பு - 12.


கொஞ்சம் செலவு கூடிய யோசனைதான். இருந்தாலும் முயன்றால் முடியாததில்லை என்ற நம்பிக்கையில் சொல்கிறேன். இப்போது தமிழ்நாட்டில் வியாபாரிகள் ஏதேதோ ஆங்கிலப் படங்களை எல்லாம் தமிழில் 'டப்பிங்' கொடுத்து வெளியிடுகிறார்களல்லவா. அதுபோல, உலகத் தரமான இயக்குனர்களின் நல்ல சினிமாக்களை சர்வதேச ரீதியாகத் தேர்ந்தெடுத்து அவற்றைத் தமிழில் 'டப்' செய்து வெளியிட வேண்டும். எனக்குத் தெரிந்தவரையில் 'நல்ல சினிமா' பற்றிய கதையே ஆங்கிலம் தெரிந்தவர்கள் மத்தியில்தான் நிலவுகிறது. அவர்களுக்குப் பிடித்துக் கொள்ள உபதலைப்புகளாவது (Sub - Title) கிடைத்து விடுகிறது.

# இங்கிலாந்து அணியின் கனவு நனவாகியது



இங்கிலாந்து அணி மற்றும் அவுஸ்திரேலிய அணி ஆகிவை மற்றும் பங்கு பற்றும் ஆஷஸ் கிண்ண போட்டித் தொடர்கள் அண்மையில் நடைபெற்று முடிந்தன. இதில் பல அதிசயிக்கத்தக்க நிகழ்வுகள் நடந்து முடிந்தன. குறிப்பாக சொல்லப்போனால் ஆஷஸ் தொடரை 18 வருடங்களாக தன் வசம் வைத்திருந்த அவுஸ்திரேலியா அணி கிண்ணத்தை இங்கிலாந்துக்கு தாரை வார்த்து கொடுத்து விட்டு வெறும் கையுடன் நாடு திரும்புகிறது. இதனை அவுஸ்திரேலிய கிரிக்கெட் இரசிகர்கள் சிறிதும் எதிர் பார்த்திருக்க மாட்டார்கள்.

இப்போட்டிகளில் அதிகம் திறமைகளைக் காட்டிய இங்கிலாந்து அணியின் அன்று பிளிங்டொப் மற்றும் அவுஸ்திரேலிய அணியின் வோர்ன் ஆகியோர் தங்கள் பங்கிற்கு சாதனையைக் குவித்தவண்ணமே இருக்கிறார்கள்.



இங்கிலாந்கு அணியின் அடுத்த இயன் பொத்தம் எனும் பெருமையை பெற்ற பிளிங்டொப் இங்கிலாந்தின் வெற்றிக்கு காரணமானவர் என்பது அனைத்து இரசிகர்களின் கருத்தாகும்.இங்கிலாந்து வந்திருந்த அவுஸ்திரேலிய அணி 5 டெஸ்ட் தொடர்களை கொண்ட போட்டியில் பங்குபற்றியது. இதில் இங்கிலாந்து 2-1 என்ற ரீதியில் முன்னிலை வகித்தது. லண்டன் ஓவல் மைதானத்தில் 5ஆவதும் இறுதியுமான போட்டிகள் ஆரம்பமாகின. இதில் தொடர்ந்து 8 முறை ஆஷஸ் கிண்ணத்தை வென்ற அவுஸ்திரேலிய அணி இப்போட்டியிலும் வென்றாகவேண்டும் என்ற கட்டாயத்தில் இருந்தது. முதல் இன்னிங்ஸில், இங்கிலாந்து அணி 373 ஓட்டங்களை குவித்தது.ஆட்டத்தில் மூன்றாவது நாளில் 2 விக்கெட் இழப்பிற்கு 277 ஓட்டங்களை அவுஸ்திரேலியா பெற்றிருந்தது.

4 ஆம் நாள் ஆட்டத்தில் அபாராமாக களத்திவல் புகுந்த பிளிங்டொப் பந்து வீச்சில் வரிசையாக விக்கெட்டுகளை வீழ்த்தினார். அதிர் மார்டின், ஹைடன், கேடிச், வோர்ன், கினார்க், ஆகியயோர் முக்கிய விக்கெட்டுகளை வீழ்த்தி ஆஷஸ் கனவை இங்கிலாந்து அணிக்கு நனவாக்கினார். பிளிங்டொப் 397 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்த அவுஸ்திரேலிய அணி அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் திணறியது.


6 ஓட்டங்கள் முன்னிலையில் என்று ஆட்டத்தை தொடங்கிய இங்கிலாந்து அணி மிகவும் திறமையாக ஆடி கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. இவ்வெற்றின் மூலம் முழு இங்கிலாந்து மக்களின் ஆதரவையும் இங்கிலாந்து அணி பெற்றுக் கொண்டது.

இப்போட்டிகளின் வெற்றிக்கு பெரும் பங்காற்றிய அன்ரு பிளிங்டொப்புக்கு வாழ்த்துக்கள் வந்து குவிந்த வண்ணமே இருக்கின்றன.

இப்போட்டிகளில் சாதனை வீரர்களாகக் கருதப்படும் இங்கிலாந்து அணியை அன்ரு பிளிங்டொப்பும் அவுஸ்திரேலிய அணியைச் சேர்ந்த வோர்ன்னும் தங்கள் பங்கிற்கு சாதனை செய்யத் தவறவில்லை.

வோர்ன் இத் தொடரில் 35 ஆவது விக்கெட்டைக் கைப்பற்றிக் கொண்டார். இதன் மூலம் இங்கிலாந்து மண்ணில் ஒரு தொடரில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய தனது முந்தைய சாதனையை அதாவது 1993 இல் 34 விக்கெட்டுகளை வீழ்த்திய சாதனையை அவரே முறியடித்துள்ளார்.

இதேவேளை அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய



பெருமையை டெனிஸ் வில்லியத்துடன் சேர்ந்து வோர்ன்னும் பகிர்ந்து கொண்டார்.

இதுவரை வோர்ன் 618 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய அணி இதிலாவது வெல்லுமா?

ஆரம்ப போட்டிகளில் பிரகாசித்து விட்டு இறுதிப் போட்டிகளில் மண் கவ்வுவது இந்திய அணிக்கு ஏதோ பழகி விட்டது போல. அதனால் தான் என்னவோ எல்லா போட்டிகளிலும் கஷ்டப்பட்டு விளையாடி, இறுதிப் போட்டிக்கு தெரிவாகி இறுதிப் போட்டியில் கோட்டை விடுவது இந்திய




இரசிகர்களுக்கு பழகிவிட்ட ஒன்று தான்.

அந்தவகையில் தான் அண்மையில் இடம் பெற்ற நியூசிலாந்துக்கும் இந்தியாவுக்கும் இடையிலான போட்டியிலும் தனது திறமைகளை சரிவர வெளிக் கொண்டுவராமல் தோல்வியைத் தழுக் கொண்டது இந்திய அணி - இது இந்திய அணியின் 38 ஆவது இறுதிப் போட்டியில் தோல்வியாகும். தோல்வியைத் தழுவிக் கொண்டாலும் தொடர்ந்து போட்டிகளில் பங்கு பற்றிக் கொண்டு தான் இருக்கிறார்கள் அந்தப் பட்டியலில் இந்திய அணி மீண்டும் சிம்பாபே அணிக்கு எதிராக டெஸ்ட் போட்டிகளில் விளையாட இறங்கியிருக்கிறது. செப்டம்பர் மாதம் 13ஆம் திகதி ஆரம்பமாகும் இப்போட்டிகள் தொடர்ந்து நடைபெற இருக்கிறது. இப்போட்டிகளில் சலவ்ரவ் கங்குலியே அணியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார் ஆயினும் அவர் சென்ற போட்டியில் காயங்களுக்கு உள்ளாகியிருப்பதால் அவர் போட்டிகளில் பங்குபற்றுவது சந்தேகம் என்று தெரியவருகிறது. ஆயினும் கங்குலி தான் எப்படியாவது போட்டிகளில் பங்குப பற்றுவேன் எனத் தெரிவித்துள்ளார்.

இந்திய அணி அப்போட்டியில் அனில் கும்னே, ஹர்பஜன் சிங் போன்ற சுழல் பந்து வீச்சாளர்களை நம்பியிருக்காமல் வேகப் பந்து வீச்சாளர்களான அஜித் அகர்அகார், ஷகீர்கான், இர்பான் பத்தான், லக்சுமிபதி பாலாஜி ஆகியயேரையும் களத்தில் இறக்கும் என நம்பப்படுகிறது.

போட்டிகளில் பங்கு சிம்பாபே அணியில்:


தைபு (தலைவர்), டுபின், எபிரஹிம், ரெயிலர், மஸ்கடாஸ், கொவேன்ரி, ஹீத் ஸ்ரீக்,பிலிங்னாவூட்னு, டபெங்காவா, உட்செயா, தாவெரிஈ வில்லியம்ஸ், மவாயங்கா ஆகியோரும்

இந்திய அணியில்,

சேவாகக், கம்ரி, ட்ராவிட், கைவ், லஷ்மன், கங்குலி (தலைவர்) கார்த்திக், கும்ளே, ஹர்பஜன்சிங், இர்பான் பத்தான், பாலாஜி, ஷாகீர்கான், அகர்கார், ஆகிகோரும் மோத இருக்கின்றனர். போட்டி முடிவுகள் எவ்வாறு அமையும் என்பதை





பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். இப்போட்டியிலாவது முழுத் திறமையுடன் இந்திய அணி விளையாடினால் தான் சர்வதேச தர வரிசையில் தனக்கிருக்கும் இடத்தையாவது இந்திய அணி காப்பாற்றிக் கொள்ள முடியும் ஐயமில்லை.






உலகில் முதல் தர டென்னீஸ் வீரர்களாகிய அன்று அகாசீ, ரொஷார் பெரடோல் ஆகியோருக்கு ஏற்பட்ட வீபரீதத்தின் விளைவே இது. இது தான் உலகில் அதிக உயரத்தில் உள்ள டென்னீஸ் மைதானம். இதில் தான் இவ்வீருவரும் டென்னீஸ் வீளையாடியுள்ளனர். இவ் மைதானமானது ஒரு 7 நட்சத்திர ஹோட்டலில் மேல் தனத்தில் வீசேடமாக வடிவமைக்கப்பட்டு இருக்கிறது. இவ் ஹோட்டல் டுபாயில் இருக்கும் அல் அராப் நகரத்தில் உள்ளது.ஒரு சந்தேகம் விளையாடுகையில் பந்து கீழே விழுந்து விட்டால் எப்படி எடுப்பது?



# காதல் வலையில் ஷெரபோவா



டெனிஸ் தர வரிசையில் முதலாம் இடத்திற்கு முன்னேறிக் கொண்டிக்கும் ரஷ்ய வீராங்கனை மரியா ஷெரபோவா இப்போது இன்னுமொரு சாதனையை செய்யமுயற்சித்துக் கொண்டிருக்கிறார் அதாவது அவர் இப்போது காதல் வலையில் சிக்கியிருப்பதாக தகவல்கள் கிசுகிசுக்கப்படுகிறது. ஆங்கில ஒபப்பிசைப் பாடல்கடளை விரும்பி ரசிக்கும் மரியா 26 வாதான பொப்பிசைப்பாடகர் ஆடம் லெவின் மீது அளவு கடந்த அன்பு அதுதான் காதல் கொண்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அவருடன் ஜோடி சேர்ந்து மரியா சுற்வதைப் பார்க்க முடிகிறதாம். மின்னஞ்சல் மூலம் நண்பர்களாக அறிமுகமாகவர்கள் இப்போது காதல் கவிதைகள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். காதல் மயக்கத்தில் அம்மணி விளையாட்டில் சறுக்காமல் இருந்தால் சரிதான்.

## பிறப்பெண் - 1, கூட்டெண் - 8

1, 10, 19, 28 போன்ற திகதியில் பிறந்து, திகதி, மாதம், வருடம் ஆகியவற்றைக் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 8 வருமேயானால் சூரியன், சனி போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவர். சனியைப் பற்றிக் கேள்விப்படாத மனிதரே கிடையாது. இதை ஆங்கிலேயர் சேட்டன் என்றும், இஸ்லாமியர் சைத்தான் என்றும் அழைக்கின்றனர்.

சனி ஒரு மனிதனுக்கு நல்லது செய்ய நினைத்தால் நல்லதையே செய்வார். கெட்ட பலனைச் செய்ய நினைத்தால் தலைகீழாகக் கவிழ்த்து விடுவார். இதனால் சனி என்றாலே எல்லோருக்கும் பயம். இந்த எட்டுக்குள் எல்லா எண்களும் அடங்கியுள்ளது என்பதை இயங்காத எலக்ட்ரானிக் கடிகாரத்தின் மூலம் அறிந்திருப்பீர்கள். இதே போன்று 26 எழுத்தைக் கொண்ட ஆங்கிலத்திலும் 8 என்ற சனி ஆதிக்கம் இருப்பதை நாம் அறிவோம். இதனால் சனி ஆதிக்கம் கொண்ட இந்த எண்ணிக்கைக்காரர்கள் இல்லாத உத்தியோகமோ, தொழிலோ கிடையாது. எல்லா இடத்திலும் இந்த ஆதிக்கக்காரர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு பெயர், தனது பிறந்த திகதிக்குப் பொருத்தமான 6 ஆகிய சுக்கிரனிலோ, 5 ஆகிய புதனிலோ அமைந்து விட்டால் வீடு, நிலம், வாகனம் போன்ற வசதிகளுடன் வாழ்வர்.

அப்படி அமையாவிட்டால் ஆரம்ப வாழ்க்கையில் சோதனையும், போராட்டமும் கெட்ட பெயரும் வந்து சேரும். பொதுவாக இவர்கள் நடுத்தரமான உயரத்துடனும், சிலர் குள்ளமாகவும் காட்சியளிப்பர். தைரியம் நிறைந்த இவர்கள் எதையும் துணிந்து செய்வர். கடவுள் நம்பிக்கை கொண்ட இவர்கள் சில தோல்விகளைச் சந்தித்தபின் தெய்வ நம்பிக்கையிழந்து போராடித்தான் வெற்றி பெற வேண்டும் என்று கூறுவர். சில மாதங்கள் சென்றபின் மீண்டும் தெய்வ பக்தியில் நம்பிக்கை வைப்பர். ஆத்மீக ஆராய்ச்சியில் இறங்கி மதம் என்ன கூறுகின்றது, தெய்வ வழிபாட்டால் என்ன இன்பத்தை அடைய முடியும் என்று ஆராய்வர். வயது ஏற ஏற பக்திமானாகி விடுவர். இவர்கள் 4 எண்காரர்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பர். தான் ஒரு காரியத்தில் இறங்கிவிட்டால் தயவுதாட்சண்யம் பார்க்காது தன் மனம் போனபடியே போவர். தான் எடுத்த காரியத்தைச் சாதிக்கும் வரை உடல் நலம் பேணாமல், சோர்வுறாமல் உழைப்பர்.

மற்றவர்கள் இவர்களைப் பற்றிக் கூறும்போது, இவர் ஒரு மாதிரியான ஆள், நல்லவர்தான். ஆனால் சில நேரங்களில் மூர்க்க குணம் வரும் என்று சொல்லுவார்கள். ஒருவருக்கு நல்லது செய்வதாகக் கூறினால், அந்த உதவி நேர்மையற்றதாக இருந்தாலும், வாக்குறுதியை நிறைவேற்றக் கடுமையாகப் பாடுபடுவர். சிக்கனத்தில் புத்தி செல்லும். ஆனால் செலவைக் கட்டுப்படுத்த முடியாது. இவர்களது பெயர் தனது பிறந்த திகதிக்குப் பொருத்தமானதாக அமைந்து விட்டால் இவர்களுக்கு ஏற்படுகின்ற சோதனையும் தடையும் நிவர்த்தியாகி நல்ல முன்னேற்றத்தைப் பெறுவர். நல்ல தொழில் அமைந்து ஏராளமான ஐசுவரியங்கள் இவர்களுக்குச் சேரும். தனது சொந்த முயற்சியால் முன்னேறும் இவர்கள், தனிமையில் வாழ ஆசைப்படுவர். நிலங்கள் சேர்க்கும் யோகமுடைய இவர்கள், வீடு, இரும்பு, நெருப்பு சம்பந்தமான தொழில் செய்வர். இவர்கள் முன்னேற்றத்தை வெளியில் காட்டிக்கொள்ள மாட்டார். பொதுவாக இந்த எண்ணிக்கைக்காரர்கள் பல்வேறு அனுபவங்களைப் பெற்ற போதிலும், கீழே குறிப்பிட்டபடி தனது பெயரைப் பொருத்தமானதாக அமைத்துக் கொண்டால் வாழ்க்கை வளம் பெறும்.

**தொழில்**

இந்த ஆதிக்கத்தில் பிறந்தவர்களுக்கு நெருப்பு, இரும்பு, வாகனம், பூமி போன்றவற்றாலும், காண்ட்ராக்ட், கமிஷன், ஏஜென்சி போன்றவற்றாலும் லாபத்தைப் பெறுவர். இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு, பிறந்த திகதிக்குப் பொருத்தமான பெயர் அமைந்திருந்தால் அல்லது அமைத்துக் கொண்டால் மேற்குறிப்பிட்ட தொழில்களிலெல்லாம் லாபத்தைப் பெறுவர்.

**நோய்**

இவர்களுக்கு மலச்சிக்கல், வாயு சம்பந்தமான நோய்கள், வயிற்றுக் கோளாறு, முதுகுவலி போன்ற நோய்கள் வரவிருப்பதால் தனது பெயரைப் பொருத்தமானதாக அமைத்துக் கொண்டு நோயிலிருந்து விடுபடலாம்.

**பெயர் அமைக்கும் முறை**

சூரியன், சனி போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவர்களுக்கு சூரிய ஆதிக்கமான 19, 37, 46, 64 போன்ற ஆதிக்கத்திலும், புதன் ஆதிக்கமான 14, 23, 32, 41, 59 போன்ற ஆதிக்கத்திலும், சுக்கிர ஆதிக்கமான 15, 24, 33, 42, 69 போன்ற ஆதிக்கத்திலும் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

***பின்பற்ற வேண்டியவை***
*யோகமான எண் : 1, 5, 6.*
*யோகமான திகதிகள் : 1, 10, 19, 28; 5, 14, 23; 6, 15, 24.*
*யோகமான நிறம் : மஞ்சள், நீலம்.*
*யோகமான மோதிரக்கல் : கனகபுஷ்பராகம், தங்கபுஷ்பராகம், நீலம்.*
*ஆகாத நிறம் : கறுப்பு, சிவப்பு.*
*ஆகாத திகதிகள் : 8, 17, 26.*

# மார்ட்டின் லூதர் (1483 - 1546)

## உலகை வியக்க வைத்தவர்கள்

ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையிலிருந்த குறைபாடுகளை நீக்குவதற்காக 16ஆம் நூற்றாண்டில் கிறிஸ்தவச் சமயச் சீர்திருத்த இயக்கத்தை தோற்றுவித்தவர் மார்ட்டின் லூதர். இவர் 1483ஆம் ஆண்டில் ஜெர்மனியிலுள்ள ஐஸ்லிபென் என்ற ஊரில் பிறந்தார். இவர் பல்கலைக்கழகத்தில் உயர் கல்வி கற்றார். தமது தந்தையின் வற்புறுத்தல் காரணமாகச் சிறிது காலம் சட்டம் பயின்றார். ஆனால், சட்டக் கல்வியை இவர் முடிக்கவில்லை. மாறாக, புனித அகஸ்டினியனைப் பின்பற்றும் கிறிஸ்தவத் துறவியாக ஆனார். இவர் 1512ஆம் ஆண்டில், 'டாக்டர்' பட்டம் பெற்றார். விரைவிலேயே அந்தப் பல்கலைக்கழகத்தில் ஆசிரியராகச் சேர்ந்தார்.

கத்தோலிக்கத் திருச்சபையினருக்கு எதிரான மனக்குறைகள் இவரிடம் படிப்படியாக வளர்ந்தன. இவர் 1510ஆம் ஆண்டில் ரோமாபுரி சென்றார். அங்கு ரோமானிய சமயக் குருமார்கள் கைக்கூலிக்கு எளிதில் ஆட்படுவதையும், சிற்றின்பக் கேளிக்கைகளில் ஈடுபடுவதையும் கண்டு அதிர்ச்சியடைந்தார். ஆனால், இதையெல்லாம் விட பாவமன்னிப்புச் சலுகைகளைப் பணத்திற்கு விலைபேசும் கயமைச் செயல்கள் தாம் இவர் தமது எதிர்ப்பு இயக்கத்தைத் தொடங்குவதற்கு உடனடித் தூண்டுதலாக அமைந்தன. (செய்த பாவத்திற்குப் பணத்தண்டம் செலுத்தி விட்டால் அந்தப் பாவம் மன்னிக்கப்பட்டு விட்டதாகத் திருச்சபை அறிவிப்பதுதான் இந்தப் பாவமன்னிப்பாகும். மரணத்திற்குப் பிறகு பாவம் போக்கப்படும் இடத்தில் ஆன்மாவைத் தூய்மைப்படுத்துவதற்காக பாவம் செய்தவர் கழிக்க வேண்டிய கால அளவுகளைக் கூடத் திருச்சபையினர் பணம் வாங்கிக் கொண்டு குறைத்தனர். லூதர் 1517ஆம் ஆண்டில் தமது புகழ் பெற்ற 'தொண்ணூற்றைந்து முற்கோள்கள்' (Ninety five Theses) என்னும் நெறிமுறையை விட்டன்பர்கு தேவாலயத்தின் கதவில் ஒட்டி வைத்தார். இதில், பணத்திற்காக இழிசெயல்களில் ஈடுபடுகின்ற திருச்சபையினரின் நடத்தையை வன்மையாகக் கண்டித்திருந்தார். குறிப்பாக, பணம் வாங்கிக் கொண்டு பாவமன்னிப்பு வழங்குவதைக் கடுமையாகச் சாடியிருந்தார். லூதர் தமது 'தொண்ணூற்றைந்து முற்கோள்'களின் படியொன்றை மெயின்ஸ் மேற்றிராணியாருக்கு அனுப்பி வைத்தார். அது மட்டுமின்றி, அந்த முற்கோள்களை அச்சிட்டு அந்த வட்டாரம் முழுவதிலும் வழங்கினார்.

திருச்சபைக்கு எதிரான லூதரினுடைய கண்டனத்தின் குறியிலக்கு விரைவாக விரிவடைந்தது. இவர் விரைவிலேயே போப் ஆண்டவரின் அதிகாரத்தையும் திருச்சபைப் பொது மன்றங்களின் அதிகாரத்தையும் எதிர்க்கலானார். 'விவிலியத்தை மட்டுமே நான் வழிகாட்டியாகக் கொள்பவன். வெற்று வாதங்களை நான் ஏற்க மாட்டேன்' என்று அவர் அறிவித்தார். எதிர்பார்த்தது போலவே, இந்தக் கருத்துக்கள் திருச்சபையினருக்கு ஆத்திரமூட்டின. திருச்சபை அதிகாரிகள் முன்பு விசாரணைக்காக முன்னிலையாகுமாறு லூதருக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டது.



பல்வேறு விசாரணைகள் நடந்தன. தம் சமய மறுப்புக் கருத்துகளுக்கு மன்னிப்புக் கேட்கும்படி லூதருக்குப் பலமுறை ஆணையிடப்பட்டது. இறுதியில், லூதருக்கு திருச்சபைக்கு முரணான கோட்பாடுடையவர் (heretic) என்றும், சட்ட விரோதி என்றும் அறிவிக்கப்பட்டது. அவருடைய எழுத்துகள் அனைத்துக்கும் தடை விதிக்கப்பட்டன.

இந்தத் தண்டனைக்கு லூதர் சாதாரண கம்பத்தில் கட்டி எரிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அவருடைய கொள்கைகள் ஜெர்மன் மக்களிடையே பரவலான ஆதரவைப் பெற்றிருந் தன. சில ஜெர்மனிய இளவரசர் கள்கூட அவரை ஆதரித்தனர். லூதர் ஓராண்டுக் காலம்வரை தலைமறைவாக இருந்தார். எனினும், ஜெர்மனியில் அவருக்கு ஆதரவு வலுப்பெற்றிருந்தமையால் கடுமையான தண்டனைகள் விதிப்பது தவிர்க்கப்பட்டது.

லூதர் ஏராளமாக எழுதினார். அவருடைய எழுத்துக்களில் பல மிகப் பெருமளவில் செல்வாக்குப் பெற்றன. விவிலியத்தை ஜெர்மன் மொழியில் மொழி பெயர்த்தது அவருடைய முக்கியப் பணிகளில் ஒன்றாகும். இவருடைய இந்த மொழி பெயர்ப்பு, திருச்சபையினையோ, அதன் பாதிரிமார்களையோ நம்பியிராமல் எழுதப் படிக்கத் தெரிந்த எவரும் இந்த வேத நூலைத்தானே படித்தறிந்து கொள்ள உதவியது. (லூதரின் மொழி பெயர்ப்பு மிக அழகிய நடையில் அமைந்திருந்தது. அதனால், ஜெர்மன் மொழியிலும் இலக்கியத்திலும்கூட இந்த மொழி பெயர்ப்பு அளப்பரிய செல்வாக்குப் பெற்றது.)

லூதரினுடைய இறைமையியலை முழுமையாக விரித்துரைக்க இந்த சுருங்கிய இடம் போதாது. கடவுள் பற்றினால் மட்டுமே பாவ மன்னிப்புப் பெற முடியும் என்னும் கோட்பாடு லூதரின் கொள்கையில் தலையாயதாகும். இந்தக் கொள்கையைப் புனித பாலின் எழுத்துகளிலிருந்து அவர் பெற்றார். "மனிதன் இயற்கையிலேயே பாவக் கடலில் மூழ்கியிருப்பவன். எனவே, நற்செயல்களைச் செய்வதால் மட்டுமே அவன் மீளா நரகிலிருந்து தப்பித்து விட முடியாது. வீடுபேறு என்பது, ஆழ்ந்த பக்தியினாலும், இறைவன் அருளினாலும் மட்டுமே கிட்டும்" என்று லூதர் நம்பினார். எனவே, பணம் பெற்றுக் கொண்டு பாவ மன்னிப்பைத் திருச்சபையினர் விற்பனை செய்வது முறையற்ற செயல் என்று அவர் கண்டித்தார். தனிப்பட்ட கிறிஸ்தவனுக்கும் இறைவனுக்குமிடையிலான இடையீட்டாளர் திருச்சபையினர் தாம் என்ற சம்பிரதாயக் கருத்து ஐயப்பாட்டுக்குரியது. லூதரின் கோட்பாடுகளை ஏற்றுக் கொள்வதாயின், ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் தோற்றத்திற்கென மூல காரணமே அடியோடு துடைத்தழிக்கப்பட்டு விட்டது எனலாம்.

திருச்சபையினரின் கடமையை எதிர்த்ததுடன், திருச்சபையினுடைய பல்வேறு நம்பிக்கைகளையும், நடைமுறைகளையுங் கூட லூதர் குறிப்பாகக் கண்டித்தார். எடுத்துக் காட்டாக, மரணத்திற்குப் பின்பு பாவம் போக்கப்படும் இடம் ஒன்று உண்டு என்பதை அவர் மறுத்தார்.

வியப்புக்கள் தொடரும்....

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை
-காதில பூ கந்தசாமி-

*வணக்கமுங்கோ வணக்கம்.*

வாக்குப் போடத் தகுதியுள்ள எல்லோருக்கும் வணக்கம். வாக்குக்கேட்டு வரும்போது நாங்க சொல்லும் வாக்குறுதியையெல்லாம் வசமா மறந்து போய் வாக்குப்போடும் வாக்காளப் பெருமக்களே! உங்க எல்லோருக்கும் வணக்கம்.

இப்படித்தானுங்கோ எலக்ஷனிலை நிக்கிறவை ஏகத்துக்கு வணக்கம் போடுவினம். பொலிரிக்ஸைத் தள்ளி வேற ஒரு சப்ஜெக்ட்டை எடுப்பமெண்டால் விடுறாங்களில்லையே. வேட்பாளராக நிக்கிறவங்கள் அடிக்கிற ஜோக்கைப் பார்க்கேக்க இவங்கள் மட்டும் தென் இந்திய சினிமாவில நடிச்சாங்கள் எண்டால் வடிவேல், விவேக்கெல்லாம் நஞ்சுகுடிச்சு சாகவேண்டியது தானுங்கோ. பொலிரிக்ஸ் எண்டாலே புத்திசாதுரியமான நடிப்புத்தான் எண்டது உங்களுக்கு ஏற்கனவே தெரிஞ்சிருக்கும். அதிலையும் சிறந்த நகைச்சுவை நடிகர் எண்டதுதானுங்கோ லேட்டஸ்ட் இன்போர்மேஸன். அதாக்கப்பட்டது என்ன தெரியுமோ? எதிர்க்கட்சியின்ர சார்பில போட்டி போடுகிறவர் விட்டிருக்கிற அறிக்கையில, தான் ஜனாதிபதியானாலும் இப்ப அதிகாரத்தில இருக்கிற ஜனாதிபதிக்கு, இலங்கையைப் பிரதிநிதித்துவப் படுத்தும் விதமான கௌரவமான பதவி கொடுத்து உலக விவகாரங்களைக் கவனிப்பாராம். இவர் இப்பிடியா சொல்லுறார் எண்டு போட்டு நீலக் கட்சி வேட்பாளர் போட்டாரே ஒரு போடு, அதுதானுங்கோ போடு. தான் ஜனாதிபதியானால் ரணில் விக்கிரமசிங்காவுக்கே ஒரு கௌரவமான பதவியைக் கொடுத்து வச்சுக்கொள்ளுவாராம். இப்ப சொல்லுங்கோ இவை ரெண்டுபேரும் என்ன நினைச்சுக் கொண்டு இப்புடியெல்லாம் அறிக்கை விடுகினம்.

அம்மையாருக்கே பதவி தாறன் எண்டு அவரும், அவருக்கே பதவி தாறன் எண்டு இவரும் உண்மையாகவே அடிமனசில இருந்துதான் சொல்லினமெண்டால், நான் தெரியாமத்தான் கேக்கிறன், என்னத்துக்கு போட்டி போடுறியள்? ஒரு ஆளுக்கு ஒரு ஆள் விட்டுக் கொடுக்க வேண்டியதுதானே. தேர்தலொண்டை நடத்திறதுக்கு எவ்வளவு பணவிரயம், அலைச்சல், அடிபுடி, அதுக்கு வேற கண்காணிப்பாளர்கள். இதெல்லாத்தையும் விட்டுப்போட்டு 'நீ இருந்து கொள். நான் எண்ட வேலையைப் பார்க்கிறன்' எண்டு அவரவர் தன்ர வேலையைப் பார்க்க வேண்டியது தானேங்கோ... சரி மறு வலத்தில யோசிச்சுப் பார்த்தாலும் இவையள் ரெண்டு பேரும் மேல் மட்டத்தில திக் பிரண்ட் எண்டால் அடிமட்ட மக்களோடை எதுக்காக கள்ளன் பொலிஸ் விளையாட்டுக் காட்டுகினம்? அதுமட்டுமில்லாம, ரணில் ஜனாதிபதியாகி சந்திரிகா அம்மையாருக்கு உயர் பதவி கொடுப்பாரெண்டால் புலிகள் ரணில் ஐயா மேல கொண்டிருக்கிற நம்பிக்கையும், எதிர்பார்ப்பும் நார் நாராப் பிஞ்சு போகாதோ. அம்மையார் வேண்டாமெண்டுட்டுத்தானே உவருக்கு சப்போர்ட் பண்ணுவினம். திரும்பவும் அம்மையாருக்குப் பதவியெண்டால் கணக்கு பிழைக்குமே.... அப்ப என்ன செய்யப் போகினம். ஏமாத்தினவர் எண்டாலும் ஏதோ பாவம் புண்ணியமெண்டிட்டு ரணில் ஐயா மேலதான் புலிகளின்ர ஓரப்பார்வை இருக்கு. அதுக்காக ஓரப்பார்வையால தன்னும் அவை இவரை நம்பினவைதானே எண்டு மேதாவித்தனமா யோசிச்சுப் போடாதேயுங்கோ. அவையின்ர அகராதியில ஜே.ஆர். ஒரு தடவை சரியில்லை, பிரேமதாசா ஒரு தடவை சரியில்லை, சந்திரிகா அம்மையார் ரெண்டு தடவை சரியில்லை, பிறகு ரணில் ஐயாவும் ஒரு தடவை சரியில்லை எண்டுதான் ரெக்கோடாகி இருக்கு. ஒருவருக்கு எல்லார் மேலயும் பிரச்சினை எண்டால், அந்த ஒருவர்தான் பிரச்சினைக்குரியவர் எண்டதுதான் உண்மை எண்ட மெதமெடிக்ஸ் சிஸ்டத்தோடை நிலைமையைப் பார்த்தால் அவையள் எல்லோரையும்விட புலிகள்தான் பல தடவையில சரியில்லாம இருந்திருக்கினம். இன்னமும் சரியில்லாமலேயே இருக்கினம். ஆக ரணில் ஐயாவை ரெண்டாவது தடவையும் சரியில்லாதவராக ஆக்கப் போகினமா? இல்லாட்டில் புதுசா சரியில்லாதவையின்ர லிஸ்டில மகிந்த ஐயாவின்ர பெயரை அட்டாச் பண்ணப் போகினமா? வாக்களிக்கப் போற சனத்துக்குத் தானுங்கோ வெளிச்சம்.

கௌரவத்துக்குரிய வாக்காளப் பெருமக்களே! ஒரு விசயத்தை மட்டும் நான் திரும்பவும் சொல்லுறன். போட்டியிடுற ரெண்டு பேரும் யார் வெண்டாலும் மற்றவருக்கு கௌரவமான உயர் பதவி தரப் போகினமெண்டால், நீங்கள் வாக்களிக்கிறதால மட்டும் எதிரெதிர் தரப்பாக இருக்கப் போறதில்லை. ஆகவே, அவையளை எதிரெதிர் தரப்பாக நினைச்சுக் கொண்டு நீங்கள் எதிராளியாகிடாதீங்கோ. புரியுதோ.... உவை ரெண்டு பேரும் அமெரிக்காவின்ர பொலிரிக்சை உல்டா பண்ணித்தான் உந்தக் கதையை உதார் விட்டிருக்கினம். அமெரிக்காவில இப்போது ஜனாதிபதியாக இருக்கிற ஜோர்ஜ் டபிள்யூ புஷ், முன்னாள் ஜனாதிபதியான கிளின்டனுக்கு அமெரிக்காவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விதமாக கௌரவப் பதவி கொடுத்ததோடு மட்டுமில்லாமல், ஜனாதிபதி எலக்ஷனில தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட எதிர்க்கட்சி வேட்பாளருக்கு உதவி ஜனாதிபதிப் பதவியும் கொடுத்தவர்.

அது அமெரிக்காவுக்கு அழகு. எங்கட நாட்டில் மனித உரிமையும் சரி, எழுத்துச் சுதந்திரமும் சரி, கருத்துச் சுதந்திரமும் சரி, அந்தா இந்தா எண்டு இழுத்துக் கொண்டிருக்கு. இந்த லட்சணத்தில அமெரிக்காவின்ர ஸ்டைலெல்லாம் எவ்வளவு தூரம் சரிவரும் எண்டதை நீங்கதானுங்கோ நிதானமா யோசிச்சு தெரிஞ்சு கொள்ள வேணும்.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(15.09.2005 தொடங்கி 21.09.2005 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

சிங்கம் - சூரியன், புதன், கன்னி - வியாழன், வெள்ளி, கேது, மீனம் - இராகு.
மேடம் - செவ்வாய், கர்க்கடகம் - சனி.
சந்திரன், மகரம், கும்பம், மீனம், மேடம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் பலிதம், உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும், பெரியோர் உதவி, கௌரவம், உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

**இடபம் :**
(கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.)
தொழில் கஷ்டம், வீண் துயர், இனசன நன்மை, தேக சுகக் கஷ்டம், உத்தியோகச் முயற்சி, மறைமுக எதிர்ப்பு, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 06.

**மிதுனம் :**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.)
தொழில் அலைச்சல், செலவு மிகுதி, மனச் சஞ்சலம், உறவினர் உதவி, உத்தியோக சிக்கல், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

**கர்க்கடகம் :**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.)
தொழில் கலக்கம், செலவு மிகுதி, பெரியோர் சகாயம், வெளியிட வாழ்க்கை, அன்னியர் சகவாசம், உத்தியோக பயம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 07.

**சிங்கம் :**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.)
தொழில் கஷ்டம், வீண் மனஸ்தாபம், பெரியோர் உதவி, குடும்பக் கஷ்டம், பண முடங்கல், உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 01.

**கன்னி :**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.)
தொழில் நன்மை, காரியானுகூலம், உயர்ந்த நிலை, இனசன மகிழ்ச்சி, குடும்ப நன்மை, உத்தியோக உயர்ச்சி, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

**துலாம் :**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.)
தொழில் அலைச்சல், பாரிய செலவு, மனக்கலக்கம், பிரயாண மிகுதி, தேகசுகக் கஷ்டம், உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.

**விருச்சிகம் :**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை.)
தொழில் மேன்மை, உயர்ந்த நிலை, பெரியோர் சகாயம், குடும்பப் பொறுப்பு, வெளியிட வாழ்க்கை, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம் :- 01.

**தனு :**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்.)
தொழில் சிக்கல், செலவு மிகுதி, வீண்துயர், மனக்குறையதிகம், குடும்பப் பொறுப்பு, எதிர்பாராச் செலவு, உத்தியோக சிக்கல், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

**மகரம் :**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.)
தொழில் நன்மை, செலவதிகம், பெரியோர் உதவி, குடும்ப மகிழ்ச்சி, சுபகாரிய நன்மை, உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 06.

**கும்பம் :**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.)
தொழில் மேன்மை, உயர்ந்த நிலை, செலவு மிகுதி, வெளியிட வாழ்க்கை, அன்னியர் நட்பு, உத்தியோக முயற்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 07.

**மீனம் :**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி.)
தொழில் கஷ்டம், மனக்கலக்கம், பிரயாண மிகுதி, இனசன நன்மை, குடும்பக் கஷ்டம், உத்தியோகச் சிக்கல், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 01.

Regd. as a News Paper at the G.P.O.(QD/81/NEWS/2004)


# இதய வீணை

தினமும்
மாலை 6.30 தொடக்கம்
இரவு 8.30 மணி வரை
கிழக்கு மாகாணம் 107.9, 104.5
வட மாகாணம் 92.2
கொழும்பு 105.6


அடக்கப்பட்ட மக்களின் உணர்வுகள் கருத்துக்களாய் கதைகளாய்... செய்திகளாய்... நமது காதுகளில்

நாடு முழுவதும் தென்றல் FM அலைவரிசையில்....

இதய வீணையின் பொதுத் தொடர்புகளுக்கு
இதய வீணை
த.பெ. இல - 1665
கொழும்பு.
தொலை பேசி :- 0773114208
Web - www.tirradio.com
E-Mail : idayaveenai@hotmail.com
info@tirradio.com

இலங்கையில் ஒலிபரப்பாகும்
இதயவீணை நிகழ்ச்சிகள் இப்பொழுது
ஐரோப்பிய நாடுகளில் வாழும்
எமது தாயக உறவுகளுக்காக
செய்மதி ஊடாகவும் ஒலிபரப்பப்படுகிறது

| | |
|---|---|
| Satellite : | HotBird - 6 |
| Localization : | 13° East |
| Frequency : | 11013 MHz |
| Polarity : | Horizontal |
| Symbol rate : | 27.500 Msb |
| FEC : | 3/4 |
| Transponder : | 133 |

## பெருஞ்சுவர்

உலகில் பெரிய சுவரெனப் பெயர்பெற்றது சீனப் பெருஞ் சுவர் என்பது அனைவருக்கும் தெரிந்தது. சீனப் பெருஞ் சுவர் பற்றி மேலும் சில தகவல்களை இங்கே தருகிறோம். இது 3460 கிலோ மீற்றர் (2195 மைல்) நீளமுடையது. இச் சுவரானது கி.மு 221-210 ஆண்டுகளில் குயின் ஷை குஹாங்டி எனும் சக்கரவர்த்தியால் கட்டப்பட்டது. இதன் தடிப்பு 9.8 மீற்றர். எதிரிகள் தமது நாட்டுக்குள் தரை வழியாக ஊடுருவி விடாமல் தடுப்பதற்காகவே, இச் சுவரை அம் மன்னர் கட்டினாராம். இச் சுவரின் உயரம் 12 மீற்றராகும். சுற்றுலா பயணிகள் அக்காலக் கட்டடத் திறமைகளைப் பார்த்து இரசிக்கக் கூடிய சுற்றுலாத் தளங்களும் இங்குள்ளனவாம். அக்காலக் கட்டடக்கலை இப்போது எங்கே......



## சாதனை

ஏதோ நீச்சல் தடாகம் என்று யோசிக்கிறீர்களா? இல்லை, உண்மையிலேயே பீட்ஸா என அழைக்கப்படும் உணவு. இவ்வளவு பெரிய பீட்ஸாவினை உலக சாதனைக்காகத் தயாரித்தவர்கள் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த வீன்ஸோர் மார்ரட் எனும் தம்பதிகளே. இப் பீட்ஸா 1.93 மீற்றர் (6 அடி 4 அங்குலம்) விட்டமுடையது. அத்துடன் 9.62 சென்ரி மீற்றர் தடிப்புடையது. 189.6 கிலோ கிராம் நிறையுடையது. இப் பீட்ஸாவை தயாரிக்க இவர் தனது தோட்டத்தில் விளைந்த பூசணிக்காய்களைப் பயன்படுத்தினாராம். சாதனைக்காக எதையெல்லாம் செய்கிறார்கள் பார்த்தீர்களா....



## வேகமாய்...

கேளிக்கை விளையாட்டுக்களுக்காகப் பயன்படுத்தப்படும் ஒருவித உபகரணமே இது. ஆனால் உலக சாதனைக்குரியது. இந்த ரோலர் மணிக்கு 193 கிலோ மீற்றர் (மணிக்கு 120 மைல்) வேகமாக செல்லக்கூடியதாகும். அத்துடன் 128 மீற்றர் உயரமும் 853 மீற்றர் நீளமுடைய பாதையையுமுடையதாம். இதனைத் தயாரிக்க 25 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவானதாம். விளையாட்டுக்காக இவ்வளவு பணத்தை நம் நாடு செலவழிக்குமா?


தேசிய சேமிப்பு வங்கியின் வெளியீடு



NSB
சுபர் வன்::பிப்டி

சண்டைகள் இல்லை. பாடல்கள் இல்லை. எதிரிகள் இல்லை. வீரர்கள் மட்டுமே.

150 நாட்களுக்கு மட்டுமே

மாதந்தம் 10 வீரர்களுக்கு ரூபா ஒரு இலட்சம் வீதம் பணப்பரிசுகள் !

அதிசிறந்த வீரருக்கு மாபெரும் சீட்டிழுப்பில் ரூபா 50 இலட்சம் பரிசு !
இன்னும் 30 வீரர்களுக்கு ரூபா ஒரு இலட்சம் வீதம் பரிசுகள் !

NSB சுபர் வன் ∴பிப்டி என்றால் என்ன?
தேசிய சேமிப்பு வங்கி அறிமுகப்படுத்தும் புதிய நிலையான வைப்புச் சான்றிதழ்கள்.

NSB சுபர் வன்∴பிப்டியை ரூபா.50,000/-க்கு கொள்வனவு செய்து
பெறுமதி மிக்க பேக் ஒன்றை இலவசமாகப் பெறலாம் !

நாடு முழுவதும் உள்ள தேசிய சேமிப்பு வங்கி கிளைகள்,
அஞ்சல் வங்கி கிளைகள் மற்றும் சேமிப்பு கடைகளில் NSB சுபர்
வன்∴பிப்டி சான்றிதழ்களைப் பெற முடியும்.

NSB SUPER 150
ஐந்து மாத அதிர்ஷ்டம்

முழுக்குடும்பத்தையும் பரவசப்படுத்தும்!

NSB


குழந்தைகள் சாப்பிடுவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஸ்மார்ட்டிஸ் எனப்படும் இனிப்புப் பதார்த்தமே இது. இதனையும் சாதனையாக்கி விட்டார் ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த கெத்தரீன் எனும் சாதனையாளர். ஜப்பானியர்கள் உணவருந்த பயன்படுத்தும் சொப் ஸ்டிக் மூலம் 3 நிமிடங்களில் 138 ஸ்மார்டிஸ்களைச் சாப்பிட்டு, உலக சாதனை ஒன்றைப் படைத்துள்ளார். இதற்கு முன் 112 ஸ்மார்ட்டிஸ் எனும் சாதனையையும் இவர் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. தமது சாதனையை தானே முறியடிப்பது மேலைத்தேய நாடுகளில் பொழுதுபோக்கு அம்சம் போல.....



## சாப்பிடுவோமா?